பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

பிப்ரவரி 2023



## பன்முகக் கலைஞராக ஒரு பாவலர் மணி

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

உதயம் 1972 – பிப்ரவரி 2023

614

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர் தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் அ. முத்துசாமி

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

**நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!**

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண்
+91 9952529619 (கட்செவி)
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

**இலங்கையில் இவ்விதழை தபாலில் பெற்றுக்கொள்ள அனுகவும் ...**

**+94 (0)771020030**

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த அன்புத் தமிழ் நெஞ்சங்களே! வணக்கம்!

நமது தமிழ்நெஞ்சம் சாதனைப்பயணத்தின் புதிய அங்கமாக வெண்பாப்பயணம் தம்பி வெண்பா வித்தகர் ஏடி வரதராசன் தலைமையில் தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன், பாவலர் தென்றல் கவி இவர்களின் துணையுடன் வெற்றிநடை போடுகிறது. இவர்களுக்கு நன்றியும் வாழ்த்துகளும்.

இன்று அதிக அளவில் புதியவர்கள் வெண்பா எழுதத் துணிந்திருக்கிறார்கள். இவர்களுக் கெல்லாம் சான்றிதழ்கள் வழங்கி வருவதோடு நில்லாமல் விருதுகளும் வழங்கி சிறப்பிக்கிறோம். அதன் முதல் கட்டமாக தஞ்சைத் தமிழ் மன்ற 4ஆம் ஆண்டுவிழா அரங்கில் வெண்பா அரசு விருது வழங்கி சிறப்பித்திருக்கிறோம். எங்களுக்கு கரம் கொடுத்து உதவிவரும் தஞ்சைத் தமிழ்மன்ற நிர்வாகிகளுக்கு நன்றி சொல்லி பெருமைப்படுகிறோம்.

நிலாமுற்றம் முகநூல் குழுமம் வழி போட்டிகள் நடாத்தி, போட்டியில் தேர்வான கவிதைகளை தமிழ்நெஞ்சம் இதழின் இணைப்பாகவும் வெளியிட்டு அதை தனிநூலாகவும் தஞ்சைத் தமிழ் மன்ற புரவலர்களின் உதவியுடன் வெளியிட்டு கவிஞர்களை அதிக அளவில் தமிழுலகிற்கு அறிமுகம் செய்து வருகிறோம். அந்த வகையில் நமக்கு உறுதுணையாக செயல்படும் பாவலர்மணி இராம வேல்முருகன் அவர்களுக்கும் நிலா முற்ற நிர்வாகிகளுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். புரவலர்களுக்கும் நன்றியும் வாழ்த்துகளும்.

இதழில் சிறுவர்கள் சங்கமம் பகுதியை புதிதாக அறிமுகப்படுத்தி அதன் பொறுப்பை ஏற்று செயல்படும் ஆச்சி அன்புச்செல்வி சுப்புராஜூ அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். வரும்காலங்களில் இலக்கிய உலகில் இன்னும் பல திட்டங்களால் நிறைவுபெற அவாவாகவுள்ளோம். வாசக எழுத்தாளர்களின் ஆக்கங்களைத் நூலாக்கிவரும் திட்டமும் தொடர்கிறது. இன்னும் நல்ல ஆலோசனைத் திட்டங்களிருப்பின் பகிர்ந்தால் செயலாக்க முனைவோம். எம்மோடு இணைந்துச்செயல்பட விரும்பும் தோழமைகளை அன்போடு வரவேற்கிறோம்.

புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகள். நன்றி!

என்றென்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

# தாயவள்

## பாவலர் வையவன்

பல்லவி :

தாயவள் என் தமிழவள் - எந்தத்
தாயினும் மிகத் தூயவள்!
ஆயவள் என் சேயவள் - அன்பில்
நானவள் நா னானவள்!

அனுபல்லவி :

நாடியில் என் நரம்பினில் - முறுக்
கேறியே உடன் வாழ்பவள்
வீரமும் தன் மானமும் - நெஞ்சில்
ஊறவே எனை ஆள்பவள்
(தாயவள்)

சரணம் : 1

உயிரவள் உள்ளின் ஊற்றவள் - உணர்
வானவள் உயர் வானவள்
குருதியில் கலந் தாளவள் - கொண்ட
கொள்கையில் நிறைந் தாளவள்
துயர்பல இங்கு நேரினும் - தன்
தூய்மையை இழக் காதவள்
அயர்வுறப் பகை சூழினும் - அண்டிப்
பிழைப்பதை அறி யாதவள்
(தாயவள்)

சரணம் : 2

பசிக்கவள் விருந் தானவள் - உற்ற
நோய்க்கவள் மருந் தானவள்
திசைக்கவள் கிழக் கானவள் - மற்ற
திசைதொழும் விளக் கானவள்
யாரவள் உறவானவள் -அள்ளி
யாவர்க்கும் தரு வாளவள்
யாரவள் பகை யானவர் - சுடும்
தீயென எரிப் பாளவள்
(தாயவள்)



சரணம்:3

வானவள் இந்த வையவள் - கடல்
காற்றவள் சுடும் கனலவள்
மூச்சவள் என் பேச்சவள் - மண்ணில்
மூத்தவள் எமைக் காத்தவள்
மானவள் இன மானவள் - குல
மானவள் குண மானவள்
தேனவள் திகட் டாதவள் - என்தன்
நாவிலே இனிப் பானவள்
(தாயவள்)

சரணம்:4

இனியவள் என்றும் இளையவள் - எங்கள்
கலையவள் எம்மின் கதியவள்
கனிந்தவள் மனம் துணிந்தவள் - எந்தக்
காலமும் எமை அணிந்தவள்
குறளவள் எங்கள் குரலவள் - தொல்
காப்பியம் சிலம் பானவள்
புறமவள் அன்பின் அகமவள் - எமைப்
புரந்திடும் போர் வாளவள்!
(தாயவள்)



கட்டளைக்கலித்துறை

## உழவு

அழகின் சிரிப்பால் அகிலம் நிறைந்த அருள்நிதியே
உழவின் சிறப்பால் உழைக்கும் உழவர் உயர்ந்திடவே
பழகும் விதத்தில் பயிரை வளர்த்துப் பயன்பெறவே
உழவும் செழிக்க உரிய மழையும் உவந்தளியே

பாவலர் தாழை ந இளவழகன் மணப்பாறை

## வள்ளுவர்

உள்ளம் நிறைந்தே உணர்வில் கலந்த திருக்குறளை
அள்ளிப் பருக அகத்தின் அழுக்கு மறைந்ததுவே
தெள்ளு தமிழில் திகட்டாச் சுவையாய்ப் பொதுமறையாய்
வள்ளுவர் தாமே வழங்க உலகே வியந்ததுவே!

பாவலர் ஓசூர் மணிமேகலை

## பெருநாளின் சிறப்பு

இற்றைத் திருநாள் நமக்குப் பிறையாய் இறங்கியது
பெற்ற கொடையை விடாமல் நுகர்வோம் பெருமிதமாய்
கற்ற பயிற்சிகள் நிற்க மனதிற் கவனமுடன்
சற்றும் தயங்கா முயற்சி எடுப்பது சூளுரைத்தே

“கவியன்பன்” கலாம், அதிராம்பட்டினம்

## சூரியப் பொங்கல்

கழனி நிறைந்து கவிதை படித்திடும் காட்சியினை
உழவோன் மகிழ்வாய் உணர்த்தும் அறுவடை உன்னதமே
கிழக்கில் உதித்துக் கிரணம் விரித்திடும் சூரியனை
முழங்கும் குலவை மொழிந்து வழிபடல் நற்றவமே!

குளோரிசக்தி, கரூர்.

# இனிமையான வாழ்க்கை



## Dr. ஃபஜிலா ஆசாத்

சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

நன்கு யோசித்து, யோசித்து தான் ஒரு செயலை செய்றேன். இருந்தாலும், செய்து முடித்தவுடனே ஏன் செய்தோம்... அப்படி செய்திருக்கக் கூடாதோ, இப்படி செய்திருக்கனு மோன்னு ஒரே குழப்பமாகவே இருக்குது. எங்காவது போனால், போகாமல் இருந்திருக்கனுமோன்னு தவிப்பா இருக்குது. போகாமல் இருந்தால், போய் இருந்திருக்கனுமோன்னு ஏக்கமா இருக்குது. ஓரொருத்தர் அனாயசமா விண் வெளிக்கே போகும்போது எனக்கு மட்டும் ஏன் இப்படி எதற்கெடுத்தாலும் குழப்பம் வருகிறது? குழப்பம் எழாத நல்ல முடிவு எடுப்பது எனக்கு சாத்தியமே இல்லையா?

இது உங்களுக்கு மட்டுமில்லை பலருக்கும் எழுகிற சகஜமான பிரச்னை தான். நீங்கள் சொல்வது போல் சிலர் விண்வெளிக்கே எந்தக் குழப்பமும் இல்லாமல்அனாயசமாகபோய்வந்தாலும், பலரை இது போன்ற குழப்பங்கள் தவிக்க விடுவதும் நிஜமே.

சிலர் தானே விரும்பி கடைக்குப் போய் சந்தோஷமாக சில பொருள்கள் வாங்கி வந்திருப்பாங்க. ஆனால் வீட்டுக்கு வந்தவுடன் மனசு மாறி, இப்படி ஒரே நேரத்தில் அதிகமான பொருள்கள் வாங்காமல் இருந்திருக்கலாமோ, விலை அதிகம் கொடுத்து வாங்கி விட்டோமோ, என்று பல மாதிரி குழப்பத்தில் தவித்து, குற்ற உணர்ச்சியில் மூழ்கிப் போவார்கள்.

சிலர் ரொம்ப நாள் ப்ளான் பண்ணி தன் பிள்ளையை கம்ப்யுட்டர் கோர்ஸ்லே சேர்த்திருப்பாங்க. ஆனால் சேர்த்தவுடனே கம்ப்யுட்டர் கோர்ஸ்லே சேர்த்திருக்க வேண்டாமோ... லாங்வேஜ் கோர்ஸ்லே சேர்த்திருக்கனுமோன்னு, தான் எடுத்த முடிவை, தானே பல முறை அலசி அது சரியா, தவறா, அது நல்ல முடிவுதானான்னு கலங்கிப் போவாங்க.

உண்மையில், நல்ல முடிவுகள் தேடிப் பிடிப்பதற்கில்லை. தெளிவான சிந்தனையில் அவை தானாக வரும். ஒரு

விசயத்தைப் பற்றி தெளிவான அறிவு இருக்கும்போது, நம்ம முடிவிலே நாம தெளிவா இருப்போம். அப்போ எந்த குழப்பமும் வராது. அப்படியே வந்தாலும், அதற்கு தெளிவான பதில் இருக்கும். அது எந்தக் குழப்பத்தையும் நிலை நிறுத்தாது.

பொதுவாக, நம்ம (conscious mind) 'உணர்வு மனதில், இயற்கையாக இருக்கிற (feed back mechanism) 'ஃபீட் பேக் மெக்கானிசம்' நாம என்ன செய்தாலும் அதுக்கு ஒரு கமென்ட் தந்து கிட்டே இருக்கும். முழு நேர வேலை செய்கிற ஒரு நிரந்தர கமென்டேட்டரா, அது செயல்படும். உதாரணமா, ஒரு கிரிக்கெட்ல அவங்க)'சிக்சர்' அடிச்சாலும் சரி, நோ-பால்' போட்டாலும் சரி, ஒரு கமென்ட்டேட்டர் எப்படி கமெண்ட் குடுத்துக்கிட்டே இருப்பாரோ, அது மாதிரி நம்மகிட்டே இருக்கற இந்த மெக்கானிசமும் எது செய்தாலும், நமக்கு கமெண்ட் குடுத்துக்கிட்டே இருக்கும்.

கடைக்குப் போய் விரும்பி சில பொருள் வாங்கினாலும், கம்ப்யூட்டர் கோர்ஸிலே பிள்ளையை சேர்த்தாலும், எங்காவது போனாலும், போகாவிட்டா லும், இப்படி செய்திருக்கனுமோ, அப்படி செய்திருக்கக் கூடாதோ என்ற கேள்வி களை எழுப்புவது இந்த 'ஃபீட் பேக் மெக்கானிசம்' தான்.

சுருக்கமாக சொன்னால் இது ஒரு வரை, என்ன செய்ய வேண்டும் என்பதை விட்டுவிட்டு என்ன செய்தோம் என்று அலச வைக்கும். நிகழ் காலத்தை விட்டு விட்டு கடந்த காலத்தையே சுற்றி வரச் செய்யும்.

இதுக்கு கொஞ்சம் இடம் கொடுத்தா லும் போதும், மனசை அப்படியே ஆக்ர மித்து, மன அழுத்தத்தை ஏற்படுத்தி, அந்த மனிதரின் சக்தியையெல்லாம் உறிஞ்சி, எண்ண சுழற்சியிலே தள்ளி விட்டுடும்.

அதே நேரம், எல்லா பிரச்னைக்கும் ஒரு தீர்வு இருப்பது போல, இந்த ஃபீட் பேக் மெக்கானிசத்தின் விளைவுகளுக்கும், ஒரு தீர்வு இருக்கிறது. அது நம்ம (value system) 'வேல்யு ஸிஸ்டத்தை' மேம்படுத்திக் கொள்வது தான் என்கிறது 'மன இயல்'.

சரி... வேல்யு ஸிஸ்டம் என்றால் என்ன? அதை நாம் எப்படி மேம்படுத்து வது?!

எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும், அறிந்தோ அறியாமலோ, நம்மிடம் ஒரு கருத்து இருக்கும். இது ஒருவருக்கு ஒருவர் மாறுபடும். இதைத் தான் வேல்யு ஸிஸ்டம்னு சொல்கிறது 'மன இயல்'.

பொது அறிவை பெருக்கிக் கொள் வது மூலமாகவும், இந்த உலகைப் பற்றிய பார்வையை விசாலமாக்கிக் கொள்வது மூலமாகவும் வேல்யு ஸிஸ்டத்தை மேம் படுத்தலாம்.

அதாவது, நாலு விஷயங்களை நாம் நல்ல முறையிலே தெரிஞ்சிக்கும்போது, நம் குறுகிய எண்ணம் மாறி, நம்முடைய பார்வை விரிவாகி விடும். அப்புறம் எதிலும் நமக்கு ஒரு தெளிவான சிந்தனை இருக்கும். எது செய்தாலும், இது சரியா, தவறா என்ற குழப்பம் வராது.

தவிர, நம்முடைய ஒவ்வொரு செயலும், மிகச் சரியாக, பெர்ஃபெக்டாக மட்டுமே இருக்கனும்னு நினைக்கும் போது எதுவும் தவறாகி விடக் கூடாது என்கிற அதீத கவனம், இதை சரியாக செய்தோமா, அதை சரியாக செய்தோமா என்ற மனக் குழப்பத்தை ஏற்படுத்தி விடுகிறது.

2+2=4 ன்னு ஒரு ஃபார்முலாவில் தான், வாழ்க்கைக் கணக்கு இருக்கனும்னு இல்லை. கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும் வாழ்க்கையின் சுவை குன்றா மல், மனநிம்மதி கெடாமல் பார்த்துக் கொள்வதில்தான் வாழ்க்கையின் சுவராஸ் யம் இருக்கிறது.

உண்மையில், வாழ்க்கையே (trial & error) "ட்ரயல் அன்ட் எர்ரர்" தான். சின்ன சின்ன தவறுகள் ஏற்படுவது இயல்பு என்ற எண்ணமும், அதை ஏற்றுக் கொள்கிற மனபக்குவமும், எதிலும் பாஸிட்டிவான அனுகுமுறையும், தெளிவான சிந்தனையை தரும் என்கிறது வாழ்வியல்.

"எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு" இது வள்ளுவர் சொன்னது. இதைத் தான் வாழ்வியலும் சொல்கிறது.

ஒரு செயலை செய்து விட்டு, அது தவறா இருக்குமோன்னு நினைக்கும் போது, அது தவறாகக் கூடிய சாத்தியங் களை நம் ஆழ் மனதே ஏற்படுத்தி விடும். பதறாத காரியம் சிதறாது என்பது போல், நாம் பதற்றம் இல்லாமல் நிதானமாய் தன்னம்பிக்கையாய் இருந்தாலே, நம் செயலும் சரியானதாக அமைந்து விடும்.

அதே நேரம், ***பதற்றமும், குழப்பமு மாக இருக்கும்போது, எதையுமே சரியாக செய்ய முடியாது. அது மட்டுமில்லை, அப்படியே சரியாக செய்தாலும், குழப்ப மான மனநிலை அதை சரி என்று ஏற்றுக் கொள்ள மறுக்கும்.***

நல்ல எண்ணமும், தன்னம்பிக்கை யுமா ஆரம்பிக்கிற எந்த செயலும், இடையிலே சிறு, சிறு தவறுகள் நடந்தா லும், அது நன்மையாகத்தான் முடியும்.

பல டையபடீஸ் காரர்களின் வாழ்க்கையிலே இனிப்பை கொண்டு வந்த "ஷாக்கரின் ஸ்வீட்னர்" எப்படி கண்டுபிடிக்க பட்டதுன்னு தெரியுமா?!

சாதாரணமாகவே நாம் சாப்பிடுற தற்கு முன்னாடி ஒன்றுக்கு மூன்று முறை கையைக் கழுவுவோம். இதுவே, ஒரு வேதியியல் ஆராய்ச்சியிலே இருக்கிறவர், எத்தனை முறை கையைக் கழுவனும். ஆனால் ஒரு முறை ரஷ்யாவை சேர்ந்த 'ஃபால் பெர்க்' என்ற வேதியியலாளர் (chemist), தன் ஆராய்ச்சியில் மும்முரமாக இருந்ததிலே, இரவு உணவு சாப்பிட மறந்து விடுகிறார். திடீரென்று பசி வயிற்றைக் கிள்ள மேஜையில் இருந்த பிரெட்டை அவசர அவசரமா கையைக் கூட கழுவாம எடுத்து சாப்பிட்டு விடுகிறார்.

வேதியியல் பொருட்களோடு, ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஒரு ஆராய்ச்சி யாளர் கையைக் கழுவாமல் சாப்பிட்டார் என்று நினைக்கும் போதே நமக்கு அதிர்ச்சியாக இருக்கிறதில்லையா. ஆனால், என்ன நடந்தது தெரியுமா? அவர் செய்த அந்த தவறுதான், ஒரு இனிய கண்டுபிடிப்புக்கு மூல காரணமா அமைந்தது.

அந்த தவறு ஏற்றுக் கொள்ளக் கூடியது இல்லையென்றாலும், அதன் விளைவு பெரும் பாராட்டைப் பெற்றதால் அது என்னவென்று மேலும் பார்ப்போம்.
அந்த ஆராய்ச்சியாளர் அர்த்த இராத்திரி யில், தன் ஆராய்ச்சிக்கிடையில், கையைக் கழுவாமல் 'ப்ரெட்டை' பசியோட சாப்பிட, அது ரொம்ப இனிப்பா இருக்குது. அவர் உடனே, ஒருவேளை அவசரத்திலே கேக்கை, ப்ரெட் என்று நினைத்து சாப்பிட்டு விட்டோமோன்னு தனக்குத் தானே சமாதானப் படுத்திக் கொண்டு ஒரு டவலை எடுத்து வாயைத் துடைக்கிறார். டவல் இனிக்கிறது. ஒன்றும் புரியாமலே

தண்ணீர் எடுத்துக் குடிக்கிறார். அதுவும் ஏதோ சர்பத் போல் அதீதமாய் இனிக்கிறது. சட்டென்று அவருக்கு அவர் கை பட்ட பொருள் எல்லாம் இனிக்கிறது என்பது புலப்படுகிறது.

இதுவே, வேறு யாராக இருந்தாலும், 'தொட்டதெல்லாம் பொன்னாகும் மிடாஸ்' மாதிரி, நாம் தொட்டதெல்லாம் இனிக்க ஆரம்பித்து விட்டதோ, என்று வியந்து போயிருப்பார்கள். ஆனால் அவருக்கு, தன் ஆராய்ச்சியில் உருவாகியுள்ள ஒரு கலவை தான், இப்படி இனிக்குது என்ற உண்மை பிடிபடுகிறது. வேறொன்றைக் கண்டுபிக்கும் முயற்சியில், தன்னையுமறியாமல் இந்த மாற்றுஇனிப்பைக்கண்டுபிடித்திருக்கிறோம். அதை தொட்ட கையைக் கழுவாமல் வாயில் வைக்க, நம் கண்டு பிடிப்பை நாமே அறிந்திருக்கிறோம் என்று அவருக்குப் புரிகிறது. அவர் மீண்டும் ஒரு முறை அந்தக் கலவையை வாயில் வைத்துப் பார்க்கிறார். பின், அதன் தன்மையையும், அதை எதற்குப் பயன்படுத்தலாம் என்பதையும் நன்கு ஊர்ஜிதப் படுத்திக் கொண்டு உலகிற்கு தன் கண்டு பிடிப்பை அறிவிக்கிறார்.

கேட்பதற்கு சுவாராஸ்யமாக இருக்கும் இந்தக் கதை இத்தோடு முடியவில்லை. எதேச்சையாக கண்டுபிடித்த அந்த சாக்கரினை சந்தைப் படுத்தி அவர் பெரும் கோடிஸ்வரரானது ஓர் அற்புத வரலாறு.

இப்போது புரிந்திருக்கும் உங்களுக்கு, "இப்படித்தான்னு எதுவுமே இல்லை. அறியாமல் நடக்கும் சில தவறு களும் கூட அற்புதம் படைக்கலாம். நல்லதை நினைத்து, நல்லது செய்தால் எல்லாம் நல்லபடியே முடியும்" என்பது. இனி இது சரியா, அது சரியா என்று குழம்பாமல், நல்ல முறையில் நம்பிக்கையோடு செயல்படுங்கள். வாழ்க்கை இனிப்பாகும். ■

# சொன்னபோது வந்ததில்லை வந்தபோது நொந்தநிலை

உயிரை குடிக்க
ஆசைக் கொண்டு
குருதியை புனலாய்
மாற்றிய நுளம்பே
உயிரைப் பறிக்கும்
அதிகார குணத்தை
கொடுத்தது யாரு
சொல்லிடு நீயே

உதிரத்தாலே உடல்
இயங்கும் நிலையில்
உட்காய்ச்சல் வந்து
சோர்வை கொடுக்க
உண்டியை கண்டு
வெறுக்கும் மனசு
ஓய்வைத் தேடி
ஏங்குது வயசு

உலக மக்கள்
நன்மை யடைய
உன்னை நானும்
கவியில் வடித்தேன்
என்னை அழிக்க
முடியா தென்று
எளிதில் நீயோ
சொன்னாய் (ஐந்) அறிவே

விரல் நுனியெல்லாம்
விட்டுவிட்டு நோகுது
விரைந்து குடித்தேன்
வில்லைகள் இரண்டு
உன்னை அழிக்க
உருப்படி மருந்தொன்று
கண்டுப் பிடிப்பது
எப்போது டெங்கு

நோயை பரப்பி
சாபம் பெற்று
வாழும் வாழ்க்கை
வேண்டாம் நுளம்பே
நச்சுவாயை
தெளித்து உன்னை
நாசமாக்கும் முன்னாலே
உலகை விட்டு ஓடிவிடு
உயிர்களை நலமாய் வாழவிடு

**கலைச்சுடர் காவத்தையூர்**
**பழனியாண்டி கனகராஜா**

# பாரியன்பன்

**கவிதைகள்**

நானும் அவளும்
ஒன்றாய்.
முந்தானையால்
நிலவை மூடுகிறாள்.
விடியும் வரை களையட்டும்
அவளின் வெட்கம்.

செடியில் மட்டுமல்ல
என்னவளின்
கூந்தலில் இருந்தும்
உதிர்கிறது பூக்கள்.

இந்த இரவையும்
வழக்கம்போல்
இருள்தான் சுமக்கிறது.

தன் உடம்பில் ஒளியை
வைத்துக்கொண்டு
இரவெல்லாம் வெளிச்சத்தை
தேடி அலைகிறது மின்மினிகள்…!

உன்னோடு
பேசிக் கொண்டிருக்கும்
நேரங்களில்
என் பேச்சுக்கு ஒருநாளும்
நான் செவிசாய்த்தவனில்லை.

எல்லாம் தெரியும்
என்றுரைத்த நீதான்; என்
உள்ளங்கையின்
ஸ்பரிசங்கள் அத்தனையும்
அபகரித்துக் கொண்டாய்.

நம் உரையாடல்களுக்கு
பிறகான மௌனத்தின்
அர்த்தங்கள் அனைத்தையும்
ஒளிவு மறைவின்றி நீயே
சொல்லிடு.

மரத்தின் பாரம்
வேர்களைத் தவிர
கிளைகளுக்குத் தெரிய
வாய்ப்பே இல்லை.

உன் வருகைக்குப் பின்னரே
புன்னகைப் பூக்களால்
நிறைகிறது என் இதயவனம்.

பிள்ளைகளின் இடைவிடாத
ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்;
அந்நேரம் தென்றலோடு
பேசிக்கொண்டிருக்கிறது
தென்னாங்கீற்று.

– பாரியன்பன்
குடியாத்தம் - 632602



# பழைய பேப்பர்

உடைந்த தொலைக்காட்சிப்
பெட்டியின் பிம்பத்தில்
மினுக்குகின்ற
விளம்பரத்தாள்கள்

பழைய டயர்களின்
மேலேறியமர்ந்திருக்கும்
உடைந்த நாற்கலிகள்

நெளிந்த பித்தளைக்குடத்தினுள்
நிறைந்திருக்கும் வெறுமை

தேவைகளை
நிறைத்த திருப்தியில்
தேவையற்றவைகள்

இவற்றோடு விம்புகின்றன
கசங்கிய புத்தகங்களும்
அதனூடே பிரசுரமாகாத
கவிதைத் தாள்களும்.

**ரகுநாத் வ**
மதுரை



# கூடா நட்பு

உன்னுள் உயிர் இருக்கும் வரை
உன் வாழ்வு இவ்வுலகில் நீண்டிருக்கும்
அதில் உண்மையான நட்பு கலந்திருந்தால்
உன் வாழ்வு உயிரோட்டமாக அமையும்
ஆனால் உன்னோடு கூடா நட்பு குடியிருந்தால்
உன் வாழ்வே நடைபிணமாகி விடும்
கூடா நட்பு எல்லோர் வாழ்விலும் வருவதுண்டு
அதனை கண்டறிந்து தட்டிக் கழித்தவரே
தன் வாழ்வில் ஜெயித்ததுண்டு
அறியாமை உலகில் நீயும்
அறிவுக் கொள் மனிதா
கூடா நட்பு கூவி அழைக்க முன்
பிரித்தறியும் பகுத்தறிவை வளர்த்துக்கொள்
அதுவே வாழ்வை காத்திடும் மனிதா

# மரம் சொல்லும் அறம்!

காற்றைக் கொண்டு சுவாசம் தந்தேன்
நீரைக்காத்து உன் தாகம் தனித்தேன்
உணவைத் தந்து பசியை போக்கினேன்
பூக்கள் பரப்பி மனதை மகிழ்வித்தேன்

உயர்ந்து வளர்ந்து மழையைத் தந்தேன்
உன் நோயை விரட்ட மூலிகையானேன்
இளைப்பாற உனக்கு நிழலை தந்தேன்
வேரால் இயற்கை இடரையும் தடுத்தேன்

கூட்டாய் வளர்ந்து வாழிடம் தந்தேன்
வனமாய் பெருத்து வெப்பம் குறைத்தேன்
ஏன்னுறுப்பை இழந்து உழைப்பை தந்தேன்
என்னையே தியாகித்து சூழல் சமநிலை காத்தேன்

இவையாவும் உனக்காய் நான் செய்தேன்
என்னாயுள் முழுதும் உன்னை வளர்த்தேன்
நீ வளர்ந்ததும் என்னை மறந்தாய்
என் சந்ததி வளர நீ மறுத்தாய்

நான் இல்லையேல் நீயும் இல்லை
இதை மறந்து வாழாதே மனிதா
மனம் விட்டு அறம் சொல்கிறேன்
மரம் வாழ்ந்தால் மனித உயிர்க்காக்கும்

**அகீலா ஜவுபர்**
ஏத்தாளை புத்தளம் இலங்கை.

# காமம்...

என் இதய கடிகாரம் நொடிக்கு நொடி
உன்னை நினைக்காமல் நகர்வதே இல்லை,

நொடிக்கு நொடி உன்னை நினைத்தபடி
கடந்தேனே பெண்ணே,

இப்படி ஓர் காதலை காட்டி நித்தம் நித்தம்
வியப்படைய செய்கிறாயே என்னை,

உன் காதலின் உச்சபட்ச ஆசை என்
மடியே என்பதை நான் உணர்ந்த தருணம்,

என் காமம் வியர்த்து சுருங்கியது,

என் காமத்துக்குள்ளும் காதல்
உணர்கிறேன் உன்னால் இப்போது,

அழுதாய், கோபப்பட்டாய்,
கொஞ்சினாய், குழாவினாய்,
உன்நாளின் ஒவ்வொரு அங்கங்களிலும்
என்னை திணித்தாய்,

அதன் காரணமாகவே நீ உன்னை
அறியாமல் நானாய் மாறினாய்,

உன் அம்மாவை திட்டினாய் உன்
அப்பாவிடம் இருந்து கொஞ்சம் விலகினாய்

அப்பாவின் தூரமும் அம்மாவின் பாசமும்
என்னை உன்னிடம் இன்னும்
நெருக்கமாக்கியது,

வண்ண வண்ண நிறம் கொண்டு
பிரதிபலித்த உறவுகளும் நட்புகளும்
கொஞ்சம் கொஞ்சமாய் சாயம் போக

வண்ணமும் அழகு இல்லா என் அழுக்கு
காதலை உணர்ந்தாய்,

கணவன் ஆக்கினாய், கடவுளாக்கினாய்,
மண் என்னை மனிதனாக்கினாய்,
பகுத்தறிவால் பக்குவப்பட்டாய்,

குறை குடத்தை உன் காதல் கொண்டு
நிரப்பி தழும்பாமல் பார்த்துக் கொண்டாய்,

அளக்க முடியா உன் காதலை எனக்காய்
அளந்து அளந்து செலவிட்டாய்,

உன் காமத்தின் மொத்த
வெளிபாட்டையும் என் கன்னத்தில்
முத்தத்தில் வெளியிட்டாய்,

உன்னை என் கண் மூலம் உணரத்
தொடங்கினாய்,

தாய் பருவம் கிட்டும் முன்னே எனக்குத்
தாயானாய்,நிகழ்காலம் மறந்து இறந்த
காலம் சென்று என் மடியில் சேய் ஆனாய்,

நீ நீண்ட நாள் கழித்து என்னை பார்க்கும்
தருவாயில் மாமா என்று ஆள் மனதில்
வைத்து வெளியிட்ட ஒரு சொட்டு
கண்ணீர் என் மீது விழுந்ததில் உன்
காதலின் ஆழ்துளை கிணற்று என்னை
புதைத்தாய்,

அழுகையை துடைத்து மெல்ல மெல்ல
சிரித்து புதைந்த என்னை மீண்டும்
மீட்டெடுத்தாய்,

எனக்காய் அலங்காரம் செய்தாய்,
எனக்காய் பொட்டு வைத்தாய்,
எனக்காய் புடவை கட்டினாய்,

உனக்காய் நான் வாங்கிய அந்த
முப்பது ரூபாய் பூவை உன் கூந்தலில்
சூடுகையில் உன் வாழ்வின் ஒட்டுமொத்த
வெட்கத்தையும் கசித்து உன் கருப்பு
கன்னம் சிவந்தாய்,

இயற்கையின் அத்துணை
அசைவுகளிலும் ஏதோ ஒரு சாயலில்
என்னை உணர்ந்தாய்,

உணர்ந்தாய் உன்னை அறியாமலே உன்
உள்ளத்தோடு என்னை புணர்ந்தாய்,

இன்று நீ கண் மூடினால் அந்த கருமை
களும் வெளிச்சமாய் தெரிகிறேன் நான்,

இல்லை இல்லை தெரிகிறது
நீ நான் நம் காதல்...

காதலுடன்

- ஆரூர். சிவ. மணிவேல்

# சமநிலை

என்னவென்றாலும் சொல்லிவிடுக,
எதற்கெடுத்தாலும் ஏசிவிடுக,
எதுவானாலும் ஏளனமாக பார்த்துவிடுக,
எதைக்கொண்டாலும் அடித்து விரட்டுக,
பொறுத்துக்கொள்வேன் நான்.
ஆனால், என்னை புரிந்துகொண்ட அளவிற்கு
என்னை நீங்கள் நேசித்துவிடவுமில்லை.
என்னை நீங்கள் பிரஸ்தாபித்துவிடவுமில்லை.
இதுதான் இங்குண்மை.
இதனால் தான் இத்தனையும் நிகழ்ந்தாயிற்று.

சத்தியமாகச் சொன்னவை எத்தனையோ
காற்றோடு கலந்தாயிற்று.
பத்திரமாய் பார்த்த பலவும்
இலவாக இங்காயிற்று.
இனி, இருந்தென்ன பயன்?
இழந்தென்ன பயன்?
இரவில் உலவும் மின்மினியாய்
தவழும் வாழ்க்கையினி எங்குபோய் முடியுமோ?

எந்நிலையும் எனைக் கடந்துப்போக
வந்தலையும் போதிலே
மனநிலையில் மாற்றங்கள் நிகழாமல்
சராசரியில் சமநிலை குலைவதேனோ?
ஒருவகையில் இதுதான் விதியோ
என்று எனைக் கேட்க நான் நாடுகிறேன்.
கேட்டும் விட்டேன்.

அது அதுவாகவிருப்பதே
அனைத்திற்கும் ஆகமொத்தத்தில் ஆனந்தமாம்
அதுபோல நாம் நாமாக வாழ்வதில்
என்னவெல்லாமோ கடக்க நேர்கிறது,
கல்லையும் கரைக்க முடிகிறது.
குளிரையும் குறைக்க துணிகிறது மனம்.

நேற்றுப் போல நிகழும்
காற்றுப் போல சுழலும்
ஊற்றுப் போல வழியும்
ஒரு உறவில் சாய்ந்தும்,
உறவை முத்தமிட்டும்,
உறவாய் அணைத்தும்,
உணர்ந்துகொள்கிறேன்
உயிரிருக்கும் வரைக்கும்
உடனிருப்பாய் என்று.




**முஷ்தாக் அஹ்மத்**
இலங்கை




## மாயவலை

**பர்ஸில் பணமில்லை
துழாவிப் பார்த்த
பாக்கெட்டுகள்
ஈயேனெனப் பல்லிளிக்கிறது
ஈருருளி
அடைத்தடைத்து
ஓடுகிறது
எரிபொருள் தொட்டியை
எட்டிப் பார்க்கிறேன்
சகாராப் பாலைவனம்
கண்ணுக்குத் தெரிகிறது
தரையில் வண்டியை
மல்லாக்கக் கிடத்தி
சிலுக்குக் கணக்காய்
குலுக்குக் குலுக்கி
வன்மத்தோடுதைக்கிறேன்
வண்டியின் கிக்கரை
வேகமாக உறுமிச்
செல்கிறது வண்டி
கடைசிமூச்சை
பிடித்தபடி
பதற்றத்தில் பூக்கின்றன
வியர்வை முத்துக்கள்
அலுவலக உயரதிகாரியிடமிருந்து
வந்த அலைபேசி
பாதரசத்தோடு
உயர்த்தியது
உயர் இரத்த அழுத்தத்தை
அமெரிக்க பனிப்புயலாக
உறைகிறது வாழ்க்கை
தீர்ந்து போன
நெட் டேட்டாவினால்
ஏற்பட்ட
பரிதவிப்புகள்**


– பா. சிவகுமார்

# உப்பில் கரைந்தவள்

## புல்லாங்குழலன்

திங்களூர் காவல் நிலையம். தன் முன்னே அமர்ந்திருந்த அறுபது வயது நிரம்பியவரிடம் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தார் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சந்தானம்.

எதிரே இருந்தவர் பரபரப்புடனும் பீதியுடனும் கண்களில் கண்ணீருடனும் காட்சியளித்தார்.

எங்கிருந்து வருகிறீர்கள் ஐயா நீங்கள். உங்கள் பெயர் என்ன

ராக்கப்பனூர் கிராமத்திலிருந்து. என் பெயர் ராசப்பன்.

ஏன் கலவரத்துடன் இருக்கிறீர்கள்

ஐயா, என் பெண்ணை நேற்றிலிருந்து காணவில்லை. எனக்கு பயமாயிருக்கிறது

உங்கள் பெண் எங்கு போனாள்?

என் பெண் சரித்திரா கரூரில் ஒரு கேபிள் டீவி ஆபிசில் வேலை பார்க்கிறாள். மூன்று நாள் அரசு விடுமுறையில் கிராமத்திற்கு வந்தாள். நேற்று காலையில் இங்கிருந்து கிளம்பிப் போனாள்.

நேற்று தானே போனாள், அதற்குள் எதற்கு பயப்படுகிறீர்கள்

அவள் எப்போதும் கரூர் போய்ச் சேர்ந்ததும் உடனடியாக எனக்கு போன் செய்து தான் சேர்ந்து விட்டதைச் சொல்வாள். நேற்று அப்படியில்லை. அதுமட்டுமல்ல, நான் போன் செய்து பார்த்தபோது அவள் போன் சுவிட்ச் ஆப் என்று வந்தது. நிறைய முறை முயன்ற போதும் அதுவே வந்தது.

கரூரில் அவள் ஆபிசில் விசாரித்தீர்களா?

அவர்கள் அவள் இன்னும் இங்கு வந்து சேரவில்லை என்றனர். அதனால் தான் பயப்படுகிறேன்.

பெண்ணுக்கு திருமணம் ஆகிவிட்டதா? என்ன வயதாகிறது.

அவளுக்கு 28 வயதாகிறது. இன்னும் திருமணமாகவில்லை. அவள் எனக்கு இப்போது திருமணம் வேண்டாம் என்று மறுத்ததால் நாங்களும் சற்று விட்டுப் பிடிப்போமே என்று இருந்தோம்.

கரூர் ஆபிசில் விசாரித்தீர்களா?

விசாரித்தோமே. அவள் அடக்கமான பெண். அவளுண்டு அவள் வேலையுண்டு என்றே இருப்பாள். எப்போது லீவு கிடைத்தாலும் உடனே அப்பாவையும் தன் வீட்டையும் நினைத்து இங்கிருந்து கிளம்பி விடுவாள் என்றே அவர்கள் பதில் தந்தனர்.

சரி. உங்கள் பெண்ணின் புகைப் படத்தையும் அவளைப்பற்றிய சிறு குறிப்பையும் எழுதிக் கொடுங்கள். நாங்கள் உரிய நடவடிக்கை எடுக்கிறோம். நீங்கள் பயமில்லாமல் செல்லுங்கள் என்ற இன்ஸ்பெக்டர் காவலரிடம் அவர் தரும்

அந்த இரண்டையும் வாங்கி வையுங்கள் என்றார்.

சந்தானம் கடமை வீரர். அவர் உடனடியாகத் தன் பணியைத் துவக்கினார்.

காவலர் சண்முகத்தை அழைத்து ஜீப் ரெடி பண்ணுங்கள். நாம் இப்போதே கரூர் போகிறோம். தலைமைக் காவலர் சங்கரனை அழைத்து நீங்கள் காவல் நிலையத்தை விட்டு எங்கும் செல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள் எனக் கூறினார்.

70 மைல் தொலைவிலுள்ள கரூரை நோக்கி ஜீப் புறப்பட்டது. ஜீப் டிரைவர் நல்ல அனுபவசாலி என்பதால் ஒன்றரை மணி நேரத்தில் அவர்கள் கரூரை அடைய முடிந்தது.

கரூரின் கேபிள் டீவி ஆபிசிற்கு சென்றதும் அங்கிருந்த மற்றவர்களிடம் விசாரணையைத் தொடங்கினார் சந்தானம். அங்கே எல்லோருமே ராசப்பன் சொன்னதையே உறுதி செய்து பதிலளித்தனர். சரித்திரவைப் பற்றி ஒரு துப்பும் கிடைக்கவில்லை

கரூர் பஸ் நிலையத்திலும் புகை வண்டி சந்திப்பிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் விசாரணை செய்ததில் சரித்திரா கரூருக்கே வந்து சேரவில்லை என்பதே ஊர்ஜிதமானது.

ராசப்பனிடமிருந்து வாங்கி வந்த சரித்திராவின் போன் நம்பர் அவரிடம் இருந்தது. அந்த செல் நம்பர் பற்றி சைபர் செல்லை தொடர்பு கொண்டு விவரங்கள் கேட்டார்.

அந்தப் போன் சுவிட்ச் ஆப் என்றே வந்ததாம். அதன் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை.என்றனர் அவர்கள்.

போன் டிராக் ரெக்கார்டு கிடைத்தால் யார் யாருக்கு போன் செய்யப்பட்டிருக்கிறது என்று அறியலாமே என்று முயன்றார்.

# எந்த மாற்றமும் வராது

எங்கள் கனவுகள் பற்றி யாருக்கு தெரியும்
எங்கள் ஆசைகள் பற்றி யாருக்கு தெரியும்
எங்கள் உணர்ச்சிகளை பற்றி யாருக்கு தெரியும்
இன்னும் நாங்கள் பழுக்காமல் இருக்கிறோம்
யாருக்கு தெரியும்....

எங்களை எந்த நல்ல நிகழ்வுகளில்
அனுமதிப்பதில்லை யாருக்கு தெரியும்
நாங்கள் எதாரத்தமாக வந்தாலும்
எங்கள் முன்னால் யாரும் செல்வதில்லை
இதை பற்றி யாருக்கு தெரியும்...

அப்படியே நாங்கள் துணிந்து எதிர்த்து
முடிவெடுத்தாலும் எங்களை சாதி மதம்
விடுவதில்ல என்பதை பற்றி யாருக்கு தெரியும்
எங்கள் வீட்டில்
எங்களுக்கு மரியாதை இல்லை
என்பதை பற்றி யாருக்கு தெரியும்....

இப்படியே எங்கள் வாழ்க்கை போகிறது
எங்களுக்கு பரிந்து பேச
எந்த அமைப்பும் இல்லை
மகளிர் அமைப்புகளும் இல்லை
இதை பற்றி யாருக்கு தெரியும்
போனால் வராது வாழ்க்கை
ஆம் எங்கள் இளமை உணர்ச்சிகள்
வற்றிப் போகிறது பற்றி யாருக்கு தெரியும்....

சுதந்திரம் அடைந்து
எழுபது ஆண்டுகள் ஆகியும்
பெண்களின் முன்னேற்றம்
மேடைகளில் மட்டுமே பேச்சாக உள்ளது
எங்களை வைத்து
அரசியல் நாடகம் மட்டுமே நடக்கிறது
ஆம் நாங்கள்
முதிர் கன்னிகள்
திருநங்கைகள்
கைம்பெண்கள்
எங்களின் வாழ்க்கையில்
எந்த மாற்றமும் வராது...

**கோ.ரா.ரவி.**
பட்டு நெசவாளர்.காஞ்சிபுரம்.

சைபர் செல்லில் அந்த போன் சிம் மாறவில்லை. ஆனால் போன் மாறி யிருக்கலாம் என்றனர் அவர்கள்

எங்கு போனாலும் ஒரு தடயமும் கிடைக்கவில்லை. சோர்ந்து போய் திரும்பி யது சந்தானத்தின் ஜீப்.

கரூர் சென்று வந்த இரண்டு நாட்கள் முடிந்த நிலையில், சந்தானம் வேறொரு வழக்கில் ஈடுபட்டிருந்த போது ஒரு நபர் அவரைத் தேடி வந்தார்.

அவர் ஒரு அதிர்ச்சியான செய்தி யைக் கொண்டு வந்திருந்தார். அவர் சரித்திராவின் உறவினராம். அவர் அலை பேசிக்கு ஒரு குறுஞ் செய்தி வந்திருந்தது. அதை சப் இன்ஸ்பெக்டர் சந்தானத்திடம் காண்பித்தார். சரித்திராவின் போனி லிருந்து வந்திருந்தது அது.

அதில் சரித்திரா எழுதியிருந்தது இது தான். நான் ஒருவரை யாருக்கும் தெரியாமல் திருமணம் செய்து கொண் டேன். இப்போது நான் சென்னையில் அவருடன் வாழ்கிறேன்.

நீங்கள்அந்தபோனில்பேசினீர்களா?

ஆமாம் சார். ஆனால் அது சுவிட்ச் ஆப் என்றே வந்தது. பல முறை முயன்றும் இரண்டு நாட்களாகியும் அது அதே பதிலையே சொன்னது. அதற்கு பிறகு தான் நான் உங்களைத் தேடி வந்துள்ளேன் என்றார் வந்தவர்.

உடனே சந்தானம் சைபர் செல் லுக்கு இதைப் பற்றிக் கூறி கண்டு பிடிக்கும் படி கேட்டுக் கொண்டார் அவர்களும் உடனடியாக பதில் தந்தனர். அது சரித்திராவின் போன் நம்பர் தான். அதை நாங்கள் சரி பார்த்து விட்டோம். ஆனால் அது சரித்திராவின் பழைய போன் அல்ல. ஏதோ ஒரு புதிய போன்.

சார் இதன் மேல் நடவடிக்கையாக அந்த போன் யாருடையது என்றறிய முடியுமா?

ஓ, அதையும் பார்த்து விட்டோம். அது மாயனூரில் உள்ள ரமேஷ் என்பவருடையது என்று தெரிந்துள்ளது. அந்த நம்பரை உங்களுக்கு அனுப்பி யிருக்கிறோம்

உடனடியாக அந்த நம்பருக்கு போன் செய்த சந்தானத்திற்கு போன் ஸ்விட்ச் ஆப் என்றே வந்தது. பல தடவை முயற்சித்தும் அதே பதிலே வந்தது போனிலிருந்து.

உடனே ஒரு காவலரை தன்னுடன் அழைத்துக் கொண்டு மாயனூருக்குச் சென்றார் சந்தானம். மாயனூரில் ரமேஷின் வீட்டிற்கு சென்ற போது அங்கே அவனுடைய பெற்றோர் மட்டுமே இருந்தனர். ரமேஷ் இங்கில்லை, அவன் ராணுவத்தில் பணிபுரிவதால் இப்போது உத்திரபிரதேச பார்டரில் பணியில் இருக்கிறான் என்றனர் அவர்கள்.

மீண்டும் சரித்திராவின் போனுக்கு வந்த அழைப்புகளை சரிபார்த்ததில் அதில் இரண்டு போன் நம்பர்கள் அடிக்கடி வந்திருப்பது சந்தானத்திற்கு சந்தேகத்தை உண்டுபண்ண அவர் அந்த எண்களுக்கு சொந்தக்காரர்கள் யாரென்று பார்க்கத் தொடங்கினார்.

அதில் ஒரு எண் ரமேஷின் தம்பி முகேஷினுடையது என்று தெரிந்ததும். மீண்டும் ரமேஷின் வீட்டிற்குச் சென்றார் சந்தானம் முகேசும் அந்த வீட்டில் இல்லை.

முகேசும் ஒரு வேலையாக வெளியூர் சென்றவன் இன்னும் வரவில்லை. அவன் போன் நெம்பரும் சுவிட்ச் ஆப் என்றே வருகிறது என்றனர் பெற்றோர்.

மற்றொரு நம்பரைத் தேடிய போது அது ரமேஷின் பக்கத்து வீட்டில் வசிக்கும் வினீத்தின் நம்பர் என்பதால் அவன்

வீட்டிற்கும் சென்று பார்த்தபோது அவன் வீட்டில் தான் இருந்தான்.

வினீத்தைக் கைது செய்து காவல் நிலையம் கொண்டு போய் அவனை விசாரிக்கும் முறையில் விசாரித்ததில் அவன் உண்மைகளை உதறினான்.

ரமேசும் சரித்திராவும் ஆறு வருடங்களாகக் காதலித்து வந்தனராம். சரித்திரா ரமேஷை விட 5 வருடங்கள் மூத்தவளாம்.

சென்ற வருடம் தான் இருவரும் ஒரு கோயிலில் வைத்து யாருக்கும் தெரியாமல் ரகசியத் திருமணமும் செய்து கொண்டனராம்.

தன் வீட்டிற்குத் தெரியாமல் சரித்திரா தன் தாலியைக் காண்பிக்காமல் மறைத்தே வந்தாளாம். இருவரும் கணவன் மனைவியாகவே நடந்து வந்தனராம்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு ரமேஷின் பெற்றோர்கள் அவனுக்கு பெண் பார்க்கத் தொடங்கினார்களாம். இதை அறிந்த சரித்திரா அவனிடம் தன்னைக் கல்யாணம் செய்து கொண்டதை ரமேஷின் பெற்றோரிடம் சொல்லச் சொல்லி ரமேஷிடம் வற்புறுத்தத் தொடங்கினாளாம்.

பலமுறை போனில் பேசிய போதெல்லாம் ரமேஷ் அதை சட்டை செய்யாதவாறே பேசினானாம். என் வீட்டில் என்னை வற்புறுத்துகிறார்கள்.

# மூப்பேட்டில் ஏறாத பூப்பெயர்கள்!

## வெற்றிப்பேரொளி

நான்மாரன் நீதேவி வாபறப்போம் தேரில்!
நாளறியா நீள்கனவுப் பூப்பறிப்போம் வேரில்!
தேன்தாரை வான்பொழிய நாம்நனைவோம் கூடி!
சேணமிலா ஓர்புரவி கான்புகுமே தேடி!
ஊன்கூரை வீடெடுத்து நாம்வசிக்கும் போதில்
ஊராரின் பேச்சரவம் ஓதிவரும் காதில்!
நோன்பேற்பார் பார்நம்மைப் போல்வாழ்தல் வேண்டி!
நூறுநூறு நாள்தாண்டி தாம்வனைவார் தோண்டி!

தீப்பூக்கள் தாம்பூக்கும் சீர்மேனித் தோட்டம்!
தேடிநாளும் பூசிக்கும் தேவாரக் கோட்டம்!
நாப்பூட்டித் தீமூட்டி தான்சமைக்கும் பள்ளி!
நாண்பூட்டும் வேக்காட்டில் வீழ்ந்திறக்கும் வெள்ளி!
மூப்பேட்டில் ஏறாத காப்பீடு கொண்டோம்!
மூன்றுகாலம் தாம்பொய்யாய்ப் போனகதை கண்டோம்!
தோப்பான போதும்நாம் தாய்மரமாய் நின்றோம்!
சூடேற்றும் பேய்க்காமம் போய்தோற்க வென்றோம்!

நான் என்ன செய்வது. திருமணம் ஒரு பக்கம் இருக்கட்டும் நாம் ஒரு பக்கம் நம் வாழ்வையும் நடத்துவோம் என்றானாம் அவன்.

சரித்திராவுக்கு பயங்கரக் கோபம் வந்ததாம். அவள் ரமேசுக்கு பார்த்தி ருக்கும் பெண்ணின் வீட்டிற்கு நேரிடை யாகச் சென்று அவளிடமும் அவள் வீட்டாரிடமும் தனக்கும் ரமேசுக்கும் திருமணம் நடந்ததைக் கூறி தான் கழுத்தில் தரித்திரிந்த தாலியையும் காண்பித்தாளாம்.

இந்த நிகழ்ச்சியினால் மிகவும் கோபம் கொண்டனராம் ரமேசும் அவனு டைய பெற்றோரும்.

இருந்தாலும் ரமேஷ் அவளிடம் அனுசரணையாகவே பேசிக் கொண்டிருந் தானாம்.

மூன்று மாத லீவில் மாயனூர் வந்த ரமேஷ் சரித்திராவுக்குப் போன் செய்து நாம் வாழப் போகிற, நான் புதிதாய் கட்டிக் கொண்டிருக்கிற வீட்டை உனக்குக் காண்பிக்கிறேன். புறப்பட்டு வா என்றானாம்.

இது வரை குறுக்கிடாது கேட்டுக் கொண்டிருந்த சந்தானம் வினீத்திடம் விசாரணையைத் தொடங்கினார்

மூன்று நாட்கள் விடுமுறை முடிந்து பெற்றோர் வீட்டில் இருந்து சரித்திரா வந்தாளா

ஆம். அவள் மாயனூர் வரும் நேரம் அறிந்து ரமேஷ், முகேஷ் மற்றும் நானும் ஒரு காரில் பஸ் நிலையத்தில் காத்திருந்தோம்.

அவள் வந்ததும் அவளை காரில் ஏற்றிக் கொண்டு புதிய கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கும் வீட்டிற்குப் புறப்பட்டோம்.

அவள் காரின் பின்பக்கம் திரும்பி முகேஷையும் என்னையும் பார்த்து நீங்கள்கூட எனக்கு ஆதரவாய் பேச மாட்டீர்களா? உங்கள் ரமேஷ் என்னை வஞ்சிப்பது சரிதானா என்று கோபத்தில் கேட்டாள்.

ரமேஷ் ஒன்றும் பேசவில்லையா?

பேசினான். நான் திருமணம் செய்யும் பெண்ணோடு வாழும் வாழ்க்கை ஒரு பக்கம் என்றால் இன்னொரு பக்கம் உன்னோடும் அன்போடு குடும்பம் நடத்துவேன். இது உறுதி என்றான் அவன்

செம கோபத்தில் சரித்திரா, உங்களோடு நான் தான் வாழ்வேன். இன்னொருத்தியுடன் நீங்கள் வாழ நான் அனுமதிக்கவே மாட்டேன். என்று கோபத்தில்கத்தினாள்.இருவருக்கும்பயங்கர சண்டையேற்பட்டது. ஒரு சந்தர்ப்பத்தில் ரமேஷ் உடனே தான் கொண்டு வந்திருந்த நைலான் கயிறை சரித்திராவின் கழுத்தில் சுற்றி இறுக்கினான். நானும் சுகேசும் அவள் கால்களையும் கைகளையும் திமிராமல் பிடித்துக் கொண்டோம். சற்று நேரத்தில் அவள் மூர்ச்சையுற்றாள்.

அவள் இறந்து விட்டாளா?

அப்போது இறக்கவில்லை அவள்.

அவளை என்ன செய்தீர்கள்.

என் வீடு ரமேஷ் வீட்டிற்கு சற்று தள்ளி அந்தப் பக்கத்தின் கடைசியில் இருந்தது. அதற்கு அடுத்தடுத்து புல் புதர்களே இருந்தன.

உண்மையைத் தானே சொல்கிறாய்.

ஆமாம் சார். நான் எதையும் மறைக்காமல் தான் சொல்கிறேன்.

அந்த இடத்தில் இருந்த குழியில் அவளைத் தள்ளினோம்.

அந்தக் குழி அப்போது தான் வெட்டப்பட்டதா? அதை வெட்டியவர்கள் யார்?

அந்தக் குழியை 5 நாட்களுக்கு முன்பே ரமேஷ் வெட்டி வைத்திருந்தான்.

உயிர் இருந்ததா

தெரியவில்லை ஆனால் உடலில் அசைவு ஏதும் இல்லை.

மண்ணைப்போட்டுமூடிவிட்டீர்களா?

அதற்கு முன்பாக உப்பை அந்தக் குழி அடியில் நன்றாகத் தூவினோம்.பிறகு தான் மண்ணைத் தள்ளி மூடினோம்.

முகேஷ் எங்கே போனான். அவன் இங்கிருந்தால் அகப்பட்டுக் கொள்வான் என்ற பயத்தில் அவனை உத்திர பிரதேசத்திலுள்ள தன் குவார்ட்டர்சில் இருக்கச் சொல்லி அனுப்பினான். அவன் போனையும் சுவிட்ச் ஆப்பில் போட்டான்.

நீ ஏன் எங்கும் போகவில்லை-

என்னைத் தேடி நீங்கள் வருவீர்கள் என நான் கொஞ்சமும் நினைக்கவில்லை சார். அதனால் தான்.

குழியைப் பார்வையிட்டபோது அதில் சரித்திராவின் எலும்புக் கூடுகளே பார்வைக்கு கிடைத்தன. எல்லாம் உப்பின் திருப்பணி

ஒரு வாரமாக அலையாய் அலைந்து இந்த வழக்கை முடித்த திருப்தியில் இருந்தார் சந்தானம்.

குற்றவாளிகள் மூவரும் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டனர். ■

# ரகசிய காவலன்

ஒவ்வொரு உயிரிலும்
நகமும் சதையுமாய்
ஒட்டிக்கொண்டிருக்கும்
ரகசிய காவலன்

பிறப்பிலிருந்து பயணிக்கும்
கற்பனையும் தாண்டிய
கருப்பு கவிதை

அவனின் ஒரு நொடிப்பயணத்தில்
சந்தோசத்தை துக்கமாக்குவான்.
ஒவ்வொரு நொடியையும்
கண்ணீர் சிந்த வைப்பான்..

நல்லது கெட்டது அறியாமல்
ஏழை பணக்காரன் பேதம் இன்றி
ஜாதி என்னும் பிரிவினை பாராமல்
நீதி கூறுவான் நீதிபதியாக...

அவன் வருகை கண்டு
அகாலம் என்றும்
இயற்கை என்றும்
மரணதேவன் அவனுக்கு
மறு பெயர் வைத்தாலும்
உங்களை பற்றிக் கொள்ள
அவன் வந்துக் கொண்டே இருப்பான்..

வெறி கொண்டு மானிடனை புசிக்கும்
உங்களைப்போன்றோருக்கு
என்றும் மரணத்தை
வென்று விடவே முடியாது..

உங்கள் கதறலுக்கு
அவன் கரையவும் மாட்டான்
உங்கள் கண்ணீருக்கு
அவன் கவலை கொள்ளவும் மாட்டான்

இன்றோ நாளையோ
நாளை மறுதினமோ
என்றோ ஒரு தினம்
அவன் உங்களை அடைவது
மட்டும் என்றும் உண்மை..

**நுஸ்ஹா அஸீம்**
ஓட்டமாவடி, இலங்கை


## வாசகர் வாழ்த்து

வேய்ங்குழலின் இன்னிசையில் நாமும்
விரும்பிமனம் வசமிழத்தல் போலும்
தாய்த்தமிழின் ஏடெடுத்துப் பாடும்
தமிழ்நெஞ்சம் இதழ்மணக்கும் பாரும்!
வாய்த்திருக்கும் ஐம்பதுகள் ஆண்டும்
வளர்ந்திருக்கும் வரலாற்றின் சீரும்
தோய்ந்தெழுந்த நமதன்பில் கூடி
தூயர்அமின் புகழுழைப்பை வாழ்த்தும்!

வற்றா அன்புடன்,

**வெற்றிப்பேரொளி**

# அவளொரு ராஜ்யம்தான்!



கார்முகிற் கூந்தற் கட்டு
கண்கவர் நெற்றித் திட்டு
வாளுரு வளைவைத் தொட்டு
வானவில் புருவ வெட்டு!

நீலமாய்க் கயல் மீன் கண்கள்
நீளமாய் ஊசி நாசி
பலாச்சுளைச் செவிகள் வெண்மை
பளிச்சிடும் பளிங்குப் பற்கள்!

செவ்விதழ் கனிகள் கொவ்வை
செய்யுளில் வடிப்பால் அவ்வை!
செக்கர்வான் சிவந்த கன்னம்
செந்தா மரைப்பூ வண்ணம்!

தங்கமாய்ப் பொங்கும் நெஞ்சம்
தசைப்புலம் கலசம் மஞ்சம்
திங்களை விஞ்சும் துஞ்சும்
எங்கிலும் அழகே கொஞ்சும்!

நடையணி கண்டு அன்னம்
தன்னடை வெட்கும் இன்னும்
படையணி பிந்தும் எண்ணம்
தடையிடக் கால்கள் பின்னும்!

இத்தகை இனிமை கொண்டும்
இயல்புகள் இழிவுற்றென்றால்...
அழகெல்லாம் விழலாய் மாறும்
அவலமே மலமாய் நாறும்!

சிற்றிடைக் கட்டில் ஆடைப்
பட்டெழில் மூடும் போதும்
தேன்வதைத் திட்டில் தேனைத்
தேரைகள் மட்டும் தேடும்!

பண்புகள் நீசமுற்று
பரவணி நாசமுற்றால்...
அரம்பையர் பண்ணையின் கண்
அவள்வெறும் பூஜ்ஜியம்தான்!

அழகெழும் நங்கையாக,
அன்பெழும் தங்கையாக,
பண்பொளிர் மங்கையாகப்
பத்தினி யாவாளாயின்...

அச்சமும் மடமும் நாணம்
அடங்கியும் பயிர்ப்பும் பெற்றால்...
அரிவையர் பண்ணையின்கண்
அவளொரு ராஜ்ஜியம்தான்!

**கலாபூஷணம் ஏறாவூர் தாஹிர்**

# சீரியல் கதை சொல்லி...

## லைலா அக்ஷியா

மனநல ஆரோக்கியக் கல்வி உளவியலாளர்

“அதுக்கு பிறகு அந்த லிஃப்ட்டில் போய் வெளியில எடுத்துட்டாங்களா..? டீச்சர்”

அதை எப்படி சொல்ல முடியும்? இது சீரியல் ஆச்சே. அத்தோடு ‘தொடரும்...’ என்று அந்த மாணவர்களின் தொடர் கதைக்கு தற்காலிக முற்றுப்புள்ளி வைத்து விட்டேன். பாடத்தைத் தொடங்கினேன். அடடா கண்களில் என்ன ஒரு உற்சாகம்? மனதில் எவ்வளவு சந்தோஷம்? அடுத்த நாள் காலையில் நான் வரும் வரை என்ன ஒரு தேடல்?ஆசை?

தினமும் என் முத்தத்தை வாங்காத நெற்றிகள் இல்லை. அணைப்புகளில்லாத நாட்களில்லை. அவர்களுக்கு நான் முதலில் ஆசிரியர் என்பதைவிட, கதை சொல்லும் நாயகி. அவர்களே கதாநாயகர்களாகவும் கதாநாயகிகளாகவும் மனதில் மாற்றம் செய்யும் ஒரு வித்தை இயக்குனர்.

வீட்டில் உள்ளோர் சீரியல்களில் இன்பம் கண்டிருக்கும் போது இவர்களுக் கான ஒரு வகை சீரியலோடு நான் தொடர்பு பட்டிருக்கின்றேன்.

‘டீச்சர்.. ஸ்கூலுக்கு ஸ்கூலுக்கு போகணும் உங்கள பாக்கணும்னு அடம் பிடிக்கிறா..’’ என்று சனிக்கிழமைகளில் அவ்வப்போது வரும் தொலைபேசிகளில் ‘பரவாயில்லை நல்லபடியாகத்தான் செய் திருக்கிறேன்..’ என்று தொழிலில் திருப்தி பட்டு கொள்கிறேன்.

இப்படி நடந்திருக்குமா? அப்படி நடந்திருக்குமா? அடடா இவ்வாறு செய் திருந்தால் அவர்கள் தப்பித்து இருப்பார்களே.. இதுபோன்று செய்வது பிழைதானே.. என்றெல் லாம் அதே சீரியல் பாணியில் இவர்கள் மனதை உற்சாகப்படுத்த எனக்கு தேவையானது எல்லாம் ஒரே ஒரு கதை. ஒரு கரு. திங்கள் ஒரு கதை தொடங்குகிறது. வெள்ளி தான் முற்றுப்பெறும். ஐந்து நாளைக்கு ஓட்டுவேன். ஐந்தாவது நாள் ஒரு முடிவு இருக்கும். ஒரு மோட்டிவேஷன் இருக்கும். ஒரு மாற்றம் இருக்கும்.

இப்பொழுதெல்லாம் கதை சொல்ல பெற்றோர்களுக்கு எங்கே நேரம் இருக்கிறது? கூட்டங்களில் கூப்பிட்டு தனியாக கூட அறிவுறுத்துவேன். பாட்டி காலத்து கதைகளை “ஒரே ஒரு ஊருல..” என்று நாமும் ஒரு பார்ட்டியாக ஆவதில் நமது நேரம், சுய கௌரவம் பார்க்கிறது. எங்க டீச்சர் அதுக்கு நேரம்? வேலை முடித்து தூங்க வைப்பதற்கு போதுமாகிவிடுகிறது அத்தோடு கார்ட்டூன், யூடியூப் கதை, வீடியோ என்று இவர்கள் பார்க்காத கதை இல்லை.

ஓ. அப்படியா செய்தி? நானும் ஒரு கண் பார்க்கிறேன் என யூடியூபை கிளுக்கி விடுகிறேன்.

அந்தக் கதைகளில் நான் பெற்ற எல்லாம் டைட்டில்கள் சில. ‘மந்திர தட்டு’, ‘சூனியக்காரி மருமகள்’, ‘ஆற்றோர பூதம்’,‘கிணற்று பேய்’, ‘தங்க முடி மாமியார்’, ‘மந்திர ரொட்டி’....

என்ன ஒரு அநியாயம்? பிள்ளை களை ஒரு சம்பந்தமே இல்லாத மாயாஜால பிரம்மை உலகத்திற்கு அழைத்துச் சென்று, அவர்களை மனரீதி யாக தாக்கமடைய வைக்கிறது பணத் தாசை பிடித்த டிஜிட்டல் தளங்கள்.

இவ்வாறு கற்பனைக்கெட்டாத கதைகளில் மூழ்கிப் போய் கனவுலகின் கதாபாத்திரமாக அவ்வப்போது மாறி கூச்சலிடும் அந்த மாணவனைப் பார்க்கும் போது தலையில் அடித்துக் கொள்ள தோணும் .

நீங்க சொன்ன கதையை இவளுடைய தந்தை வந்த பிறகு அவருக்குக் கூற, யார் உனக்கு இப்படி சொல்லித் தந்தது என்று கேட்டு ரொம்ப சந்தோஷப்பட்டார். பிறகு தான் எனக்கும் அதே கதையை அவர் சொல்லித் தந்தார். யூசுப் நபியின் வரலாறு இப்படி இருக்குது என்று.. ''உங்களுக்கு நன்றி ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது..'' என்று உளமகிழ்வை வெளிப்படையாக பரிமாறிக் கொள்ளும் தாய்மார்களைக் கண்டு வருகிறேன்.

பெற்றோர்களே நீங்களே கதை சொல்லியாக மாறிவிடுங்கள். ஒரு நாளைக்கு மூன்று நிமிடம் போதும். அடம் பிடிக்கும் குழந்தைகள், நடத்தை மாற்ற வேண்டிய குழந்தைகள், சிந்தனை சக்தியில் குறைபாடுள்ள குழந்தைகள், எதிர்காலத்தில்தைரியமாகவளரவேண்டிய எல்லாக் குழந்தைகளுக்கும் இதுவே ஒரு சிறந்த கருவி. பிள்ளைகள் கதைகளில் நிறைய படிக்கிறார்கள். 'நீ.. செய்' என்பதையும், 'வேண்டாம்' என்பதையும் ஒரு கதை மூலமாக கூறி விடலாம். அப்படியே அதை பிடித்துக் கொள்வார்கள். கதைகள் கூறுவதன் மூலம் அவர்களது கற்பனைத் திறன், எண்ணம் பறந்து செல்கிறது. கட்புல தொடர்பு மூலம் தனது மொழியாற்றலை வளர்த்துக் கொள்ளும் குழந்தைக்குதான் பாதுகாக்கப்படுகிறோம் என்ற ஒரு உணர்வையும், ஆளுமை, தைரியம், கூர்ந்து கவனிக்கும் திறன், மாற்றி யோசித்தல், முடிவு எடுக்கும் ஆற்றல், கேள்விகள் எழுப்பக்கூடிய சந்தர்ப்பம், தலைமைத்துவப் பண்புகளையும், உணர்வுப் பரிமாற்றல்களையும் வழங்கி வழங்குகிறது.

'ஹைப்பர்' எனப்படும் நடத்தையிலிருந்து அவர்களே ஒரு வகையில் அமைதிப்படுத்துகிறது.

நமக்கெல்லாம். ஒருகாலத்தில் இன்ன டீச்சர் இதை படித்து தந்தார் என்பதை விட, இந்தக் கதையை இந்த டீச்சர் சொன்னார் என்ற ஞாபகம் இன்றுவரை மனதில் அடிமனதில் இடம் பிடித்து விட்டிருக்கிறது.

வீட்டு முற்றத்தில் குழந்தை குட்டி பெரியவர்களோடு உட்கார்ந்து கதை சொல்லி, கதை கேட்ட சம்பவங்கள் காலாவதி ஆகிப்போனதால் இப்பொழுதெல்லாம் அவற்றை கண்காட்சியில் பார்த்தது போல இப்படி எல்லாம் நடந்திருக்கிறதா என வியந்து பாராட்டி அந்த நாட்களை உணர்வுபூர்வமாக ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் இன்றைய தலைமுறையினர்.

சரி. நேரமில்லை என்பவர்களுக்கு 'பரவாயில்லை' என்று நினைத்து அந்த பொறுப்பை நானே எடுத்துக் கொள்கின்றேன். ஆசிரியராக இருந்து கற்றுக் கொடுப்பதற்கும், உடல் இயக்கங்களுக்குமான ஆலோசனை களையும் இதன் மூலம் இலகுவாக கொடுக்கின்றேன்.

என்ன டீச்சர்? பாடம் எடுக்கும் நேரத்தில் பத்து நிமிடம் இதற்கென்றே ஒதுக்குகிறீர்களே..? என்று மேலிடத்தில் வரும் கேள்விகளுக்கு ஆரம்பத்தில் தடுமாறினாலும் பிறகு உள்ளங்களை புரிதலை ஏற்படுத்திக் கொடுத்து விட்டேன். சிறியாரோ பெரியவரோ அவர்களை என்பால் கவர்ந்து கொள்ளவும், பாடத்தின் பால் விருப்பம் கொள்ளவும், ஒப்புரவு கல்வியே ஒப்பற்றது என்ற எனது கொள்கையிலும், ஏன் என்னை ஒரு காலத்தில் மறந்து விடாத இருக்கட்டும் என்ற ஒரு சின்ன பேராசையிலும் இதனை என் தனிப்பட்ட அணுகுமுறையாக கொண்டிருப்பது. இதையெல்லாம் உணர வைத்துப் பிறகு தலையீடுகள் குறைந்து விட்டன.

(அப்சர்வேஷன் நடக்கும் போது உண்மையில் அதிகமான அபிநயங்களோ,

நடிப்போ இல்லாமல் இயல்பாகவே வகுப்பு இருக்கும்.)

காரியாலயத்தில் “இந்த மெத்ததட் நல்லா இருக்கு..” என்று ரிமாக் கூறும் தலைமைகளை அடிக்கடி சந்திப்பதுண்டு.

பெற்றோர்களுடன் அளவுக்கதிக மானதொடர்புவைத்துக்கொள்பவர்களாக நான் இருப்பதினால் இது கூட நிர்வா கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று பரிதாபமாக விளக்கங் கூற வந்தவர்களைக் கண்டு வியந்திருக்கிறேன்.

எனது மாணவன், பெற்றோர் என்பது எனக்கு கிடைத்த மிகப்பெரிய அறிவியல் கடத்தி. இதில் தொடர்பை கண்டு கட்டுப்படுத்துமாறு கூறுவதற்கு என்ன வேண்டி இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை.

எனக்குத் தேவையானதெல்லாம் சிறார்களின் முன்னேற்றம், தன்னம்பிக்கை அடுத்த கட்ட அறிவு மட்ட நகர்வு என்பனவே. எந்த இடத்தில் அவை தேங்கி நிற்கிறதோ, தடைபட்டிருக்கிறதோ, அந்த இடத்திலிருந்து அவற்றை உளரீதியிலும், இயக்க ரீதியிலும் தொடர்ந்து எடுத்துச் செல்வது மட்டுமே.

இந்த நாட்களிலும் அந்தக் ‘கதை சொல்லி மகாராஜா’ கதை வாசிக்கும் போது எனக்கே இருப்புக் கொள்ளாது. நாங்களே இன்று வரை கதை கேட்கும் கூட்டத்தில் விடுதலை அடைய விரும் பாத போது அந்தக் கலையின் இதய நாடிகள் அவர்கள்.. பிரிந்து விடாமல் இருக்க பிரியப்படுவதில் எந்த அளவு தேவையுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதனை சொல்லத்தான் வேண்டுமா.

இரவு 9.55 மணியின் வரலாற் றில் ஓர் ஏட்டுக் கதையில் வானொலி பெட்டியின் வாசனையோடு வசிய பட்ட தலை முறைகள் நாம்.

■

# இரு விழிகளின் சங்கமம்

உன் விழியில் தொலைந்த நான்
உன் வரவிற்காக காத்திருக்கிறேன் அன்பே!

நம் வார்த்தைகளை விட நம் விழிகள் கா
தல் கொண்டு பேசும் பாஷைகள்
ஒன்றித்து சங்கமித்து கலந்திடுதே!

உன் விழிகளில் எனை தேடி
நிமிடங்கள்தோறும் தித்திக்கும் என் மனதிடம்
தோற்றுக்கொண்டே இருக்கிறேன்!

உன் விழிகளில் எனக்கான காதலை கண்டு
மெய்சிலிர்த்து போனேன்!!!!!

என்ன தவம் செய்திட்டேன் நான்
உனை கண்ட நொடி நான் வீழ்ந்தது
எனக்கே உரித்தான
நாணம் ஒட்டிக்கொண்டதே!!!!

உன் விழியோடு என் விழியை
கலந்திடும் நேரம்
ஊற்றுக்கண் அடிஆழத்தில் இருந்து
நேசம் வழிந்தோடி வருவதை
தடுக்க இயலாது விக்கித்து நின்றேன்
இரு விழிகளின் சங்கமத்தின்
அசைக்க முடியா காதலாலே!!!

உன் விழியில் விழுந்து நீந்தும்
என் காதலை திகட்ட திகட்ட
உனக்களிக்க காத்திருக்கிறேன் அன்பே!

நான்கு கரு விழிகள் நடனமாட..
நம் காதலும் மேடையானதோ!

இமைகளின் துடிப்பும் இங்கே..
சலங்கை ஒலிகளானதோ!!

விழிவரிசை தாக்கத்தில்...
காற்றின் அலைவரிசையிலும்
கவன சிதறல்கள்!!

உன் விழி தீண்டல்களை
மௌனியாய் மொழி பெயர்த்திடவே...
வாய் மொழி மறந்த
ஞானியாய் நானும்!

தேகம் உரசிட
உறைந்திடும் சூடும்
அகம் நிறைந்ததோ
அமைதியான அவளவன் பார்வையில்!

~ ஜெனி

# ஜென் கவிதை



மண்ணின் மேலிருக்கும்
கல்லின் அடியில் எத்தனை விதைகளோ?.....
மழை வெள்ளத்தின் வருகை
கல்லை நகர்த்தும் பொழுது
விதைகள் துளிர்க்காமல் இருப்பதில்லையே!
துளிர்விட்டு பெரிய மரமாக வளராமல் இருப்பதில்லையே!
பெரிய மரமாக வளர்ந்தாலும் நிழல் கொடுக்காமல் இருப்பதில்லையே!
அதே சிறுகல்லுக்கும் சேர்த்து ....
கல் எப்படி வளரும்?....
கல் எப்படி வளரும்?....

- ஸ்ரீவி.முத்துவேல்
சென்னை

## எதற்கு ஆலயம் செல்கிறோம்?

அவதூறு பேசிடவோ ஆலயம் செல்கிறீர்
எவரெவரைப் பற்றியோ ஏகடியம் பேசுகிறீர்
இமைக்கா விழிகளில் இறைவனைக் காணாது
அமைதியின்றி தவிக்கிறீர் அவத்தைய அனுபவிக்கிறீர்

உறைகின்ற தலத்தின் இறையை நினைக்காமல்
இறைவன் நாமம் இயம்பிடத் தயங்குகிறீர்
தேனென இனிக்கும் தெய்வீகம் பேசாது
வீணான அரசியல் விளம்புதல் தகுமா?

அக்கம்பக்கம் உள்ளவரை அபாண்டமாய் பேசுகிறீர்
பக்கம்பக்கமாய் புரளிப் பேசி மகிழ்கிறீர்
சித்தமது சுத்தமின்றி சத்தம் போடுமே
நித்தமதை கவனிக்காது நிம்மதி தேடுமே

ஆலயம் செல்லு அவதூறு பேசாதே
ஆன்மலயத்தில் ஆழ்ந்து அமைதியை உணர்
இறை சிந்தனை இதயத்தில் நிறுத்து
உறைந்த இறையும் உதிரத்தில் எழுமே

ஆண்டவன் பெயரை உரக்கச் சொல்லு
அண்டத்தின் சக்தி ஐந்தையும் உணர்
சுத்தமாகும் சித்தம் சத்தமற்றுப் போகுமே
நித்தமும் மகிழ்வு நிம்மதி பூரணமாகும்

செ. இலட்சுமணக்குமார்
ஈரோடு

## பெண்ணின் சுதந்திம் பேசு

தேசத்தின் நிலைமையோ
கேடுக்கெட்டுப் போச்சு
சுவாசிக்கும் காற்றிலும்
காமம் கலந்தாச்சு
மேடையேறி உரைத்திடுவார்
மகளிர் பெருமைதனை
கீழிறங்கிச் சிதைத்திடுவார்
அவ்வினத்தின் கற்பினை
ஊருக்குள்ளே நடமாடுது
மனித விலங்குகள்
ஒன்றுக்கூடி உடைத்தெறி
அடிமை விலங்குகள்
ஆண்வர்க்க அசிங்கங்களை
தீயிட்டுக் கொளுத்து
எதிர்க்கின்ற உறுதியினை
உள்ளத்தில் செலுத்து
உறவாடும் பெண்டிர்க்கு
கண்ணியத்தைப் பூசு
அடக்கியாள எண்ணாமல்
சுதந்திரத்தைப் பேசு

- லீ. லியாகத்அலி.

# கொங்கு ஆரத்தி பாடல்

ஆராத்தி ஆராத்திங்க
அருமையான ஆராத்திங்க
கொங்கு நாட்டின் சிறப்பை சொல்லும்
அருமையான ஆராத்திங்க

ஆராத்தி ஆராத்திங்க
அருமையான ஆராத்திங்க
கொங்கு நாட்டின் சிறப்பை சொல்லும்
அருமையான ஆராத்திங்க

கோயம்புத்தூர் சீமையில
கொடவள்ளல் பரம்பரயில
பொறந்தவரு எங்க மச்சான்

எக்கசக்கம் படிச்சவரு
எங்க அக்காவுக்கு புடிச்சவரு
பாசக்காற எங்க மச்சான்

தேடுனாலும் கிடைக்கமாட்டாரு
கிடைச்சாலும் சிக்கமாட்டாரு
நல்ல மச்சான் எங்க மச்சான்

எங்கவீட்டு செல்ல தேவத
எப்படித்தான் கண்டுபிடிச்சாளோ
காதலத் தான் சொல்ல வைச்சாளோ

கோடிக்குச் சொந்தக்காரு
தாராள மனசுக்காரு
எண்ணாம் எடுங்க மச்சான்
தட்டத்தான் நிரப்புங்க மச்சான்

காங்கேயக் கவுண்டர் பரம்பரையில
வரம் வாங்கி பொறந்த புள்ள
வறும தெரியாம வளந்த புள்ள
செல்ல அக்கா எங்க அக்கா

தங்கத்த தாரமுங்க
பணப்பெட்டிய கொடுக்குறமுங்க
உங்க வம்சம் செழிக்க மச்சான்

கண்ணு கலங்காம
கண்ணத் தான் பாத்துகோங்க
அக்கா கைய புடுச்ச
அருமை மச்சான் ஆசை மச்சான்


பொன்னயும் பொருளையும்
அள்ளித் தாங்க மச்சான்
தட்டத் தான் நிரப்புங்க மச்சான்

ஆராத்தி ஆராத்திங்க
அருமையான ஆராத்திங்க
கொங்கு நாட்டின் சிறப்பை சொல்லும்
அருமையான ஆராத்திங்க

ஆராத்தி ஆராத்திங்க
அருமையான ஆராத்திங்க
கொங்கு நாட்டின் சிறப்பை சொல்லும்
அருமையான ஆராத்திங்க

- ஸ்ரீவி. முத்துவேல்
சென்னை





# தரணியெல்லாம் எங்கள் தாயகமாம்

(நோக்கு - 1)

அந்தர வெளியி லோர் அற்புதக் காட்சி - அங்கு
ஆதவனைச் சுற்றி நீள் வட்டப் பாதையில்
பந்துபோல் சுழலும் கோள்களுடனே - நம்
பாரெனும் தாயும் சுழன்று வருகிறாள்.

எண்ணிலாப் பல்வகை உயிரினங்களுடன் - அவள்
எழுநூறு கோடியாம் எமையும் சுமந்து
கண்ணிமை போலெமைக் காத்த வண்ணமாய் - எம்
காசினித் தாயவள் பவனி வருகிறாள்.

ஆதமின் மக்களாய் அத்தனை பேரும் - அந்த
ஆதி இறைவனால் அனுப்பப் பட்டோம்.
சாதி யினம் மொழி நிறவேறு பாடின்றி - நாம்
சீலமிகு மரபு வழிச் சோதர ராவோம்.

சோறுகாணு மிடங்களைத் தேடி யோடினோம் - அதைச்
சொர்க்க மாக்கியங்கு போய்ச் சேரலாகினோம்.
மாறுபட்ட சூழல்செய்த மாற்றங்களினால் - நாம்
வேறுபட்டுக் கூறுபட்டு மாறு பட்டுள்ளோம்.

வேதங்கள் பலவாகி வேறுபட்ட போதிலும் - அவை
வேறுவேறாய்க் கூறுபடப் போதிக்க வில்லை.
மேதினியில் மனிதரெனும் இனமாய் வாழ்ந்து - நாம்
மேன்மையுற ஒற்றுமையை வேரூன்றச் செய்வோம்.

ஒன்றே குலமென உபதேசம் செய்வார் - நமக்கு
ஒருவனே தேவனென உறுதியாய்ச் சொல்வார்.
நன்றே இவற்றை நாம் நடைமுறைப்படுத்தி - இந்த
நானிலத்தை ஓரினத்தின் தாயகமாய்க் கொள்வோம்.

நல்லிணக்க மேற்படுத்தி நெல்சன் மண்டேலா - தன்
நாட்டினிலே நிறவெறியை இல்லா தொழித்தார்.
பல்லின மக்களையும் பாசமுடன் சேர்த்து - நம்
பாரதத்தில் காந்திமகான் சாதனை படைத்தார்.

செம்மொழிகள் அத்தனையும் சீருறக் கற்போம் - நாம்
சீமைமுதல் உலகெலாம் சுற்றி வருவோம்.
எம்மொழி இனத்தோடும் இனிமையுறப் பேசி - நாம்
இனமொன்றாய் உறவினராய் இருகரம் சேர்ப்போம்.

மனிதமெனும் மாண்புமிகு உணர்வு தன்னை - இந்த
மண் மீது வாழ்வோரின் மனதில் விதைப்போம்.
புனிதமதப் போதனைகள் அத்தனையும் கேட்டு - இந்த
புவியினைநம் பூர்வீகத் தாயகமாய் மீட்போம்.

வறுமையுற்ற ஆபிரிக்க நாடுகள் செல்வோம் - அங்கு
வளங்கள் பரிமாறி நல்லுறவு கொள்வோம்.
பெருமைக்காய்ப் போர்புரியும் செலவினத்தை - இந்தத்
தரணியில் வறுமை நீங்கத் தாரை வார்ப்போம்.

அந்தீசு மலைச் சிகரத்தில் ஏறி இறங்கி - அங்கு
ஓடும் அமேசன் மேல் தோணி விடுவோம்.
செந்தீயால் விளைந்த பல சேதங்கள் கண்டு - நாம்
சோகமுற்றுக் கண்களால் செந்நீர் வடிப்போம்.

உத்தரப் பிரதேச உறை பனிக் காலத்தை - நாம்
உவகையுடனே எதிர்பார்த் திருப்போம்.
மத்திய கோட்டுக் கடற்கரை மணலில் - நாம்
மங்கையருடன் வந்து வெய்யிற் குளிப்போம்.

ஐரோப்பா கண்டமெலாம் அலைந்து வருவோம் - அதன்
அருகிலுள்ள யூறல் மலை ஏறிக் கடப்போம்.
சைபீரிய மேட்டு நிலப் பனியுறைவில் - நாம்
சகலரும் பனி சறுக்கி விளையாடிடுவோம்.

சூடு மிகக் கூடுகின்ற கோடை தன்னில் - நாம்
சுகமூட்டும் காப்பகங்கள் தேடிச் செல்வோம்.
கோடைக்கானல் சென்று குளுகுளுப்படைவோம் - அங்கு
கூடிக் குலாவி நாம் குதூகலித் திடுவோம்.

பாட்டிசைக்கும் பாரதப் பெண்களுடனே - நாம்
பிருந்தா வனம் சென்று பரவச மடைவோம்.
ஊட்டிக்கும் உறவுகளைக் கூட்டி வந்து - இவை
உலகச் சுவனங்க ளெனக் காட்டிடுவோம்.

சிறியவொரு நாடெனினும் சிறீலங்காத் தீவு - இங்கு
சுகமூட்டும் சுகாதார நகரம் பல வுண்டு.
அரியதோர் அமைவிடத்தி லிருந்து கொண்டு - இது
அகிலத்தோர்க் களித்திடும் சுகபோக விருந்து.

அரசாளும் அனைவரும் ஒன்றாகி இணைவோம் - நாம்
ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக்கு செல்வோம்.
உரிமைப் பிரகடனம் ஒன்று தயார் செய்து - இந்த
உலகமெல்லா மெமது தாயகமா மென்போம்.

**கலாபூஷணம் அப்துல் ஹலீம்**
ஏறாவூர் - இலங்கை

# நதிக்கொரு கவலை

நிற்கவும் நேரமில்லை,
சொல்லவும் காலமில்லை
இதுவே என் வாழ்க்கை...
இதுவே என் பணி...
என்னுள்ளே பல உயிர்கள்...
என்னை அலங்கரிக்குது
பல பூக்கள்...

ஆறறிவு மானிடருக்கும்
நான் தேவை
ஆனால் என் மீதே
அவர்களது கழிவுகள்
மீண்டும் மீண்டும் வரும்

போத்தல், மட்டை, குப்பை என
பலகோடி கழிவோடு..
தினமும் சுமக்கிறேன்
மிகக் கவலையோடு..

நச்சுக்கழிவு, நாற்றக்கழிவு
எனக்கோ மிகவும் இழிவு..
மானிடரோ அசுத்தமானால்
என்னில் வந்து குளிக்கின்றனர்..
ஆனால்
நான் அசுத்தமானால்
என்ன செய்வது?
சொல்லுங்கள் மானிட சமுதாயமே...

**- அமீன் அன்சீர்**



# உறவும் துறவும்



**முனைவர் ப. கற்பகராமன்**
MA.,MA.,MA.,M.Phil.,P.hD.,
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சேலம் - 05

ஏது உறவு, உறவை எவ்வாறு துறக்க வேண்டும். அவ்வாறு உறவினைத் துறந்தால் என்ன கிடைக்கும் என்பதையும், எது துறவு, அந்தத் துறவிலும் எவற்றோடெல்லாம் உறவு கொள்கின்றோம், அத்தகைய உறவுகளால் எவ்வாறு துறவு பாதிக்கப்படும் என்பதையும் இங்குத் தெளிவாகக் காண்போம்.

உறவுகளைத் துறப்பதே துறவு. அனைத்தையும் துறந்தாலே இறைவனோடு உறவு. இதுவே நமக்கு வகுக்கப்பட்டுள்ள வாழ்வியல். இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால் துறவை முற்றிலும் துறந்தால்தான் இறைவனுடைய உறவைப் பெற முடியும். உறவினை முற்றிலும் துறந்தால்தான் துறவைப் பெற முடியும்.

உறவு என்று நாம் இங்குக் குறிப்பிடுவது உடல் சார்ந்ததோ, சாதி சார்ந்ததோ, மதம் சார்ந்ததோ, இனம் சார்ந்ததோ அல்ல. இவை அனைத்தையும் கடந்து அன்றாடம் நாம் வாழ்வதற்கு பல பொருட்களோடு கொண்டுள்ள தவிர்க்க முடியாத ஈர்ப்பே உறவு. இன்னும் ஆழமாக ஆராய்ந்தோமானால் வடிவமற்ற உறவுகளும் நம்மிடம் உண்டு. ஏதேனும் ஓர் வகையில் நமக்குப் பிடித்தோ, பிடிக்காமலோ நம்மால் ஈர்க்கப்பட்டு தினம்தோறும் நம்மோடு தொடர்பில் இருப்பதைத்தான் நமக்கான உறவாக நாம் உணர்கின்றோம்.

இதில் நமக்குப் பிடிக்காமல் நம்மோடு இருப்பதை எளிதில் நாம் துறந்துவிடலாம். ஆனால் நமக்குப் பிடித்து நம்முடைய மனம் ஏற்றுக் கொண்டவற்றைத் துறப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. பிடித்தனவற்றைத் துறக்க எண்ணி உயிரையே துறந்தவர்களும் உண்டு.

நாம் நம்மைச் சார்ந்தனவற்றோடு இரண்டு வழிகளில் தொடர்பினை வைத்துள்ளோம். ஒன்று உதவி, மற்றொன்று உறவு. உதவி என்பது ஏதேனும் பொருளுக்காக ஒருவர் இன்னொருவருக்கு உதவுவது. அவர் இதைக் கொடுத்தார். அதற்காக நான் இதைச் செய்தேன் என்பதோடு முடிவது உதவி. உறவு என்பதோ தொடர்ந்து அவரைச் சுமந்துகொண்டே இருப்பது.

நம்முடைய சமுதாயக் கட்டமைப்பானது யாருடைய உதவிகளுமின்றி தனியே வாழ இயலாதது. எனவே பல்வேறு உதவிகளைச் செய்வதற்குப் பலரையும் அமைத்துக்கொள்ளலாமே தவிர, அவர்கள்

அனைவரோடும் ஏதேனும் ஒரு வகையில் உறவு கொண்டாடும்போது அந்த உறவுகளே துறவினைப் பாதிக்கும் என்பதனை உணர்ந்து கொண்டால் மட்டுமே துறவில் நம்மால் வெற்றியடைய முடியும்.

நம்முடைய உடலை விட்டு உயிர் பிறிந்தால்கூட அந்த உயிரற்ற உடலை மறைவிக்க குறைந்தது நான்கு பேரினுடைய உதவி கட்டாயம் தேவை. ஒவ்வொரு காலகட்டத்திலும் உதவிக்கு மட்டும் என்ற நிலையில் நம்முடைய வாழ்வியலை மற்றவர்களோடு அமைத்துக் கொண்டோமானால் எளிதில் துறவை அடைந்துவிடலாம்.

பசித்தால் சாப்பிடுவது என்பது நம்முடைய பசிக்கு உதவி செய்வதற்காக சாப்பாட்டை நாடுவதைக் குறிக்கும். அறுசுவை உணவிற்காகவே பசியே எடுக்கவில்லை என்றாலும் போலியாகப் பசியை உண்டாக்கி உண்பது என்பதே உணவின்மேல் நாம் கொண்ட உறவினை உணர்த்தும். எதுவொன்றுமே உதவியாக இருக்கின்ற வரை அதனைத் துறப்பது என்பது எளிது. அதனையே உறவாக அமைத்துக் கொண்டோமானால் அங்குத் துறவுக்குத் துளியும் இடமிருக்காது.

இறைநிலையிலிருந்து நாம் இந்தப் பூமிக்கு வரும்போது எந்தவகையான உறவுகளுமின்றித்தான் வந்தோம். இடையில் சிறிது காலம் வாழ்ந்த தவறான வாழ்க்கையின் அடையாளமாகப் பல்வேறு உறவுகளை நம் மோடு இணைத்துக் கொண்டோம். அவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட உறவுகள் அனைத்தும், மீண்டும் இறைநிலையோடு நம்மை இணையவிடாமல் தடுக்கும் வேலையை பிறவிகள் கடந்தும் செவ்வனே செய்து வருகின்றன.

ஒவ்வொரு நொடியும் இறைமை நம்மை ஏற்றுக்கொள்ளத் தயாராகவே காத்திருக்கின்றது. நாம்தான் அதனை உணர்ந்துக் கொள்ளாமல் தேவையில்லாதவற்றைத் தேவையாக்கிக் கொண்டு, தேவையானதைத் தவிர்த்து வருகின்றோம். உண்மையில் சொல்லப் போனால் நாம்தான் இறைமையை ஏமாற்றுகிறோமே தவிர, இறைமை ஒருபோதும் நம்மை ஏமாற்றாது. எனவே உண்மையில் உறவுகளைத் துறந்து துறவோடு உறவாடப் பழகுவோம்.

உறவுகளோடு உறவாடும்போது தான்இறைநிலையைஅடையமுடியவில்லை என்றால், துறவோடு உறவாடும்போதும் பலராலும் இறைநிலையோடு இணைய முடியவில்லை. காரணம், துறவினைத் துறக்கும் எண்ணத்துடன் மேற்கொள்ளாமல் அதனையும் உறவாடும் எண்ணத்துடனேயே மேற்கொள்வதே என்பதை உணர்ந்து கொண்டோமானால் இறை நிலை இன்முகத்துடன் நம்மை இணைத்துக் கொள்ளும் என்பதில் துளியும் ஐயமில்லை.


உண்மையில் துறவு என்பது, 'நான் என்பது ஏதுமில்லை', 'என்னால் நிகழ்வது என்பது ஏதுமில்லை', 'எல்லாம் இறைநிலையே' என்ற எண்ணம் கொள்வதாகும். எல்லாவற்றிலும் படைத்தவனை மட்டுமே உணர்ந்து கொள்ளும் நிலையே துறவு. படைத்தவனின் மூலமாகவே படைப்பைப் பார்ப்பது. இதில் அழகு என்றும், அசிங்கம் என்றும் ஏதுமில்லை.

இன்றைய காலங்களில் நாம் மேற்கொள்ளும் துறவிலோ ஆண்டவனை விட அதிகமாக துறவிகளே தங்களை அலங்காரம் செய்து கொள்வது பெரும் நகைப்பைத் தருவதாகவே உள்ளது. உடை மட்டுமே காவி. உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை வண்ண வண்ண வைடூரியங்கள். இதற்குப் பெயரா துறவு? ஐம்புலன்களையும் இறைநிலை என்ற ஒரே மையப்புள்ளியில் நிறுத்துவதுதான் துறவே தவிர, ஐம்புலன்கள் மூலம் ஆனந்தம் காண்பதில் இல்லைத் துறவு.

ஈசனோடாயினும் ஆசையை விடுமின் என்பது நம்முடைய சான்றோர் கள் நமக்குக்

கற்றுத்தந்த துறவு. உண்மையாகவே அனைத்தையும் துறந்த துறவியாக இருந்தாலும், அவன் தன்னைத் துறவி என்று வெளிக்காட்டிக்கொள்வதில் ஆசை கொள்வானென்றால் அந்த நொடிமுதல் அவனிடமிருக்கும் துறவு அவனுக்கும் அவன்சார்ந்த யாரொருவருக்கும் எந்தப் பயனையும் தராததாக அமைந்துவிடும்.

நம்மை விட்டுவிட்டு வேறு யார் யாருக்காகவோ இறைநிலை இயங்குவதாக நாம் எண்ணிக் கொண்டிருப்பதுதான் நம்முடைய பெரும் தவறு. நமக்காகவே இறைநிலை இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கணமும் நம்மைக் கூப்பிட்டுக் கொண்டேதான் இருக்கின்றது. நம்மிடம் படிந்துள்ள அகப்புற அழுக்குகளே இறைநிலையோடு நம்மை இணைய விடாமல் தடுக்கின்றன. எனவே நம்மை நாம் தூய்மை படுத்திக்கொள்வோம். நாம் தூய்மையான அந்த நொடியே இறைநிலை நம்மோடு இணைந்து விடும்.



# அறுவடை செய்வோம்

அன்பின் விளைச்சலில் அறுவடை செய்வோம்!
அகிலத்தில் நற்குணங்கள் மலர்ந்திட செய்வோம்!
மலர்ந்திடும் குதூகலம் நிறைந்திட வைப்போம்!
நிறைந்திடும் வகையில் குடும்பம் வளர்ப்போம்!

குடும்பத்தில் ஒருவர் உழவைச் செய்வோம்!
உழவின் மகிமையை உரக்க உரைப்போம்!
உரத்த சிந்தனையை மனதில் வளர்ப்போம்!
மனத்தின் இணைப்பால் மண்ணைக் காப்போம்!

மண்ணின் மலட்டை பசுமையால் போக்குவோம்!
பசுமையால் மழையை பெருகிட வைப்போம்!
பெருக்கி நீர்நிலைகளைக் காத்து சேமிப்போம்!
காத்திடும் நிலையை தலைமுறைக்கும் சொல்வோம்!

தலைமுறையை ஏர்க்காலைப் பிடிக்கச் சொல்வோம்!
பிடித்திடும் படிப்பையும் படித்திட வைப்போம்!
படித்திடும் கல்வியை வழியாய் மாற்றுவோம்!
வழியில் என்றும் அறத்தையே நிறுத்துவோம்!

அறத்தின் தலைமையை ஏத்தி நடப்போம்!
ஏத்தியே தமிழை உயிராய்க் காப்போம்!
உயிர்கள் யாவையும் மதித்தே நடப்போம்!
மதிக்குச் சென்றே மாடங்கள் அமைப்போம்!

மாடங்கள் இடையே மரங்களை வளர்ப்போம்!
மரங்களை மனிதராய்ப் பார்க்கத் தூண்டுவோம்!
பார்க்கும் யாவிலும் இறையை உணர்வோம்!
இறையும் இயற்கையும் ஒன்றே என்போம்!

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி.

# மணிக்கூ

1.
தும்மல் வரக் காரணம்
நினைவுப் பரிசு
அவளா?

2.
விழிகளுக்கு
மூளைக் கொடுக்கும் ஏமாற்றமா ?
கனவுகள்!

3.
முயற்சியின் நான்கெழுத்துக்குள்
வெற்றி என்னும்
மூன்றெழுத்து!

4.
வயிற்றில் இடமிருக்கேன
நீருண்டு மூழ்கிய
வாளி!

5.
காய்ந்த சறுகுகளை
நினைத்துக் கொண்டே
மடியும் இலைகள்!

6.
கண்ணீரின் காவியமா?
தண்ணிரின் ஓவியமே
காதல்!

7.
ஆள் பாதி, ஆடைப் பாதி
ஏழைக்கு ஏன் கொடுக்க
மறந்தாய் ஆண்டவா பாதி!

8.
விழிகளுக்கு மறைத்து
இரவின் கவிதையை
வாசிக்கும் மனது!

9.
மென்மையென்று எதுமில்லை
நூல்கள் ஒன்றுப்பட்டு
கழுத்தை இறுக்கும் கயிறு!

10.
வாழ்க்கை பயணத்தில்
நம்மோடு சேர்த்து பாடுபடும்
ஊரும், பேரும், படிப்பும்!

**இரா. மதிராஜ்**,
அலப்பட்சக் கவுண்டன் புதூர்.
காங்கேயம்

# குளியலறை

**தட்டப்படுமோ கதவு அழைக்க...?**
**தெருவில் கூவுவது கீரைக்காரியோ?**
**தூங்கும் குழவியின் அழுகுரலோ?**
**அடுப்பில் கொதித்தது கருகியதோ?**
**எரியும் விரலிலே தீக்காயமோ?**

**அடுத்த வே(ளை)(லை)க்கு ஆயத்தம் என்ன?**
**ஒவ்வொரு நாளும் அவளுக்கு**
**குளிப்பதில் கவனமற்ற விலகல்கள்!**
**குடைந்திடும் மூளையில் கேள்விகள்!**

**சில நிமிடங்கள் தனிமையில் இருந்தும்**
**சில்லென்ற தண்ணீரை முகத்தில் அடித்தும்**
**சிந்தனைகள் சூழ்ந்திருந்து வெப்பமூட்ட**

**குளியலறையில் குவியும் கவனங்கள்!**
**குளிக்கும் பொழுதில் யோசனைகள்...!**
**குளத்தில் எறிந்த கல்லாய்!**

**தன்னை மறந்த நிலையிலும் தடம் பதிக்கும்**
**சமையலறையின் சுவரெழுப்பும் சப்தங்கள்!**
**சத்தியமாய்த் தெரியாது அவளுக்கு...**
**எங்கிருக்கிறாள் என்று!**

**கவிஞர் மாலதி இராமலிங்கம்,**
**புதுச்சேரி.**



# பன்முகக் கலைஞராக ஒரு பாவலர் மணி

**பேராசிரியர், பாவலர், முனைவர். சி. அ. வ. இளஞ்செழியன் அவர்களுடன் தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன் நேர்காணல்**




ஒருவர் ஒரு திறமையில் சிறந்து விளங்குவதே அரிது. பல திறமைகளில் சிறந்து விளங்குவது அரிதிலும் அரிது. ஒருவர் ஓவியம் வரைகிறார். சிற்பக்கலையில் திறன் பெற்றுள்ளார். இசை ஞானம் உள்ளது. கட்டிடக்கலை ஆசிரியராக உள்ளார். பழங்கால சிற்பம் , ஓவியம் , இசை கட்டிடக் கலைகள் குறித்த ஆய்வு செய்கின்றார். ஆராய்ச்சிக்கட்டுரைகள் எழுதுகின்றார். இவற்றோடு கவிதை எழுதும் கலையையும் கற்று, குறிப்பாக, மரபுக்கவிதை எழுதும் வல்லமை பெற்று ஆயிரம் விருத்தங்கள் எழுதிப் பாவலர் மணி ஆகியுள்ளார். ஆம் அவர் ஒருவரே என்பது வியப்பாகத்தானே இருக்கும்.ஒரு பன்முகக் கலைஞராக உள்ள பாவலர்மணி முனைவர் சி.அ.வ.இளஞ்செழியன் அவர்களைத்தான் நேர்காணல் செய்தோம். இதோ நேர்காணலுக்குள் செல்வோம்.

1. தங்கள் பணி மதுரையில் ஆனால் வீடு சென்னையில். உங்கள் பூர்வீகம் எது ஐயா?

நாற்பது ஆண்டுகாலமாக நான் சென்னையில் வசிக்கின்றேன். என் மனைவி சென்னையைச் சேர்ந்தவர். என் இரு பிள்ளைகளும் சென்னையில் பிறந்தவர்களே. பல்லவர்கால சிற்பக் கலைஞர்களின் வழிவந்தோர் என்பதனால் தொண்டைமண்டலம் தான் பூர்வீகம். அரங்கநாதப் பெருமாள் பள்ளி கொண்டுள்ள பல்லவர் குடைவரைக் கோயில் அமையப் பெற்றுள்ள சிங்கவரம் (சிம்மபுரம்) தான் எங்களின் சொந்த ஊர். இவ்வூர், மலைக் கோட்டைகளுடன் திகழும் செஞ்சியின் வடமேற்கில் இரண்டு கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

2. தங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவருமே நுண்கலையில் தேர்ச்சி பெற்றவர்களாக உள்ளனரே எப்படி? பயிற்சியா? பாரம்பரியமாக வந்துள்ளதா?

பாட்டன், முப்பாட்டன் என எல்லோரும் பாரம்பரியக் கலைகளைச் செய்து வந்தவர்களாக! எனது பாட்டனாரான அப்பாவு ஆச்சாரி அவர்கள் தேர்ந்த சிற்பக்கலைஞராக மட்டுமின்றி கூத்து, நாடகம், இசை என இயங்கிக் கிடந்தவர். எனது தந்தை செ.அ.வடிவேலன் ஆசிரியர் அவர்கள் இலக்கியம், இசை, நாடகம் மட்டுமல்லாது இசைப்பாடல்களை இயற்றி மெட்டமைத்து குரல் நயத்துடன் வளமாக ஓங்கிப் பாடக்கூடியவர். அப்பாவின் கடைசித் தம்பியான எனது சித்தப்பா திரு. கண்ணப்பன் ஆசிரியர் அவர்கள் கோட்டோவியம், வண்ண ஓவியம் வரைவதில் திறமுற்றிருந்தவர். ஆதலால், அவர் எப்போதெல்லாம் எங்கள் வீட்டிற்கு வருகிறாரோ அப்போதெல்லாம் அவரை ஓவியம் வரைந்து காட்டச் சொல்வேன்.

அப்போது அகவை நான்கு அல்லது ஐந்து இருக்கும்; சித்தப்பா வந்திருந்தார். முதன்முதலாக என நினைக்கிறேன். அல்லது நிகழ்வுகள் கருத்தில் ஏறிப்

சாஞ்சி ஸ்தூபிமுன் புகைப்படக் கலைஞனாக...





படியும் தகுதியின்படி முதன்முதலாக எனலாம். எனது பாடப் புத்தகத்தில் இருக்கும் இராஜராஜ சோழனின் கோட்டோவியத்தை சித்தப்பாவிடம் வரைந்து காட்டச் சொல்லி பின் நானும் வரைந்திருந்தேன். இதுபோன்றே எட்டாம் வகுப்பு படிக்கும்போது என்று நினைக்கிறேன்; அப்போது பள்ளி, ஆண்டு விடுமுறையில் இருந்தது. ஊரின் கோவிலுக்கு மரச்சிற்பங்கள் செய்ய கும்பகோணத்திலிருந்து சிற்பிகள் வந்திருந் தனர். எங்கள் பள்ளியில் தான் தங்கி சிலைகளைச் செய்தனர். நான், நாள்முழுக்க அவர்களுடனேயே தான் இருப்பேன். அவர்கள் சொல்லிக்கொடுத்தது போலவே சிற்பங்களுக்கு வண்ணமிட்டமை இன்ன மும் நினைவினில் உலராமல். பன்னி ரண்டாம் வகுப்பு முடித்தவுடன் கல்லூரிப் படிப்புக்குச் செல்லவில்லை. ஓவியக் கல்லூரியில் சேர்வதற்கு அப்பா முற்றிலும் மறுத்துவிட்டார். கலை அறிவியல் கல்லூரி யில் சேர்ப்பதாக அவரது திட்டம். எனினும், எனது அனைத்து நோக்கமும் கலையாகவே இருந்தது. முறைப்படி கற்றுக்கொள்ள யாரும் வழி சொல்லவில்லை. நானாகவே முயன்று அச்சிறு அகவையிலேயே பல ஊர்களுக்குச் சென்று கற்ற பட்டறிவு. அப்பாவும் பின்னர் அங்கீகரித்தார். ஓவியம் வரையக் கற்றுக் கொடுப்பார்கள் என்று பார்த்தால் நான் சிறுவனாக இருப்பினும் கூட சரக்குந்துகளின் அடிப்பகுதிக்கு (Chassis of Lorries) செங்காவி வண்ணம் (Red Oxide) அடிக்கச்சொல்லி ஏமாற்றினர். லாரியின் அடியில் மல்லாந்து படுத்துக்கொண்டே வண்ணம் அடிக்கவேண்டிய கொடூரம். அழுதிருக்கின்றேன். கண்களில் வண்ணம் விழுந்து இடருற்றக் கொடூரம் வேறு. சரியாகக் காசு தரமாட்டார்கள். வேறுவழி யின்றி, சாப்பிடாமலேயே கடினமான வேலைகளைச் செய்துகொண்டிருப்பேன். இப்படி இந்த ஓவியக்கலையைக் கற்க நான் பட்டக் கடுமைகள் சொல்லி மாளாதவை. வண்ணத்தால் ஓவியம் வரைவதைக் கற்க பட்ட பாடு கிட்டத்தட்ட இமயமலையின் கனபரிமாணத்தை விட மூன்று மடங்கில் அதிகமாக இருக்கலாம். பட்டினி பட்டினி பட்டினி!எனஇப்படியேமுற்றிலுமாகஉடல் நலம் குன்றிப்போக எனது பத்தொன்பதாம் அகவையில் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாக, நினைவின்றிக் கிடந்து செத்துப் பிழைத்திருக்கிறேன். அரசு மருத்துவமனையில் எனது அறையில் சிகிச்சைப் பெற்றுக்கொண்டிருந்த முக்கால் வாசி பேர் அவ்வப்போது இறந்து கொண்டிருந்தனர். வாந்தி பேதி எனும் கொடுந்தொற்றுக் காலம் அது. இதை ஏன் இங்கு சொல்கிறேன் என்றால், இப்படி உயிருக்குப் போராடிப் பிழைத்ததால்தான் அப்பாவின் விருப்பத் தின்படி கல்லூரிப் படிப்பத் தொடர இசைந்தேன் என்பதனால். உடல் நலம் சீரான உடன் மீண்டும் கலைமீதான ஆர்வம் விட்டபாடில்லை. முற்றிலும் ஓவியத்தைப் புறக்கணித்திருந்த நான் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர். அப்போது இறுதி ஆண்டு மாணவராக இன்றைய எழுத்தாளரும், நடிகரும் கதை சொல்லியுமான திரு. பவாசெல்லதுரை படித்துக்கொண்டிருந்தார்.



புத்தகக்கண்காட்சியொன்றில் எழுத்தாளர் பெருமாள் முருகனுடன்...

அவர் திருவண் ணாமலைக்காரர். நான் திருவண்ணா மலையில் ஜெமினி ஆர்ட்ஸ் எனும் விளம்பர ஓவியக் கூடத்தில் 17 அகவையுடனான சிறுவனாக வேலை செய்துகொண்டிருந்தேன். பவா என்னை விட ஐந்தாறு அகவை மூத்தவராக இருந்தார். ஜெமினி ஆர்ட்ஸ் திரு. ஏ. நாகராஜனின் தம்பியான திரு. ஏ. லோகநாதனைப் (இன்றைய பாவலர். வையவன்) பார்க்க பவா மற்றும் இன்னும் சிலரும் வருவார்கள். கவிதைகள் குறித்துப் பேசுவார்கள். அப்போதுதான் பவா பழக்கம். இப்பழக்கத்தின் பேரில் என்னைக் கல்லூரியில் சந்தித்த பவா, தான் கல்லூரியின் பொதுச் செயலாளராக தேர்தலில் போட்டியிடுவதாகவும் அதற் கான விளம்பரத் தட்டிகளையும் சுவர் விளம்பரங்களையும் எழுதி உதவக் கேட்டுக் கொண்டார். அவ்வாறே செய்தேன். வெற்றியும் பெற்றார் பவா. ஆனால், அவ்விளம்பரங்களின் வெகு புதுமை, செய்நேர்த்தி இவற்றினால் நான் பிரபலமாக நேர்ந்தது. வேறென்ன ஆங்கில இலக்கியம் படித்துக்கொண்டே ஓவியக்கலையைத் தொடர ஆரம்பித்தேன். அப்பா உடல் நலமில்லாதிருந்தார். இதனால் இப்போது அவரது கட்டுப்பாடு ஏதுமில்லை. எனவே, திரைப்படத்துறையின் ஓவியப்பிரிவான ராட்சச கட்டவுட், ராட்சச பேனர் வரையும் துறையில் உதவியாளனாகச் சேர்ந்தேன். அப்போது எனக் அகவை இருபத்தியொன்று. அத்துறையின் முதன்மை ஓவியர்களிடையே தனித்துவம் வாய்ந்தவனாகவும் இருந்தேன். இதனால், எனக்கென ஓர் ஓவியக்கூடமும் (Art Studio) மயிலாப்பூரில் வைத்திருந்தேன். இத்தகையச் சூழலில்தான் எனது தம்பிகள் இருவரும் கலையின் மீது இயல்பாகவே ஈடுபாடுகொள்ளத்தொடங்கினர். முறைப்படிக் கற்றுக்கொடுத்ததனால் இன்று அவர்கள் இருவரும் தமிழ்நாட்டின் தலை சிறந்த ஓவியர்களுள் தனிச்சிறப்பைப் பெற்றவராகத் திகழ்கின்றனர்.

கலை, இலக்கியம் இசை இவை குருதிக்கொடைதானெனினும் மிக மிக கடினமான உழைப்பினிடையேயான உண்மையான கற்றல், பயிற்சி, தேடல் தான் எல்லாவற்றிகும் காரணம்.



### 3. தங்கள் பெற்றோர் மற்றும் உடன் பிறப்புகள் பற்றி

என் பெற்றோர் பற்றி : செ.அ. வடிவேலன் ஆசிரியரான எங்களது அப்பா அரசுப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிசெய்தவர். 'வடிவேல் வாத்தியார்' என்றால் சுற்று வட்டாரத்தில் எல்லோருக்கும் தெரியும். பணியிலிருக்கும் போதே தமது ஐம்பத்தி மூன்றாம் அகவையில் இறந்து விட்டார். அப்பாவின் பன்முகத்திறம் பற்றி பிறிதொருகேள்விக்கான விடையில் கூறியிருக்கின்றேன். திரும்பக்கூறத் தேவை யில்லை. அவர் ஓர் ஆகச்சிறந்த கல்வி மான். நான் நேரில் கண்ட வள்ளலாக அப்பா. மிகவும் நேர்மையானவர். எத்தனையோ சிறந்த மாணவர்களை உருவாக்கிருக்கிறார். இன்னமும் அப்பாவிடம் பயின்ற மாணவர் கள் யாரேனும் மண விழாக்களில் அம்மாவைச் சந்திக்க நேர்ந்தால் அவர் களின் காலில் விழுந்து வாழ்த்துப் பெற்றுக்கொள்வதைக் கண்டதுண்டு. முன் மாதிரியாகத் திகழ்ந்தவர். அடிப்படைப் பொருளாதாரத்திலும் கூட அவர் தன் னிறைவடையாதவராகவே இறந்து போனார். தமது மிக இளம் மற்றும் சிறுபிள்ளைகளை அனாதைகளாக விட்டுச் செல்லப்போகிறோமே என மனம் பேதலித்தவராக தம் கடைசிக் காலத்தில் அம்மாவிடம் வருந்தி யிருக்கிறார். ஆதலால் தான், தட்டுத் தடுமாறி நாங்கள் இன்னமும் சுதாரித்துக்கொண்டு வருகிறோம்.

அம்மாவைப் பற்றி: ரத்தினாம்பாள் எனும் அம்மாவின் இயற்பெயரை வசந்தா எனத் திருமணத்தின்போதே அப்பா மாற்றியிருந்தார். அம்மாவுக்கு அவ்வ ளவாகக் கல்வியறிவில்லை, எனினும், அப்பாவிற்கேற்ற நற்பண்பு களுடனான நல் இணையராகத் திகழ்ந்தவர். அம்மா நன்றாகப் பாடியதைக் கேட்டதுண்டு. என்மீது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் தனி அன்பு உண்டு. அப்பாவுக்கு நான் செல்லப்பிள்ளை.

உடன் பிறந்தோர் பற்றி: எங்கள் பெற்றோருக்கு நாங்கள் நான்கு பிள்ளை கள். நான் இரண்டாவது. எனது அண்ணன் பெயர் சி.அ.வ. இளங்கோவன். சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தில் விளம்பரத்துறையில் ஓவியராகப் பணி செய்துகொண்டிருக்கிறார். மிக மிக வளமாகவும் நுட்பமாகவும் பாடக்கூடிய ஆற்றல்கொண்டவர்.அடுத்துநான்.எனக்கு இரு தம்பிகள். மூத்தத் தம்பியின் பெயர் எஸ்.ஏ.வி. இளையராஜா. தமிழகத்தில் தலைசிறந்த ஓவியர்களுள் ஒருவர். நீர் வண்ண ஓவியம் மற்றும் இன்ன பிற வண்ண ஓவியங்களில் செம்-பட்டறிவும் ஆளுமையும் கொண்டவர். கடைசித் தம்பியான எஸ்.ஏ.வி. இளையபாரதி, தமிழகத்தின் தலைசிறந்த ஓவியர்களுள் முதன்மையானவர். எவ்வண்ண முறையா யினும் உலகத்தரத்தினைத் தாண்டிய தரத்தினில் படைப்பவர். மட்டுமின்றி, தபலா இசைக்கலைஞர். புல்லாங்குழலும் வாசிப்பவர்.

### 4. தங்கள் இளமைக்காலக் கல்வி குறித்து

எனது ஆரம்பப் பள்ளிக் கல்வியின் போது என் தந்தையும் எனக்கோர் ஆசிரிய ராக அமைந்த வாய்ப்பு. அப்பா வின் தனித்துவமாக அவரது பெருந்திற பன்முகம். அவர் ஆசிரியர் பணிசெய்த ஆரம்பப் பள்ளியை

விழா, பண்பாட்டு நிகழ்வு, இசைக் கச்சேரி, வரலாற்று நாடகம் என கல்வி மற்றும் கலைத் தளமாக இயக்குவித்தவர். ஆக, அப்பாவின் நேரடி கவனத்தின் கீழான ஆரம்பக்கல்வி. பின் பன்னிரண்டாம் வகுப்பு வரை வேறு பிற பள்ளிகளில். குழைந்தைப் பருவத்திலிருந்தே ஓவியம் மீதான ஈர்ப்பு. முறைப்படியான கற்றல் ஏதுமில்லையாயினும் பதினோறாம் வகுப்பு படிக்கும்போதே விளம்பரப் பலகை எழுத முனைந்தமை. எனினும், அப்பாவிற்கு எனது கலைமீதான நாட்டத்தில் உடன்பாடில்லை. பன்னிரண்டாம் வகுப்பிற்குப் பின் ஓவியக் கல்லூரியில் சேர்க்கவேண்டி உண்ணாமல் உள்ளிருப்புப் போராட்டம். உண்மையிலேயே கதவைத் திறக்காமல் நான்கு நாட்கள் பட்டினிக் கிடந்து கோரிக்கையை வலுவாக்கி இருந்தேன். ஆயினும், வறுமையின் காரணமாய் நிறைவேறாமற் போன இளங் கவின் கலைக் கனவு. பின் நானாகவே முயன்று காஞ்சிபுரம், திருவண்ணாமலை என விளம்பர ஓவியக்கூடங்களில் சேர்ந்து ஓவியம் கற்றமை. இவ் இரு இடங்களிலும் மொத்தமாக நான்கு திங்களே பணி செய்தமைக் குறிப்பிடத்தக்கது. பின்னர், சென்னையின் சில ஓவியக்கூடங்களில். ஆயினும், பின்-பதின்ம அகவையின் சிறுவன்-இளைஞனாக இருந்தமையால் சம்பளம் கிடைக்காத நிலையில் பெரும்பான்மைப் பட்டினி. இதனால், உடல் நலம் பாதிக்கப்பட்டு மீண்டும் அப்பாவின் விருப்பத்திற்கு இணங்க கல்லூரிப் படிப்பு. இளங்கலை ஆங்கில இலக்கியத்தைப் படிக்கச்சொல்லி ஏற்பாடு. அப்பாவின் ஆசை நான் பேராசிரியர் ஆகவேண்டுமென்பதே. என்னுடைய இலக்கு நான் ஓர் ஆகச்சிறந்த கலைஞனாக ஆகவேண்டும் என்பதாக. அப்பா உயிருடன் இருக்கும்போது நான் பேராசிரியனாக ஆகவில்லையாயினும், ஆனால் வெகு பின்னரே அவரின் எண்ணத்தை நிறைவேற்றியிருக்கிறேன். எனது இலக்கினையும் தாண்டி அதன் உச்சம் வரை சென்றிருக்கின்றேன். ஆக அப்பாவின் ஆசையும் எனது இலக்கினையும் பிசிறில்லாமல் நிறைவேற்றியிருப்பதால் உளவியலில் எந்தவித சிக்கலும் இல்லாத நன்னிலை.

5. கவின்கலையில் பட்டம் பெற்றவரா அல்லது பொறியியலில் பட்டம் பெற்றவரா? இரண்டிலும் சிறப்பாகப் பயணிப்பதால் கேட்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பொறியியற்புலத்தில் கவின் கலையும் ஓர் உள்ளடக்கம். சென்னைப் பல்கலைக் கீழ் இயங்கிய சென்னை அரசுகவின் கலைக்கல்லூரியில் இளங்கவின்கலை மற்றும் முதுகவின்கலையில் பட்டம் பெற்றவன். பொறியியல் புலத்தில்தான் தான் கலைக்கல்வி உள்ளது.

6. தங்கள் முனைவர் பட்ட ஆய்வு எதைப் பற்றியது?

கலைஞரின் கைவண்ணத்தில் ...
அசலும் நகலும்



பல்லவர் கலை மற்றும் கட்டடக் கலை பற்றியது. ‘காஞ்சிபுரம் மாவட்ட பல்லவர்காலக் கலை மற்றும் வரலாறு - ஓர் ஆய்வு’ என்பதாகத் தலைப்பு. பல்லவர் கலைகள் பற்றி எழுதிய முன்னோர்களான A.H. Longhurst, Alexander Rea, C. Meenakshi ஆகியோரை அடுத்து எனது முனைவர் பட்ட ஆய்வு அடுத்தவற்றைச் சொல்லும் ஆய்வாகச் சிறந்த ஒன்று. அவ் அறிஞர்களும் அறியாத மற்றும் சொல்லப்படாத ஏராளமான பல புதிய உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளது என் ஆய்வு.

### 7. பாண்டியர் நாட்டில் ஒரு கல்லணை இது குறித்த தங்கள் ஆய்வு என்ன?

இலக்கியம் மற்றும் வரலாற்றின்படி மருதத்திணைக்கான ஆகச்சிறந்ததோர் எடுத்துக்காட்டாக மதுரை. எனின், இதனின் வேளாண் வளம் எதனால்? எவ்வாறு? என்பதாக எனது கருதுகோள். இதனால், இதுகுறித்துப் பாண்டியர் கல்லணை ஏதேனும் இருக்கிறதா என மதுரை மக்கள் பலரிடம் கேட்டேன். ஆனால், அப்படி ஏதும் கேள்விப்பட்டதில்லையென்றார்கள். (ஒருவேளை அதுகுறித்து தெரிந்துவைத் துள்ள அந்த ஓரிரண்டு பேரும் என் கண்ணில் படவில்லையோ என்னவோ?) வேண்டுமென்றால், திருச்சியில் போய்ப் பாருங்கள் என்று ஆற்றுப்படுத்தினர்.

ஆக, வைகை ஆறு தறுதலையாகச் சுற்றுகிற ஒரு தண்டச்சோறு என்பதாக அதன் மதிப்பீடு ஒருபுறம் பிறழ்ந்திருக்கிறது போலும். இடைக்காலப் பாண்டியரின் கல்லணை இன்னமும் பயன்பாட்டில் இருப்பது கூட பெரும்பான்மையோர்க்குத் தெரியவில்லை. இஃதன்றி, அப்போது புதியதாக வெட்டப்பட்டிருந்த பாசன வாய்க்காலான சிரீவல்லபப் பேராறு, அப்போது கட்டப்பட்டுக் கொண்டிருந்த மேற்சொன்ன அந்தப் பராக்கிரம பாண்டியன் கல்லணை, பராக்கிரம பாண்டியன் பேராறு எனும் தென்கரை வாய்க்கால் இவற்றைக் கண்டடைந்தும் கண்டுபிடித்ததோடல்லாமல் சங்க கால அணைகளாக என்னால் கருதப்படுகிற சிதிலமுற்ற மேலும் மூன்று அணைகளையும் கண்டுபிடிக்க முடிந்தது. ஆக, கல்லணை நுட்பத்தில் கரிகாலனின் பாணி, பாண்டியர் பாணி என இருபெரும் நுட்பங்களைப் பிரித்தறிய இயலும். ஆக, அவ் அவ் ஆறுகள் சார்ந்து எத்தகையத் திறத்துடன் வடிவமைத்துப் அன்னோர் பயன்படச் செய்தனர் என்பதை வெளியிடப்படவிருக்கும் எனது புதிய வரலாற்று ஆய்வு நூலான “பாண்டியர் கல்லணை” பேசவிருக்கிறது. மட்டுமின்றி, கரிகால் வளவனின் கல்லணையில் நிகழ்த்தப்பட்டிருக்கும் உணரப்படாத நுண் பெரும் பொறியியற் நுட்பச் சிறப்புகள் முதன்முதலாக இவ் ஆய்வு நூலில் வெளிக்கொணரப்பட்டுள்ளன. பாண்டியர் வரலாற்றில் அறியப்படாது கிடக்கும் இடைக்காலத்தின் 128 ஆண்டுகால இடை வெளியை இவ் ஆய்வு மிகச்சரியாக உய்த்துணர்ந்தும்சான்றுகளின்அடிப்படை யிலும் விளக்கியிருக்கிறது. பாண்டியர் வரலாற்று ஆய்வுகளில் இந்நூல் ஒளிரும் மணிமகுடமாகச் சிறப்புறும்.

### 8. கரிகால் சோழனின் பெயர்க் காரணம் என்னவென்று தாங்கள் கருது கிறீர்கள்?

கரிகால் வளவனின் பெயர்க்கார ணத்தின் பின்னணியில் அறியப்படுகிற கால் கருகிய கதையை ஒரு புரளி என்கிறது எனது ஆய்வு. அது, அவர் யானைப்படையை முதன் முதலாகப் போருக்குப் பயன்படுத்திய தாலும் ‘யானையியல்’ எனும் நூலை எழுதிய தாலும் காலாட்படை மட்டுமே யான போர் மரபினில் யானைப் படையைப் புகுத்தியதாலும் கல்லணை கட்டி வளம் சேர்த்ததாலும் உருகொண்ட உயர் சிறப்புப்பெயர்.

### 9. யாழ் குறித்த தங்கள் ஆய்வைப் பற்றிச் சொல்ல முடியுமா?

தமிழரின் தொல் இசையை, குறிப்பாக யாழிசைப் பற்றி ஆய்வு செய்து எழுத

முடியுமா? அதுவும் மறைந்த ஆபிரகாம் பண்டிதர், விபுலானந்தர், வீ.ப.கா. சுந்தரம், மற்றும் வாழும் நா. மம்மது முதலிய இசை ஆய்வறிஞர்களை அடுத்து? இப்படி ஒரு கேள்வி ஆம் அல்லது இல்லை எனப் பதிலளிக்கப்படாமல் நிலுவையில் கிடப்பதை நான் உணரவேவில்லை. ஆனால், இந்தக் கேள்வியின் இருப்பை அறியாமலேயே சரியான கருதுகோளுடன் துல்லியமான தலைப்பையும் தெரிவுசெய்து எழுதத் தொடங்கியிருந்தேன். நாற்பது பக்கங்கள் எழுதிய பின்புதான் அந்தக் கேள்வியை உணரநேர்ந்தது. இதனால், நடுங்கிப்போய் அச்சம் கவ்விய நிலையில் ஆகா! இது வேண்டாத வேலை என ஆய்வை நிறுத்திவிட்டேன். ஏன் நிறுத்திவிட்டாய்? நான் பின்னிருக்கிறேன் நீ எழுது! என நச்சரித்துக் கொண்டிருந்தார் கடவுள் என் ஆழ் மனத்தினுள். ஆயினும், ஆறு ஏழு திங்கள் கழிந்த பின்னரே மீண்டும் துணிந்து எழுதலானேன். ஆக, காத்திருந்த கடவுள் கைகோத்தார் போலும். இதனால், பாமரரும் புரிந்துகொள்ளும் வகையில் எழுத இயன்றது. அடியார்க்கு நல்லார் மற்றும் அரும்பதவுரைக்காரர் ஆகியோரின் உரைகளையும் தாண்டி சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள இசைக்குறிப்புகளை இளங்கோவின் கோணத்தின் படியே உற்றுணர்ந்தவனாய் செறிந்து விளக்கியும் அவற்றின் அழகியலுரைத்தும் என எழுதி முடித்திருக்கின்றேன். என் ஆய்வு நூலின் தலைப்பு'சொல்லும்முழவும்வெல்லும்யாழும்' என்பதாகும். தலைப்பின்படி இவ் ஆய்வு யாழின் தனித்துவத்தை புதியத் தரவுகளுடன் பெரிது பேசுகிறது. பாணர்களின் ஒப்பற்ற பெருந்திறத்தினை எட்டுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறது. தாள இசைக்கருவிகளின் பரிணாமத்தினையும் தபலா எனும் தாள இசைக்கருவியின் தோற்றுவாயைத் தமிழ்நாடே எனவும் நிறுவுகிறது. மட்டுமின்றி, திரைப்படப் பாடல்களில் தாளத்தின் இன்றியமையாமை இதுவரை எடுத்துச் சொல்லாத வகையில் விளக்கியுள்ளமைமை இவ் ஆய்வு நூலின் ஒப்பற்றச் சிறப்பாகும்.



ஓவியராக...

தமிழிசை அறிஞர். இசைத்திரு. நா. மம்மது ஐயா அவர்கள் இந்நூலுக்கு விரும்பி அணிந்துரை எழுதியுள்ளார். மட்டுமின்றி, இவ் ஆய்வு நூலின் புதியநடை மற்றும் எடுத்துரைப்புகளை தம் அடிமனத்திலிருந்துப் பாராட்டிப் புலங்காகிதமடைந்தவராய் அவரது ஆசிரியரான வீ.ப.க. சுந்தரம் ஐயா அவர்களையும் தாண்டி எழுதியிருக்கிறீர் எனப் பாராட்டியதால் அச்சமும் படபடப்பும் தோன்றியது உண்மை. ஏனெனில், இசை ஆய்வினில் எனது முதலாம் நூல் என்பதால்! ஆக, அறிஞர்களும் போற்றும் வண்ணம் நூற்றுக்கணக்கான புதிய உண்மைகளை எனது ஆய்வு நூல் வெளிக்கொணர்ந்துள்ளது.

**10. பொறியியல் கல்லூரியில் பணியாற்றுகிறீர்கள் ஆனால், தமிழில் பாவலர் ஆகியுள்ளீர், எப்படி?**

ஓவியக் கலைதான் ஆதிமனிதனின் முதலாம் நுண்ணறிவு. அஃதே அவனுக்கு

வினையறிவின் அடுத்து நுணுக்கத்தைத் தோற்றுவித்தது. கலையும் வினையறிவும் இணைந்து அடுத்தகட்டமாக மொழியைத் தோறுவித்தன. இதனால், அவன் கல்லைக் கூர்மையாக்கி விலங்குகளை வீழ்த்தி வெற்றிபெற்றான். அவ்வாறே சக்கரம் கண்டு பிடித்தமை. ஆக கலை, பொறியல், மொழி என மூன்றும் இணைந்தே மனித நாகரிகத்தைக் கட்டமைத்தன என்பதாக எனது புரிதல். இதன்படி, மொழிக்கே தாய்மொழியாக மூத்திருந்த கலையை ஊடகமாகக் கற்றதனால் எனக்கு மொழியும் பொறியியலும் வெகு சொந்தமாகிவிடுகின்றனவோ என்னவோ? என்னைப்பொறுத்தவரை, புற மற்றும் அக உற்றல் என இவை இரண்டும் கலையின் அடிப்படைகளாக! கவிதைக்கும் அவையே. ஆக, உற்றதை அல்லது உய்த்துணர்ந்ததை கவிதையாலும் கலையாலும் அழகூட்டி வடிக்கமுடிகிறது. என்றால், ஓவியக் கல்லூரியில் பணியாற்றினால் நேரடி இருப்பும் இயங்கியலும், கலை அறிவியல் கல்லூரியில் பணியாற்றினால் உறவின் படியான இருப்பும் இயங்கியலும் பொறியியல் கல்லூரியில் பணியாற்றினால் தொடர்பின்படியான இருப்பும் இயங்கி யலும் எனப் புரிந்துகொள்ளலாம். நான் காலத்தைக் கடவுளாகக் கருதி வெளியைக் கற்க முனைந்தவன். ஆக, இடம் ஒரு பொருட்டல்ல! மட்டுமின்றி, நான் கட்டடக் கலைத்துறையில் ஒரு பேராசிரியர் என்பதனால், கலையில் உள்ளடங்கியதாக கட்டடக் கலை. நவீன காலத்தின் கல்வியியல் முறைப்படி பொறியியலின் ஒரு பிரிவாக கட்டடக்கலைத்துறை.

எவ்வாறெனினும், கலையில் அழகியல் உள்ளிருத்தி பெருநுட்பத்தின்படியான ஒரு படைப்பினை படைக்கமுடிகிறது என்றால் அப்படைப்பிற்கான வரைகருத்தை மனதளவில் எண்ணிப்பார்க்கும் முழு இயலுமத்தை யும் (சாத்தியம்) மொழிதானே தகவமைக்கிறது? ஆக, அத்தகைய நுண் நுட்பங்கள் மற்றும் அழகியலை முன்னோட்டமாக எண்ணிப்பார்க்கிற வலிமையை செம்மொழியான தமிழ்தானே கொடையளித்திருக்கிறது. என்றால், ஆங்கே இயல்பாகவே எனக்குக் கவிதையும் தோன்றிவிடும் அல்லவா? இதற்கு எடுத்துக் காட்டாக, எனது ஆய்வுகளை நான் ஓவியமாகவும் படைப்பித்துள்ளேன்! கவிதைகளாகவும் எழுதியுள்ளேன்! எனின், உள்ளியதை வரைந்தால் ஓவியம்; செய்தால் சிற்பம்; எழுதினால் கவிதை; விசாரணை செய்தால் ஆய்வு. படைப்பெண்ணம் மூண்டெழுந்தால்எவ்விடமும்நற்றளங்களே!

## 11. தமிழ்க் கவிதைகளில் மரபுக் கவிதைகள் பற்றித் தங்கள் கருத்து என்ன?

தமிழ்க்கவிதைகள் என்றாலே அது மரபுக்கவிதைகள்தானே! ஆயிரமாயிரம் ஆண்டு களுக்கும் மேலாக நெடிது நிற்கும் செவ்வியற் கவிதைகளை வெறும் அறுபது எழுபது ஆண்டுகளாகப் புழங்கும் ஒரு புதிய மடைமாற்றம் அல்லது அணுகுமுறையினை முன்னிட்டு இப்படிக் கேட்கத் தோன்றுகிறது அல்லவா? இலக்கணம் வேண்டாம் எனக் கட்டுடைத்ததனால், கவிதையில் போலிகள் அடரலாயின. மட்டுமின்றி, ஏதோ புதுக்கவிதையால் மட்டுமே எக்கருத்துகளையும் சொல்லமுடியும் எனும் மாயபிம்பம் வேறு. இஃதோர் சுருங்கி சூம்பிய நிலையாகத்தான் தெரிகிறது.

எவ்வாறெனினும், இன்று 360 பாகையிலும் உற்றறிந்து கவிதைபாடும் ஆகச்சிறந்த கவிஞர்கள் தோன்றியுள்ளனர். இதனின் பின்னணியில் செவ்வியற் கவிதை களைச் சொல்லிக்கொடுத்து இத்தகைய நற்சூழலை உருவாக்கிய் பல நல்லுள்ளங்கள் இருக்கின்றன. அவ்வோரில் ஆகச்சிறந்தவராக பிரான்சு நாட்டின் பாட்டரசர். திரு. பாரதிதாசன் களப்பணியில்...

மேலும், செவ்வியற் கவிதைகளில் அவை பாடப்பட்டச் சமகாலத்தின் சான்று கள் இயல்பாய் இருப்புற்றிருக்கும். ஆனால், புதுக்கவிதை மரபில் அதுவும் குறிப்பாக பின் நவீனத்துவக் கவிதைகள் என்பன பெரும்பான்மையில் மனம் பிறழ் கவிதைகளாக இருப்பதோடன்றி மணிப்பிரவாள நடையில் தமிழ்சம்ஸாக

இடருறுத்துவதைக் காணமுடிகிறது.

ஆக, புறநானூற்றின் இருவேறு பாடல்களின் இரண்டிரண்டு அடிகளை மட்டுமே முதன்மைச் சான்றாக்கிக் கொண்டு கட்டுக்கதையாய்க்குதப்பும்முதலாம்கரிகால்வளவனின் வரலாற்றினை என்னால் 200 பக்கங்களுக்கு அதுவும் எவராலும் மறுக்கவியலாத தரத்தினில் எழுத முடிகிறது என்றால், செவ்வியற் செய்யுள்களின் நுண்திறத்தினை எப்படிக் கடந்து போகமுடியும்? என்றால், கடைசியில் நாங்களும் கவிதை எழுதுவோம் என மிதமிஞ்சிய ஆவல் கொண்டோர் யாவரும் புதுக் கவிதையினை ஒரு நல் வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர். ஆனால்...

### 12. எவ்வகை மரபுக் கவிதைகள் எழுதுவதற்கு எளிதாக இருக்கும் எனத் தாங்கள் கருதுகிறீர்கள்?

என்னைப் பொருத்தவரை முதலாவதாக ஆசிரியப்பாவைக் கூறுவேன். இரண்டாவதாக விருத்தம். மூன்றாவதாகவே வெண்பா. ஆசிரியப்பாவே என்போன்ற வரலாற்று ஆய்வாளர்களுக்கு உகந்தது. ஆனால், எவ்வொரு ஆய்வுச் சுருக்கத்தையும் வெண்பாவால் பாடவியலும். விருத்தம் ஏறி எழுதவும் இறங்கி அடிக்கவும் வளைந்து கொடுக்கும் இலகியம் சார்ந்தது. வெண்பா கவனமில்லாவிடில் தளை தட்டி வைக்கும். வெண்பாவின் பொறியியலாக சொற்கட்டுமானமின்றி; வரையறை, வாழ்த்துதல், கருத்துரைத்தல், நெறியுரைத்தல், அறமுறைத்தல் என மேல் நின்றுரைக்கும் மேன்மைத் தன்மையைக் கொண்டிருப்பதால் அது பிசிறாத செப்பலோசையைத் தக்கவைத்திருக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் வெண்பாவுக்குத் தளைதட்டுதலும் தடம்புரளுவதலும் ஒவ்வா.

### 13. தங்களுக்கான உரிய அங்கீகாரம் இன்னும் கிடைக்கவில்லை என்று ஏதேனும் நினைத்ததுண்டா?

அங்கீகாரத்தை நான் எதிர்ப்பார்ப்பதில்லை. என் கலை, இலக்கிய, ஆய்வுப் பணி சமூக நலன் பாற்பட்டது. என் கற்றலில், தேடலில், புரிதலில், உற்றலில் புலப்படுத்துதலில் பொய் இருக்க வாய்ப்பில்லை. நிரலிட்ட இவற்றுடன் பொய்களைக் கலப்பவனாக இருந்தால் தான் நான் அங்க்கீகாரம் தேடி அலையவேண்டியிருக்கும். என்னை நோக்கிய கலைக்கான பல உயர் விருதுகளை அரசியல் செய்யும் கீழோர் தடுத்துள்ளமையும் நிகழ்ந்துள்ளன. திருவள்ளுவர் அங்கீகாரத்தை எதிர்பார்த்தா குறளை இயற்றியிருப்பார்? சொல்லப்போனால், ஒற்றைத் திருக்குறளுடன் அவரை மேலும் படைக்கவிடாமல் அப்போதைய அரசியல் முடக்கியிருக்கலாம் கூட. ஆனால், காலம் அவரை அங்கீகரித்து உலகறியச் செய்தது. முகநூல் மட்டும் இல்லாதிருந்தால் என்னை எப்போதோ ஏறகட்டியிருப்பர்!

### 14. ஓவியம் சிற்பம் இசை மற்றும் கவியெழுதுதல் என எல்லாவற்றிலும் எவ்வாறு பயணிக்கமுடிகிறது?



இந்தக் கேள்விக்கு முன்னம் சொன்ன விடைகளிலேயே பதில் இருக்கிறது. எனினும், இரத்தினச் சுருக்கமாக மற்றுமொருமுறை. ஆக, எதிர்ப்பார்ப்பற்ற உளவியல், சுழியத்தில் நிலைபெறும் இருப்பியல்பு என இவற்றை வாய்க்கப்பெற்றோர் யாவரும் பன்முகப் படைப்பாளர்களாகவே இருப்பர் என்பது யதார்த்தம்தானே? எனது இயல்பாக அரை விழிப்புணர்வும் தியானமும்! இதனால், முழு முட்டாளாகவும் ஞானத்தினனாகவும் இருபட.

### 15. தாங்கள் எழுதிய நூல்கள் பற்றிக் கூறவியலுமா?

கலைக் குலத்தில் பிறந்ததால் எனக்கு அழகியல் அத்துப்படி. குரோமோசோம் களில் குடியிருந்த அவ் அழகியல்-குல-நெடும்-நுட்பத்தினை இப்பிறவியில் தூண்டி விட்டவராக ஒப்பற்ற அறிஞர். ஆனந்த குமாரசாமியைக் கருதுவேன். இதனைப் பிரதிபலிக்கும் வகையில் முனைவர் பட்டம் பெற்றபின் நான் எழுதிய முதலாம் நூலின் தலைப்பு 'அழகியல் அகழாய்வு' (2014). இரண்டாம் நூலாக: 'பரிணாம உச்சம் கூறும் மதுரை புதுமண்டபச் சிற்பம்' (2014), மூன்றாவது நூலாக: 'மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் உலகின் மிக உயர்ந்த கோபுரங்களுடனான நான்காம் பிரகாரம்' (2016), நான்காவதாக 'Art and Architectural Glory of Chola and Pandiya Region' (2016) (நிதியுதவி: கருமுத்து. தியாகராஜச் செட்டியார் அறக்கட்டளை, கப்பலூர்) எனும் ஆங்கில ஆய்வு நூல், ஐந்தாவதாக 'சோழர்கால விஸ்வரூபச் சிற்பங்கள்' (காலச்சுவடு வெளியீடு 2018), ஆறாவதாக 'தமிழரின் உருவ வழிபாடு' (காலச்சுவடு வெளியீடு 2019), ஏழாவதாக, 'உபரி நிலா' எனும் எனது முதலாம் கவிதை நூல் (2019), எட்டாவதாக 'கரிகால் வளவன் சரியான பெயரும் தவறான புரிதலும்' (2022) எனும் வரலாற்று ஆய்வு நூல். வெளியிடப்பட விருக்கிற 'பாண்டியர் கல்லணை', 'சொல்லும் முழவும் வெல்லும் யாழும்' என இன்ன பிற சோழர், பாண்டியர் சார்ந்த ஆய்வுகளுமாம். எனது எல்லா ஆய்வு நூல்களும் இதுவரை சொல்லப்படாத அவற்றின் உன்மைகளை உரைப்பபவை.

### 16. தாங்கள் பெற்ற விருதுகள் குறித்து என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

விருதுகள் வழங்குதலில் அரசியல் இருப்பதால் நான் போட்டிகளில் ஈடுபடுவ தில்லை. எனக்குரிய நடுவண் அரசின் தேசிய விருதினைத் தடுத்து முடக்கினர். எனினும், அரசியல் நுழையாத உண்மையான தேசிய விருதினை ஓவியத்திற்காக 2008ல் பெற்றுள்ளேன். இளங்கவின்கலை, முதுகவின் கலை இரண்டு படிப்பிலும் Best Out Going Student Award வழங்கப் பெற்றேன். பிரான்சு நாட்டின் பாவலர் பயிலரங்கத்தில் பயிற்சி பெற்று பாவலர் பட்டம் பெற்றுள்ளேன். அண்மையில் தஞ்சைத் தமிழ் மன்றத்தினரால் 'கம்பதாசன் விருது' வழங்கப்பட்டுள்ளது.

### 17. நவீன எழுத்தாளர்களின் பிதற்றல் குறித்து

குடிமயக்கம் தெளிந்த பின் எழுதியதாக 'குற்றம் கடிதல்' எனும் அதிகாரத்தினை உணரமுடியவில்லை. அவ்வாறே, கூத்தி யார் வீட்டில் கும்மியடித்தக் கையோடு 'கூடாவொழுக்கம் எனும் அதிகாரம் எழுதப் பட்டது எனக் கூறத்தான் இயலுமா? அல்லது பொய்ப்பொய்யாய் புளுகித் திரிந்த ஒருவரால் 'சொல்வன்மை' எனும் அதிகாரத்தை... ஆக, வள்ளுவர் சுழிய இருப்பை இயல்பாக்கிக் கொண்டவர் என்பது சொல்லித்தெரியவேண்டியதில்லை. அவரின் 'தவம்' எனும் அதிகாரம் அதனை மெய்ப்படுத்துவதால் அறியலாம். என்றால், சொல் ஒன்று, செயல் வேறு எனும் மரபினராய்; உடனுறை வாசகர் என புயபல பராக்கிரமங்களுடன் வலம் வரும் நவீன எழுத்தாளர்களிடம் பிதற்றல் இருக்கத்தானே செய்யும்.

### 18. தங்கள் எதிர்கால இலக்கு என்ன?

தமிழகத்தில் அழகியற் கோணத்தில் வரலாறு அல்லது கலை வரலாறு எழுது வோர் இல்லையென்றே சொல்லும்

நிலை. இதனால், நிறைய ஆய்வு நூல்கள் எழுதவேண்டும். ஆகச்சிறந்த கவிதை நூல்கள் இயற்றவேண்டும். ஒப்பற்றக் கலைப் படைப்புகளை படைக்கவேண்டும். இவற்றினூடே தஞ்சை பெரியகோயில் மற்றும் கங்கைகொண்ட சோழபுரம் சார்ந்த எனது புதிய வரலாற்று ஆய்வுகள் திரைப் படமாக்கப் படவேண்டும். அங்கோர் வாட் கோயிலைக் கண்டு அதனிடத்திலேயே ஆய்வு செய்த நிலையில் ஆய்வுக்கட்டுரை ஒன்றை எழுதி பன்னாட்டு ஆய்வு சஞ்சிகை யில் வெளியிட முடிந்தது. அவ்வாறே எகிப்துக்குச் சென்று ஆய்வு செய்ய வேண்டும் என்பதும் இலக்காக! பேராசிரியம் எனது இயல்பு.

## 19. தற்போதைய தங்கள் பணி மன நிறைவைத் தருகிறதா?

கற்க கசடறக் கற்பவை (நுண்கலை) கற்றபின், கலைஞனாகவே நின்றேன். எனினும், ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்ட மேற்படிப்பை முடித்த பின் எனது நிற்றலானது அதற்குத் தகுந்தவாறு கற்பித்தலாக வலுப்பெற்றது. ஏமாற்றிப் பித்தலாட்ட முறையில் பெற்றதல்ல என் மேற்படிப்பின் பட்டங்கள். எனது ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்ட ஆய்வேடுகளின் இடையே இடப்பட்டுள்ள நிறுத்தக் குறிகள் கூட என்னுடையதே. எனது நெறியாளர் என்னைச் 'சூரப்புலி' என்பார். சுதந்திரமாக என்னை ஆய்வு செய்து எழுத அனுமதித்தார். முறை யான முழு நேர முனைவர் பட்ட மேற் படிப்பு. இப்படியான முனைவர் பட்ட மேற்படிப்பு என் திறத்தினை உயர்த்தி ஆசிரியப்பணியை ஏற்றுக்கொள்ளவைத்தது. அதுமட்டுமின்றி, என் தந்தையின் நிலுவை யிலிருக்கும் எண்ணமும் நிறைவேறி யதில் பெருமகிழ்ச்சி. ஆயினும், வழக்கம்போல் நேர்மையும் திறமையும் கொண்ட ஒரு வனை இவ்வுலகம் எப்படி அரசியல் செய்து மூடி மறைக்கச்செய்யுமல்லவா அதனைச் சகித்துக்கொண்டவாறு இயங்கிக் கொண்டிருக்கின்றேன். எவ்வாறெனினும், என்னிடம் பயின்ற, பயின்று கொண்டிருக்கும் மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருப்பதில் மகிழ்ச்சியே.



ராஜராஜசோழன் கல்லறையில்...

## 20. தமிழ்நெஞ்சம் இதழ் குறித்து.

நண்பர் தமிழ்ச்செம்மல் இராம. வேல்முருகன் அவர்களால் தான் தமிழ்நெஞ்சம் இதழ் ஆற்றுப் படுத்தப் பட்டது. அவ்வப்போது எனது பங்களிப்பும் இவ்விதழ்களில்! ஓர் நேரிசை ஆசிரியப் பாவினால் தமிழ் நெஞ்சம் இதழ் குறித்து:

*இமிழ்கடல் மூன்றுடன் இமயமும் வடக்கினில்*
*தமிழ்நில மென்றே சமைந்தது முன்பு*
*இமிழ்கடல் தாண்டி ஏனைய உலகிலும்*
*தமிழ்மொழி புழங்கும் தளமாம் இன்று!*
*பிரான்சு நாட்டினில் திங்க ளோர்முறை*
*பிறக்கும்! பிறந்து மின்வழி கிடைப்பதால்*
*எளியோ ராயினும் எளிதினில் பலனுற*
*உளியால் செதுக்கும் நுட்பத் திறந்தோய்*
*பொன்விழா கண்ட பூவிதழ் இஃதே!*
*பண்ணுடன் கவிதை பல்சுவை அடங்கிய*
*ஒண்ணிதழ் கொல்லோ? ஒப்பிலா நோன்பும்*
*மொழியுடன் வாழ்க்கையே முழுமை என்றும்*
*வழியை அமைத்து களத்தினில் அமினார்!*
*கட்டுரை பலவும் கதைத்திடும் புதியவை*
*மொட்டென மலர்ந்து முத்திடும் கவிதைகள்!*
*சட்டென நிமிர்த்துந் தரத்தினில் சிறுகதை!*
*கொட்டிடும் முரசாய் நேர்காணல் நிரலுற*
*பேரிதழாய்த் தமிழ்நெஞ்சம் கொல்லோ?*
*தூரிகையாய் எழுத்தைத் துலக்குந் தானே!*

# அறம் பேசுமா

**உமாஸ்வாமிநாதன்**
பெங்களூரு.

கணேசன்... ஒரு சின்ன கம்பெனியில் வேலை பார்த்து வந்தான். பல நாட்களாக வேலை எதுவும் இல்லை. சம்பளப்பணமும் பாதியாக குறைந்தது. முதலாளி வேறு இடத்தில் வேலை தேடி கொள்ள சொல்லிவிடவே பல இடங்களில் வேலை தேடி கொண்டிருந்தான் சின்ன வேலை யா இருந்தாலும் செய்தான்.

இப்பொழுது பணமும் தேவை பட்டது. அன்றும் பல இடங்களில் கேட்டு பணம் கிடைக்கவில்லை.

வரும் வருமானம் குடும்பத்துக்கு போதாமல்.. அவன் அம்மா வுக்கு மருந்து வாங்க னும், பிள்ளைக்கு பள்ளியில் கட்டணம் கட்ட நாளையோடு கடைசி நாள். மிகவும் சோர்வுடன் வீட்டுக்கு வந்தான்.

அங்கு,பள்ளியில் வகுப்பாசிரியர் ராமன், இன்னும் பரீட்சைக்கு கட்டணம் கட்டாதவர்கள் யார் யார்? நாளை கடைசி நாள்.

கணேசனின் மகன், மாணிக்கம் எழுந்து நின்றான். ரொம்ப அவமானமாக இருந்தது. அவன் ஒருவன் தான் கட்ட வில்லை.

படிப்பில் முதல் மாணவனாக இருந் தும் இந்த வறுமை அவனுக்கு வேதனை.

நாளைக்கு கட்டவில்லை என்றால் பரீட்சை எழுத முடியாது! என்று கோபத்துடன் சொன்னார் ஆசிரியர்.

பள்ளி முடிந்து வேதனையுடன் நடந்து வந்து கொண்டிருந்தான். அவன் தந்தை படும் கஷ்டம் புரிகிறது.

வீட்டுக்கு நடந்து வந்து கொண்டி ருந்தான்.வரும் வழியில் ஒரு பை தெரு வில் இருந்தது. இது நம்ம ஆசிரியர் பை ஆச்சே!.. சைக்கிளில் போகும்போது தவற விட்டிருக்கலாம்? என்று உள்ளே பார்த்தான் உள்ளே அன்று வாங்கிய சம்பளம் பேங்க் பாஸ் புக் இன்னும் சில முக்கிய ரசீதுகள் இருந்தது.!!

நேரே "போலீஸ் ஸ்டேஷன்" போய் நடந்ததை சொன்னான். அதில் ஆசிரியர் வீட்டு முகவரியும் தொலைபேசி எண்ணும் இருந்தது.

போலீஸ் மாணிக்கம்..

அப்படி உட்கார் என்று சொல்லி

ஆசிரியர்க்கு போன் பண்ணி வரச் சொன்னார்கள்.

ஆசிரியர் வந்ததும் ரொம்ப நன்றி. ரொம்ப முக்கியமான ரசீதுகளும், சம்பளப் பணமும் இருந்தது. ரொம்ப ரொம்ப நன்றி என்றதும்,

போலீஸ் அதிகாரி, ''நன்றியை உங்க மாணவனுக்கு சொல்லுங்க. உங்கள நினைச்சி பெருமையாய் இருக்கு பள்ளியில் பாடம் மட்டும் இல்லாமல் ஒழுக்கமும் கற்று கொடுத்தீர்கள்'' என்றதும்,

மாணிக்கத்தை பார்த்ததும், ஆசிரியர்க்கு தான் காலையில் அவனை திட்டியது ஞாபகம் வந்தது.

வா.. மாணிக்கம், வீட்டுக்கு போலாம் நானே உன்னை கொண்டு விடறேன் நாளைக்கு உனக்கான கட்டணமும் கட்டிவிடறேன் என்று கிளம்பினார்.

அதற்குள் அந்த அதிகாரி, மாணிக்கம் உன்னுடைய ''நேர்மைக்கான பரிசு'' என்று ஒரு ஐநூறு ருபாய் கொடுத்தார். மாணிக்கம் தயங்கவே ஆசிரியர் இது உன்னுடைய நேர்மைக்கு பரிசு வாங்கிக்கோ என்றதும், வாங்கிக்கொண்டான்.

ஆசிரியர் ராமன், மாணிக்கத்திடம் என் பை கிடைத்ததோடு நல்ல பெயரும் வாங்கி குடுத்துருக்கே ரொம்ப நன்றி மாணிக்கம் என்று சந்தோஷப்பட்டார்.

''என்ன சார் இது! நான் உங்க மாணவன் என்கிட்டே போய்....'' நன்றிலாம் என்றான்

மறுநாள் மாணிக்கத்தின் புகைப்படம் அதோடு ''ஏழ்மையிலும் நேர்மை'' என்று அவனுடைய நேர்மை, மிகவும் புகழ்ந்து எல்லா நாளிதழிலும் வந்திருந்தது.

கணேசனுக்கு ரொம்ப பெருமை நாம் வறுமையில் இருந்தாலும், பிள்ளைகளை அறம், நேர்மை, ஒழுக்கத்துடன் வளர்த்திருக்கோம். நாம் செய்யும் தர்மம் நமக்கு நல்லதே செய்யும் என்று நம்பினான்.

போலீஸ் அதிகாரி கொடுத்த ஐநூறு ரூபாய் குடும்பத்துக்கு மிகவும் உதவியாயிருந்தது.

குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே நல்ல குணங்களுடன் வளர்த்தால் அவர்களுடைய நல்ல எண்ணமும், குணங்களும் அவர்களுக்கு நல்ல பெயரை வாங்கி கொடுக்கும்.

# அழவணம்

மருதோன்றி மைலாஞ்சி
அழவணம் மருதாணி

பசியத்தைச் சிகப்பாக்கும்
மருதாணி வேதியியலில்

உன் விரல்கள் மட்டும் எப்போதும்
அதிக மதிப்பெண்களுடன்
தேர்ச்சி பெற்று விடுகின்றன

பூக்கள் மேல்
அபிலாசை நிறைந்த உலகத்தில்

இலைகளில்
மருதாணிக்கு மட்டும் தான்
மவுசு

அதனால் மனமுடைந்த
மருதாணி பூக்கள்
நெஞ்சில் கனல் சுமக்கின்றன

அவை சுமந்த கனலை
நீ உள்ளங்கைகளில்
பிரதிபலிக்கிறாய்
அவ்வளவே.

- மு. ஆறுமுகவிக்னேஷ்

# கம்பெனிச் சோறு

**எஸ். மைக்கேல் ஜீவநேசன்**

**தேனி.**

நாளையும் நாளை மறுநாளும் விடுமுறை என்பதால் இன்று எப்படியும் பால்ராசு வந்துவிடுவான். சின்னத்தாயி கூலிக்கு போகவில்லை.தன் தவப் புதல் வனை எதிர் நோக்கும் ஆவல்.விடிந்ததும் வீட்டை சுத்தம் செய்து, முத்துக்கண்ணு வீட்டு மாட்டுத் தொழுவத்தில் சாணி எடுத்து வந்து வாளியில் போட்டு பதமாக கரைத்து பழைய துணியில் தோய்த்து வீடெல்லாம் மொழுகினாள். பின்பு சுண்ணாம்பை கெட்டி யாக குழைத்து அதற்கான திட்டமான துணியில் தோய்த்து விதவிதமான கோலங் கள் போட்டாள். அடுப்பங்கரை, உள்வீடு, வாசல் என்று அலங்கரிப்பு செய்தாள். பால்ராசு வந்துவிடுவான் என்ற நினைப்பு உள் மனதில் உற்சாகத்தையும் குதூகலத்தையும் தந்தது. வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டும்தான் வீட்டில் இருப்பான்.மற்ற நாட்களில் டவுன் பள்ளிக் கூடத்தில் படித்துவிட்டு அரசினர் மாணவர் விடுதியிலேயே தங்கிவிடுவான். பால்ராசு, தன் கிராமத்தில் எட்டாம் வகுப்பு வரைதான் படித்தான். அதற்கு மேற்கொண்டு படிக்க டவுனுக்குத்தான் போக வேண்டும்.

வானத்தை துடைப்பது போல் கூட்டம் கூட்டமாக வளர்ந்து நிற்கும் பனைமரத் தோப்பிற்கு நடுவேதான் பால்ராசுவின் குக்கிராமம். அங்கிருந்து பிரதான சாலைக்கு வருவதாகயிருந்தால் குறுகிய சாலையில் அரை மணி நேரம் நடக்க வேண்டும். பிரதான சாலையில்தான் ஆசிட் கம்பெனி இருக்கிறது. பிரபலமான ரசாயன தொழிற் சாலைக்குதான் 'ஆசிட் கம்பெனி' என்று பெயர். மாந்தோப்புகளை அழித்து ஆலை உருவாகியிருந்தது. உள்ளூர் மக்களுக்கு அதில் வேலை வாய்ப்பு மிகவும் குறைவுதான். வடமாநிலத்தை சேர்ந்தவர்களே அதிகம் பேர் வேலையில் இருக்கிறார்கள். மூன்றுவிதமான பணி நேரங்களில் நிறுவனம் இயங்குவதால் ஆட்களை அழைத்து வருவதற்கும், வீட்டிற்கே சென்று விடுவதற்கும் சொகுசு வாகனங்கள் முழு நேர வாடகைக்கு அமர்த்தப் பட்டிருக்கின்றன. விவசாயம் அற்றுப் போய் குறைந்த விலைக்கு நிலம் தந்தவர்களெல்லாம் ஊர் பொது மரத்தடி திண்ணையில் பழங் கதை பேசி பொழுதை கழிக்கிறார்கள். பால்ராசுவின் கிராமத்தையும் இன்னும் சில கிராமங்களையும் அந் நிறுவனம் தத்தெடுத்து சாலை வசதிகளையும், மரங்களும், குடிநீர் தொட்டிகளும் இலவசமாக அமைத்து தந்து பராமரிக்கவும் செய்கிறது.

ஊரிலிருந்து டவுனுக்கு போவதா யிருந்தாலும், டவுனிலிருந்து ஊருக்கு வருவதாயிருந்தாலும் ஆசிட் கம்பெனி பேருந்து நிறுத்தத்திற்கு வர வேண்டும். இங்கு நூற்றைம்பது பேருக்கும் மேல் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு காலை, மதியம் மற்றும் இரவு வேளை சாப்பாடுகளை நிர்வாகமே தயாரித்து

வழங்குகிறது. அதற்கான கேன்டீன் தொழிற் சாலையின் பின்புறம் உள்ளது. சிற்சில நேரங்களில் தொழிலாளர்களின் வருகை குறைந்துவிட்டாலோ அல்லது இரவு வேலை ரத்தாகிவிட்டாலோ சாப்பாடு அபரிமிதமாக மிஞ்சிவிடும். அப்படி மிஞ்சும் சாப்பாடுகளை அவர்கள் வீணடிப்பதில்லை. பால்ராசுவின் கிராமத் திற்கு எடுத்து வந்து தானமாக வழங்கி விடுவார்கள். இது போன்று மாதத்தில் நான்கைந்து நாட்கள் நடப்பதுண்டு.

சின்னத்தாயி இரண்டு நாட்களுக்கு முன்பு அரைத்து வைத்திருந்த கேப்பையில் களியும், முனியாண்டி கடையில் வாங்கிய உப்புக் கருவாடையும் போட்டு குழம்பும் வைத்திருந்தாள். வீட்டில் இருக்கும் போது பால்ராசுவுக்கு கேப்பை களியும்,கம்பஞ் சோறும்தான் அநேக நேரங்களில் கிடைக்கும். கறிச் சோறு என்றால் பால் ராசுக்கு அலாதி பிரியம்தான். நியாய விலை கடையில் கிடைக்கும் அரிசியை உண்ண மனம் ஒப்ப வில்லை. அதை அவித்து மாட்டுக்குதான் போடுகிறார்கள். மருகி மருகி யோசித்து கேப்பை களியும், கருவாட்டுக் குழம்பும் வைத்திருந்தாள்.

வாசலில் பெல்லு சப்தம் கேட்டது.மேலத் தெரு முத்துக்கருப்பன் சைக்கிளில் வந்து இறங்கினான் பால்ராசு 'அம்மா'- என்று கூவிக் கொண்டே எட்டு வைத்து உள்ளே வந்தான். உள் வாசலில் தலை வைத்து சித்த நேரம் உடம்பை சாய்த்திருந்தாள் சின்னத்தாயி. ‘ஆத்தாடி எம்புள்ள வந்திட்டியான்’ என்று உரத்த குரலுடன் எழுந்து சீலை முந்தானையை மேலே போட்டு பாசப்புனல் மடை உடைய சந்தோச வெள்ளமாய் ஒடி வந்து கட்டியணைத்தாள். சிறிது நேரம் தன் அம்மாவிடம் பேசியிருந்துவிட்டு,

“எங்கம்மாமணிய(நாய்)காணோம்?”

“அத உங்கொப்பேன் கொன்னு போட்டாக”

“ஏம்மா!”

“அத.. ரெண்டு நாளா காணோம், நானும் உங்கொப்பாவும் தேடோ தேடுனு தேடுறோம்...”

“............”

“அப்புறதேன் உங்கொப்பா கரட்டுக் காட்டுச் செவ போயி பாத்தாக. மானத்துல கழுகு வட்டம் போட்டுக்கிட்டு இருக்குதே, எங்கேயாவது மாடுகண்ணு செத்துக்கித்துக் கெடக்குதோன்னு. அங்கன தேன் அவ ஆம்புட்டா. நம்ம வண்ணாப்பய கழுத செத்துச் போச்சாம். ஊர்ல இருக்கிற அம்புட்டு நாயிகளும் அங்கதேன். ஊளையிடுறதும் சண்டை போடுறதும் எல்லாம் கறித் துண்டுக்காக. அதுக்கப்புறம் அது போக்கே சரியில்ல. சீர் கெட்டுப் போச்சு. போறவாரவுகள கடிக்கினு உங்கப்பேன் ஒலக்கய கொண்டி ஒரே போடாபோட்டாக...!”

“............!”

“நம்மபுறவாசதென்னம்பிள்ளைக்கு பக்கத்துல பொதச்சிருக்கு...”

ஊரில் இருந்த கடைசிக் கழுதையும் செத்துப் போனது. இனி கடைகளில் படமாகதான் பார்க்க முடியும். என்னை பார் யோகம் வருமென்று.

அந்த மத்தியான நேரத்து ஏகாந்த வேளையில் தெருவில் யாரோ கூவினார் கள். 'சின்னத்தாயி கம்பேனி சோறு போடுதாக ஓடியா..!' தெருவில் யாரோ கொடுத்த அழைப்பு கணப் பொழுதில் குஷிப்படுத்தியது. சோத்துக்கு ஒரு சட்டி யும் குழம்புக்கு ஒரு சட்டியும் எடுத்துக் கொண்டு சேலையை அள்ளி சொருகிக் கொண்டு ஓடினாள். பள்ளிக் கூடத்து வாசலுக்கு. அங்கே வைத்துதான் கம்பெனி சோறு போடுவார்கள்.நல்லா இருக்கோனும் மகராசா என்று வாழ்த்திக் கொண்டு கெழடு கட்டைகள் வரிசையில்

நின்று கொண்டார்கள். சின்னத்தாயியும் வந்து நின்ற போது வரிசை நீண்டிருந்தது. அன்று மீதியிருந்த சோறு இருபத்தைந்து பேர் வயிறார சாப்பிடலாம். ஆனால், வந்து நின்றவர்கள் நாற்பதுக்கும் மேல். அதில் சின்னத்தாயி ஏறக்குறைய முப்பதாவது இடத்தில் நின்றிருந்தாள். சின்னத்தாயிக்கு மனசு 'திக், திக்' கென்று அடித்தது. தன் குல தெய்வத்தை வேண்டிக் கொண்டாள். 'அய்யனாரையா இன்னிக்கு என் புள்ள வந்திருக்கு கறிச் சோறுண்டா கொள்ள பிரியம் அதுக்கு. எப்படியாவது ஒரு வா சோறு கெடைக்கனும் சாமி!' அவள் கும்பிட்டு நிமிரும் போது எங்கேயோ கெவுளி சத்தம் கேட்டது. சின்னத்தாயிக்கு மனசெல்லாம் நிறைஞ்சு போனது. வரிசை கொஞ்சம் கொஞ்சமாக கரைந்து கொண்டு வந்தது. இன்னும் நாலு பாகம் சோறுதான் இருக்கும்.சின்னத்தாயியை சேர்த்து எட்டு பேர் நிற்கிறார்கள். அதை எட்டு பேருக்கு பங்கிட்டு கொடுத்தாலும் சண்டை வந்துவிடும். சின்னத்தாயிக்கு பின் நின்றிருந்த முண்டக் கன்னி மூக்கம்மாவுக்கு பசி பொறுக்கவில்லை. வரிசையின் கட்டுக் கோப்பை உடைத்து முன்னேறினாள். மு.மூக்கம்மாவுக்கு பின் நின்றிருந்தவர்களும் வரிசையை உடைத்தனர். இப்போது நாலுபாக சோற்றுக்காக நீயா நானா என்று அடிதடி சண்டை ஆரம்பமானது. ஒரு கணம் பால்ராசுவை நினைத்து பார்த்தவளுக்கு எங்கிருந்து வந்ததோ புது வேகம். ஒரே பாய்ச்சலாக முன்னே செல்ல எத்தனித்த போது,'நங்ங்...!' என்று நெற்றிப் பொட்டில் பலமான அடி இடியாக இறங்கியது. நல்ல பித்தளையில் வார்க்கப்பட்ட தூக்குப் போனியால் மு.மூக்கம்மாதான் மூர்க்கமாக அடி வைத்தாள். அலைகுலையாகி சரிந்தாள் சின்னத்தாயி.அந்த சூழலில் அவளை தாங்கி பிடிக்க கூட யாரும் முன் வரவில்லை. அந்த கறிச் சோற்றுக்காக நாய் சண்டை பேய் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். சோற்றுப் பானை சுத்தமாக துடைத்து எடுக்கப்பட்ட பின் இனி பிடி சோறு கூட கிடைக்காது என உணர்ந்த பின்தான் கூட்டம் கலைந்தது.

மு.மூக்கம்மா கணவனை இழந்து ஒரு வாரிசும்மின்றி தனிக்கட்டையாக வாழ்ந்து ஏறக்குறைய மனநிலை பாதிக்கப் பட்ட ஒரு கைம் பெண்.காடுகழனிகளில் மாடாக உழைப்பாள். சலிப்பின்றி உழைக்கும் அவளுக்கு கூலி ஒரு வேளை சாப்பாடுதான். அப்படி எத்தனை பேர் கழனிகளிலும் மாட்டுத் தொழுவத்திலும் அசூயை பாராமல் ஓடாக தேய்ந்திருப்பாள். அந்த மன நோயாளியை தண்டிக்கவும் சீர் திருத்தவும் யாரும் முன் வரவில்லை.

சின்னத்தாயி அடிபட்ட சேதி தீயாக பரவியது. ஒரு சாண் வயிற்றுக்குதான் இந்த பாடு என்று ஊரெல்லாம் ஹாஸ்யம் பேசிக் கொண்டார்கள்.அந்த சிறுக்கியை ஊரைவிட்டே துரத்தனும் என்று ஒரு சிலர் கறுவிக் கொண்டனர்.ஒவ்வொரு முறையும் கம்பெனி சோறு போடும் போது புதுப் புது பகையாளிகள் உருவாகிறார்கள். உறவுகள் முறிந்து சந்தோசங்கள் உதிர் கின்றன. மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட சின்னத்தாயி வீடு திரும்பினாள்.

ஆயிற்று! சில வாரங்களுக்கு பின் எப்போதும் போல் வாரக் கடைசியில் விடுமுறைக்காக வீடு திரும்பினான் பால்ராசு.ஆசிட் கம்பெனியின் பின்னால் நிறைய பேர் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். இருபத்தைந்து பேர் சாப்பிடும் அளவிற்கு சாப்பாடு அன்றலர்ந்த மல்லிகையாய் இருந்தது. மணக்க மணக்க வைக்கப்பட்ட சாம்பார், ரசம், பொரியல் என அத்தனையும் மூன்றடி பள்ளத்தில் போட்டு மண்ணை தள்ளி மூடிக் கொண்டிருந்தனர். அந்த நிறுவனத்தின் பொது மேலாளரின் உத்தரவுப்படிதான் நடந்தது.நல்ல பசி மயக்கத்தில் இருந்த பால்ராசுக்கு அந்த காட்சி அடி வயிற்றில் அமிலத்தை கரைத்தது போல் இருந்தது. ஆனால், இனி ஊருக்குள் சோத்துச் சண்டை வராது என்று நினைக்கும் போது பசி மறந்து இனம் புரியாத சந்தோசம் உடலெங்கும் பரவியது!

# மணிக்கூ

1.
நதிகள் கொண்டாடின
ஹோலிப்பண்டிகை!
உபயம் சாயக்கழிவுகள்....

2.
எப்படித்தான் ஓடிக்கொண்டேயிருக்கின்றன
கடிகாரத்தின் கால்கள்
முட்களோடு....

3.
ஓடிவந்த நதியின்
வியர்வைகலந்ததில்
உப்புக்கரிக்கின்றதோ? கடல்.

4.
சிசேரியனுக்கு வழியில்லை
பிரசவலியில் துடித்தபடி
தெருநாய்...

5.
ஏணிமீது பாம்பு
வித்தியாசமான பரமபதம்
இரயில்வண்டி...

6.
தாங்கமுடிய பாரம்
பூமித்தாயின் தலைமீது
குழந்தையின் கல்லறை...

7.
வரிஏய்க்கும் பொய்கணக்கையும்
தொடங்குகின்றர்
பிள்ளையார்சுழி போட்டு...

8.
மார்கழி தோறும்
புல்வெளியில் ஆரம்பம்
பனி(யின்)ச்சருக்கு விளையாட்டு....

9.
பார்க்கடலை
பாம்புதீண்டியதோ...
நுரைதள்ளிக்கொண்டேயிருக்கிறது...

10.
கண்மருத்துவருக்கும்
இருக்கத்தான் செய்கிறது
பார்வை நேரம்...

11.
புகைவிடாத புகைவண்டி
குழந்தைகளின் விளையாட்டு
தப்பித்தது காற்றுமண்டலம்...

12.
நீ சிற்பியா?
இல்லை தச்சனா?
மரங்கொத்தியே சொல்...

13.
சங்கிலியை இழுத்ததும்
நிற்கிறது வண்டி
இரயிலுக்கும் மூக்கணாங்கயிறோ...

14.
வாகனங்கள் விலகிச்சென்றதில்
ஒற்றையடிப்பாதை
வேகத்தடைகளின் பக்கத்தில்...

15.
மிதிவண்டி மிதிவாங்குகிறது...
மூச்சிறைக்கிறது
ஓட்டுபவனுக்கு...


**அ. கேசவராம்**
கும்பகோணம்

– ரிஸ்வான்



# பூமாக்கிழவி..4

**ரிஸ்வான்**
**தேநீர் நேரக்கதை**



**பூமாக்கிழவி எனும் ராக்காச்சி**

– ரிஸ்வான்

தொடர் நாவல்

காலையில வெள்ளன பொண்ணு தாயீ தன்னோட மவள கூட்டிக் கிட்டு குடிசைக்கு வந்து இருந்துச்சி மனசுக்குள்ள குழப்பத்தோட..

ஏன் பொண்ணுதாயீ மொகம் வெளுத்துப் போயி கண்ணுங்க இருண்டு கிணத்துக் குள்ளாற கெடக்கு.. மூஞ்சி சோவப் பண்டாரமாட்டும் சூம்பி கெடக்கு உடம்புக்கு சொவமில்லையா..

எனக்கு இல்லை ஆத்தா.. புள்ளைக்கு என்ன ஆச்சுன்னு தெரியல அடி வயித்துல வலிக்குதுன்னு உசுரு போறாப்பல கத்துச்சி. என்கிட்டயும் எதையும் காமிக்க மாட்டிங்குது.. புத்தி தடுமாறிபோயிடுச்சு பொழுது விடிஞ்சிடுச்சி.. பொட்டுத் தூக்கமில்ல..

ஒண்ணுமிருக்காது கர்பசூடு ...தீட்டு வர்ற நேரத்துல தீட்டுப் பையில கம்மான் சம்மட்டியால அடிக்கிறாப் போல அடி வயித்துல பொம்னாட்டிங்களுக்கு வர்ற வலியாதான் இருக்கும்.. உனக்கு தெரியாதா உசுரே போயிடும்.. சின்ன புள்ள வலி தாங்க முடியாம அழுது இருக்கும்.. நீ அங்கிட்டு மரத்தடியில குந்திக்க.. புள்ளைய நான் பாக்குறேன்.. காலைக் கஞ்சி குடிச்சியா..

இல்லை ஆத்தா பொறவு குடிசைக்கு போயி பாத்துக்குறேன்..

சரி ஆத்தா.. நான் அங்கன கெடக்கேன்.

பொண்ணுத்தாயி தள்ளிப் போயி புங்க மரத்துக் கீழ முந்தானையை சும்மாடு போல சுருட்டி தலைக்கு வச்சு அசதியில மண் தரையில படுத்து கிடுச்சி... இந்த புள்ள ஏன் நேத்து அப்படி துடிச்சுது..

பூமாக்கிழவி பொண்ணுதாயீ பொண்ணை குடிசைக் குள்ளாற உக்காத்தி வச்சிது..

பூமாகிழவியை பாத்ததும்.. மழைத் தண்ணீயில நனைஞ்சு போன கோழிக் குஞ்சாட்டும் நடுங்கி ஒடுங்கி கிட்டு இருந்துச்சி..

பூமாதாயி கிட்ட உண்மையை சொல்லலாமா என்னன்னு சொல்லுற

துன்னு ஒன்னும் விளங்காம முழிச்சி கிட்டு இருந்துச்சி வலி உசுர புழிஞ்சி எடுத்துச்சி..

பேரென்னடி பொட்டச்சி..என்னாச்சி ஒனக்கு..

சுந்தரி.. ஆத்தா..

எனக்கு ஒண்ணுமில்ல ஆத்தா ராத்திரியே எல்லாம் சரியாயிட்டு.. நான் என் ஆத்தாக் கூட ஊட்டுக்குப் போரேன்னு அழுது கிட்டே எந்திரிச்சது.

எங்கே வலிக்குதுன்னு காட்டு..

இங்க வலிக்குதா கிழவி தொப்பு ளுக்கும் பிறப்பு வாசலுக்கும் நடுக்கால கையை வச்சி அழுத்தி பார்த்துச்சு..

வலிக்குதாடி பொம்பள.

இப்ப இல்ல ஆத்தா.. ராத்திரி இருந் துச்சி என்னை வுடு.. ஆத்தாக் கூட நான் ஊட்டுக்குப் போறேன்..

வலி இல்லன்னா ஏண்டி முகத்தை சுழிச்சி கிட்டு தவிச்ச.. சிறுக்கி யாரை ஏமாத்துற.. விளக்குமாறு பிஞ்சிறும்.. மல்லாக்க படுடி..

வேணாம் ஆத்தா என்னை விட்டுடு.

சுந்தரி பயத்துல அழுதுச்சி..

பூமாக்கிழவி பராந்து கோழி குஞ்சை அமுக்குவது போல் சுந்தரியை அழுத்தி மல்லாக்கா படுக்க வச்சி பாவாடையை விலக்கி பாத்துச்சி..

என்னடி ஆச்சி.. முண்டை.. ஒன் பொறப்பு வாசல் ஏண்டி இப்படி ரத்தக் கௌரியாக கெடக்கு..

எவன் கூட கூத்தடிச்சே.. சொல்லுடி.

அருவாமனைய தொண்டைக் குழி யில இறக்கிப் புடுவேன்..

தெரியாது ஆத்தா.. நீ என்ன சொல்லுதேன்னு எனக்கு ஒன்னும் வெளங் கல்ல...

முந்தாநாளு பள்ளிக் கூடத்துல ஆண்டு விழா.. வீட்டுக்குத் திரும்ப நாழி யாயிடுச்சு.. இருட்டிடுச்சி ஆத்தா தேடும்னு சுருக்கா போவறதுக்கு நத்தமேட்டு ஏரிக்கரை நரிமதகு வழியா குறுக்கால நடந்து வந்தேன் இருட்டுல யாரோ என் பின்னாடியே வந்தாங்க.. மூஞ்சி முகம் தெரியல பயத்துல ஓடுன ஆத்தா.. ஆனா அவன் என்ன எட்டிப் பிடிச்சி.. கீழே தள்ளிட்டு என்னமோ அசிங்கமா செஞ்சான்.. அதுல இருந்து அடி வயித்துல வலி உசுரு போவுராப்போல இருந்துச்சி... காயம் பட்டிருக்கு.. இரத்தம் வந்துச்சி.. யார் கிட்ட என்ன எப்படி காட்டா றது என்ன சொல்லுறதுன்னு விளங்கல.. ஆனால் இருக்க இருக்க வலி தாளமுடியல வெளியே சொல்ல என்னவோ கூச்சமா தயக்கமா பயமாவும் இருந்துச்சி சாவக் கூட போயிட்டேன்..

ஆத்தா கிட்ட சொல்ல பயம். ஆத்தா அழும்.. அப்பன் இல்லாததால அதுக்கு ஆதரவு யாருமில்ல.. எல்லாத்தையும் ஒத் தையா தலையில சொமக்குது..

அட நாதாரி வெறி புடிச்ச பன்னாடை.. பல பேத்துக்கு பொறந்த வனே.. சின்ன சிசுவை செதைச்சி இருக்கீ யடா.. கொள்ளை நோய்வந்து துள்ளத் துடிக்க அள்ளிக்கிட்டுப் போக.. பொம்ப ளையப் பாத்தா பொத்துக்கிட்டு நிக்கும் ஒன்... யில புத்துக் கௌம்பி குலம் விளங்காமப் போவ..

பூமாக்கிழவிக்கு ரவுத்திரம் உச்சிக்கு ஏறிடுச்சு... இப்ப அந்த கம்முனாட்டி கையில சிக்கி இருந்தா வாழமட்டையில நாரு உரிக்கிறாப் போல உரிச்சி உப்பு ஓரப்பு தடவி தோரணம்கட்டித் தொங்க விட்டிருக்கும்

நீ புஷ்பவதி சடங்காயிட்டியா.. தாயீ...

ம்ம்ம்.... போன மாசம்..

மறுதீட்டு வந்துச்சா.. தாயீ

இன்னும் இல்ல.. ஆத்தா

வயசு என்னாடி..

# தன்முனைக் கவிதைகள்

## துரைராஜ், ஆடுதுறை

**பொம்மலாட்டம் :**

கை விரல்களில் கயிற்றிலாடும்
பொம்மைகளின் ஆட்டங்கள்
உயிர் கயிறு அறுந்துவிட்டால்
ஆட்டம் நின்றுவிடும்.

**கவிஞன் :**

இன்பம் துன்பம் எனும்
இரட்டைச் சிறகணிவான் - கவிஞன்
விண்ணில் உலா வரும்
வீரியப் பறவை அவன்.

**காதல் :**

காதலில் நின்றவன் கையடித்தே
கணமதில் தந்தான் உறுதிகளை
காதலும் சென்றபின் உறுதிகளும்
காற்றுடன் காற்றாய் கலந்தனவே.

**புரிதல் :**

புரிதல் இல்லாத வாழ்க்கை
துடுப்பு இல்லாத படகாகும்
சிறிது தூரம் மிதக்கலாம்
தொலைதூரம் கடக்க முடியாது.

**கஷ்டம் :**

கஷ்டப்பட்டு நான்
முன்னுக்கு வர நினைத்தேன்
கஷ்டம் மட்டுமே மறுபடியும்
முன்னுக்கு வந்தது.

பதினொன்னு.. ஆத்தா கிட்ட எதையும் சொல்லிப்புடாதே.. தாயீ.. ஆத்தா.. செத்து போயிரும்..

கடவுளே... நீயெல்லாம் பூமியில ஏன் இருக்கே.. யாருக்கு காவல் காக்க..

இதப் பாருடி பொட்டச்சி.. இதை பத்தி யார்கிட்டயும் ஒன்னும் பேசாதே.. பொண்ணுதாயீ கிட்ட உசுரு போவுர வரைக்கும் எதுவும் சொல்லாதே... பாவம் அவ ஆம்பள தொணை இல்லாத ஒத்தை பனைமரம் தாங்கிக்கிட மாட்டாள். இந்த பேச்சு உனக்கும் எனக்கும் ஊடால மட்டும் சாமி இரகசியமா இருக்கட்டும்.. உனக்கு நடந்ததை ஆத்தா மனசுல பொதைச்சி வச்சிக்கிடுதேன்.. செத்த பொறவு என்னோடு புதைக்குழிக்கு கொண்டு போயிடுதேன்.. நான் என்ன சொல்லுதேன்னு அர்த்தமாச்சா.. வெளிக் காயம்தான்.. உள்ளுக்க ஒன்னும் ஆவுல.. எல்லாம் வெளிக்கே சோலி முடிஞ்சி போயிருக்கு..

என்ன ஆத்தா சொல்லுதே ஒன்னும் வெளங்களை.. எனக்கு என்ன நடந்துச்சி

வெளங்கி கிடுற வயசு இல்லடி தாயீ உனக்கு.. ஏதோ நாயீ மோந்து பாத்துட்டு மூத்திரம் பேஞ்சிட்டு போனதா வச்சிக்க..

ஆத்தாவுக்கு தெரிஞ்ச கைவைத்தியம் பாக்கேன்.. மிச்சதை சாமி பாத்துக்கும்..

எவன் செஞ்சான் அது இதுன்னு குப்பைய கிளறுனா ஊருலதான் நீ நாறிக்கிட்டு கெடக்குனும்.

பூமாக்கிழவிக்கு பக்குவம் தெரியும். ஆசுபத்திரிக்கு போனா டாக்குட்டரு கேக்குற கேள்விக்கு பதில் சொல்லி பொட்டச்சிக்கு மானக்கேடாகும். நாமளே ஊரு காத்துல தூத்தி உட்டாப்போல ஆயிறும். ஒன்னும் புரிஞ்சிகிடாத பச்சை மண்ணு.. வாழ்க்கைதான் நாசமத்து நாறிக் கிட்டு கெடக்கும். நாமளே ஊருக்கு

வெளிச்சம் போட்டு பயாஸ் கோப்பு காட்டுனாப்போல ஆயிரும்..

ஆனால் இது உள்ளூரு சுத்துப் பட்டு கிராமத்து பயலுங்க வேலை யில்லைன்னு பூமாக்கிழவிக்குத் தெரியும்.

பூமாக்கிழவி இருக்குற ஊருன்னு நெஞ்சில பயமிருக்கும். ஒரு நாளைக்கு யாருன்னு தெரிஞ்சிடுச்சுனா ஒடம்பு தோலை உறிச்சி உப்பும் மஞ்சளும் தடவி வெயில்ல காயவச்சி உப்புக் கண்டம் போட்டு கஞ்சிக்கு தொட்டுக்கிட்டு திண்ணுடு வேன்னு தெரியும்.

சுந்தரிக்கு நடந்தது என்னவோ பெரிய தப்புதான்.. ஆனால் பூமாக்கிழவி எனும் ராக்காச்சி அதை பெருசா எடுத்து ருத்திர தாண்டவம் ஆடலை. ஊதி பெரி சாக்கி வெடிச்சி சிதறி போச்சுன்னா மானக்கேடு பொட்டச்சிக்குத்தான். தனக்கு என்ன நடந்துச்சின்னு புரிஞ்சிக்கிற வயசு கூட இல்லை அந்த சின்ன உசுரோட வாழ்க்கையை நாறிப்போக விடல. வாழ்க்கை யோட நெப்பத்தை உணர்ந்த பக்குவமானக் கிழவி..

இரு வாரேன்..

கிழவி எந்திரிச்சி போயீ மஞ்சளையும் வேப்பிலையியும்.. அரைச்சு சுந்தரி யோட பொறப்பு வாசல்ல காயம் பட்ட இடத்துல பத்து போட்டு அப்பி விட்டுச்சி சின்னப்புள்ள வலியோடு பத்துப்போட்ட எரிச்சலில் கத்துச்சி.. அழுதுச்சி..

சாமி பிஞ்சு உசுரு.. ஜன்னி கண்டு டாம பாத்துக்க..

பொண்ணுதாயீ இந்தா இங்கிட்டு வா..

உன் பொண்ணுக்கு என்னன்னு கூட பாக்காம அப்படி என்னடி உலகுத்துல மயங்கி கெடக்க..

ஒத்தையா நான் வயத்து பொழப் புக்கு அல்லாடறதுக்கே பொழுது சரியா இருக்கு..

என்னாச்சு ஆத்தா.. புள்ளைக்கு..

முந்தா நாளு ஒம்போண்ணு உசு கோல்ல இருந்து வர்றப்போ வழியில மாடு முட்டி தள்ளி ரோட்டுல குப்புற விழுந்து பொறப்பு வாசல்ல சரளைக் கல்லுங்க குத்தி காயம் பட்டு இருக்கு உன் கிட்ட சொல்ல கூச்சப் பட்டுக்கிட்டு வலியோட கெடந்திருக்கு...நான்மஞ்சளும்வேப்பிலை யும் அறைச்சி பத்து போட்டு இருக்கேன்.. ஒன்னை விட்டு ஒருநாளைக்கு இதே போல பத்து நாளைக்குப் போடு.. அப்பப்ப நிலவரத்தை கண்டிப்பா வந்து சொல்லு.. கூட்டிப்போ..

சாமி ஆத்தா நீயீ.. கை எடுத்து கும்புடுற தெய்வம்..

பூமாக்கிழவி பொண்ணுதாயி மவளுக்கு நடந்த மானக்கேட்டை, சாமி நேத்திக் கடத்துக்கு உண்டானதை மண் கலையத்துல மஞ்சள் துணி போட்டு கட்டி வைக்கிறாப் போல மனசோட ஆழத்துல கட்டிப் போட்டு இரகசியமா வச்சி கிடுச்சு.. பெத்தவளுக்கும் தெரியாது.. பாதிக்கப் பட்டவளுக்கும் தனக்கு என்ன நடந்துச்சின்னு ஒன்னும் தெரியாது...

சாமி இரகசியம்.. நீயே தீர்ப்பு குடுன்னு சாமி கிட்டயே விட்டுடுச்சி. சாமியும் காதுல வாங்கி கிட்டு சும்மா இருந்துடுச்சி. எல்லாத்தையும் பூமாக்கிழவி ஒப்பேத்திடும்னு சாமி நம்பிகிட்டு இருந் திருக்கும்.

இனி நடந்து முடிஞ்சு போன பொறவுசாமியைக்கூப்பிட்டுஎன்னபுரியோ சனம்... எல்லாத்தையும் பொறுமையா திண்ணையில உக்காந்து கேட்டு புட்டு.. கற்பூரத்தை காட்டு நான் போறேன்னு எந்திரிச்சு போயிறும்..

தொடரும்

# எழுதிப் பழகுவோம் 6



தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன் வலங்கைமான்

எழுதிப்பழகுவோம் பகுதியில் இம்மாதம் விருத்தம் எழுதிப் பழகு வோம். விருத்தத்தில் பல வகைகள் இருப்பினும் விருத்தம் என்றால் அது ஆசிரிய விருத் தத்தைத்தான் குறிக்கும். எளிமையான ஒரு விருத்தம் அறுசீர் விருத்தம். இதனைப் பாருங்கள்

பனியில்லாத மார்கழியா?
படையில்லாத மன்னவனா?
இனிப்பில்லாத முக்கனியா?
இசையில்லாத முத்தமிழா?

இவ்வரிகளை அறுசீர் விருத்த அடிகளாக மாற்றலாம். எப்படி?

பனியில் லாத மார்கழியா?
படையில் லாத மன்னவனா?
இனிப்பில் லாத முக்கனியா?
இசையில் லாத முத்தமிழா?

புளிமா தேமா கூவிளங்காய் வாய் பாட்டில் உள்ளது

இதனை மா மா காய் எனவும் சொல்லலாம்

அம்மா இங்கே வாவா
ஆசை முத்தம் தா தா

இதனையும் பாருங்கள்; இது மா மா மா என்ற வகையைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம்

இவற்றை அறுசீர் விருத்தமாக்க சில விதிகளை நாம் பின்பற்ற வேண்டும்.

அவை என்ன? நான்கு அடிகள்; அதாவது எட்டு அரை அடிகள் . நான்கு அடிகளுக்கும் ஒரே எதுகை; அடுத்தடுத்த அரையடிகளுக்கு மோனை வரவேண்டும். இதனை மட்டும் பின்பற்றினால் போதும் விருத்தம் வந்துவிடும்.

அம்மா இங்கே வருவாயா?
ஆசை முத்தம் தருவாயா?
சும்மா இருக்க முடியாதே!
சோற்றை ஊட்டி விடுவாயா?
பொம்மை வாங்கித் தருவாயா?
பூவைப் போலச் சிரிப்பாயா?
நம்மைக் காக்கும் இறையோனை
நாளும் வணங்கித் தொழுவோமா,?

எளிய சொற்களைப் போட்டு இதைப் போல் தாங்களும் எழுதலாமே?

## ஹைக்கூ

**வண்ண பலூன்கள்**
**இரவில் ஒளிரும்**
**மின் விளக்குகள்**

**விடிய விடிய**
**விழித்துக் கொண்டிருக்கும்**
**அலைபேசிகள்**

**ஓடும் வண்டி**
**முன்னோக்கிச் செல்கிறது**
**ஊர் நினைவுகள்**

Dr ஜலீலா முஸம்மில்



# காதல்...

குறள் வெண்செந்துறை

கண்களின் மோதல் காதலைத் தந்தது
மண்ணில் உயிர்க்கு மாண்பும் பிறந்ததே

உறவான அவளால் உருவான தீவானேன்
கருவான காதல் கடவுளுக்கும் மேலே

ஒற்றை மலரும் உள்ளம் உரைக்கும்
கற்றைக் கூந்தலுக்குள் காணாமல் போகையிலே

பார்வைத் தூண்டிலில் பருவமும் சிக்கிட
வேர்வரை பிடித்த வேதனை தீருமே

சிந்திடும் சிரிப்பில் சிதறினேன் நாளும்
வந்தவள் அன்பால் வாழ்வும் வசந்தமே

மங்கையின் நாணமும் மண்ணில் கோலமே
எங்கேயும் காதல் என்றும் வாழுமே

எழுதிய கிறுக்கலும் எழுதாக் கவிதையே
முழுமதி நிறைத்தாள் மூச்சின் எல்லையே

கடித்திடாக் கரும்பாய்க் கன்னியும் இனித்தாள்
படித்திடா என்னையும் பாவலன் ஆக்கினாளே

மா.பாலசுந்தரம்

# சந்தன விறகுகள்

நீலமலைச் சாரல் நெடிதுயர்ந்த குன்று
வாழவழி தேடும் வண்ணத்துப் பூச்சியிவர்
ஆழநெடும் பள்ளம் அதியுயர்ந்த உச்சி
கோலஎழிற் குன்றில் கோபுரமாய்ப் பெண்கள்

இலைபறிக்கும் கைகள் இதயமெனத் துடிக்கும்
கலைபெருக்கும் காட்சி காண்போர்க்கு இனிக்கும்
தலைகுனிந்து தளிர்கள் தாங்குகிற மூடை
நிலைகுனிந்து வாழும் நீலகிரிப் பெண்கள்

காலைக் கடுங்குளிர் கவிந்துவரும் பனித்திரள்
சேலைக் கொங்காணி சேர்ந்தணியும் படங்கு
மாலை வரும்வரையில் மலைப்புதருள் மாளும்
வேலை இவர்வயிற்றில் வேகின்ற கூலி

கவ்வாத்துக் கத்தி கையிலே குச்சி
காட்டிலே குந்திக் கடப்பாரை முந்திச்
செவ்வாத்துக் கைகள் சிறகென விரித்துச்
சிந்திய குருதியே செந்நிறத் தேயிலை

நெளியும் பாம்பும் நீளும் அட்டையும்
நெருடும் முள்ளும் நெஞ்சினைக் கவ்வும்
பழியும் பாவமும் யாரெனச் சொல்வேன்
பச்சை மலையின் இச்சை இவரே

அந்தமில் மலையின் சந்தன விறகாய்ச்
சிந்திய குருதி சிவப்பெனத் தேயிலை
எந்திர ஆலை எரித்திடும் விறகாய்
இந்திய மண்ணில் இங்கொரு பெண்ணே

**வீரா பாலச்சந்திரன்**
திருச்சிராப்பள்ளி





# நான்கு விழிகள்

இ. ஜா.ஃபர் சாதிக்

அன்றைய விடியல் அப்படியொரு வலியுடன் விடியுமென்று முருகன் நினைத் திருக்கவில்லை.

நடைப் பயிற்சியின் போது வந்த கைபேசி அழைப்பில் அதிர்ந்து போனார்.

''நேத்து போன்ல பேசினானே. இன்னைக்கு இப்படியா செய்தி வரனும்? பெத்தவங்க மனசு என்ன பாடுபடுதோ'' என்று வருந்திக்கொண்டே, ராஜனின் வீட்டை அடைந்தார்.

''வாடா, வா... ஒரே மகன்னு பாத்துப் பாத்து வளர்த்த எங்க நெலமயப் பார்த்தியா? ஆறு மாசத்துல கல்யாணம் செஞ்சு வெக்கலாம்னு ஆசையோட இருந்தேன். அதுக்குள்ள எல்லாம் முடிஞ்சு போச்சு. அவன் தான் உலகம்னு வாழ்ந்த எங்களுக்கு இப்படி ஒரு நெல வரணுமா?'' என்ற ராஜனின் தோளைத் தட்டிக் கொடுத்துவிட்டுக் கவலையோடு வீட்டிற்குள் நுழைந்தார்.

ராஜனின் மனைவி அழுது வீங்கிய கண்களுடன் அமர்ந்திருந்தார்.

''மாமா...'' என்றான் பிரவீன்.

அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

''முப்பது வருசமா நானும் உங்கப் பனும் நண்பர்கள். யாருக்குமே கெடுதல் நினைக்காதவன்டா அவன். அவனோட மனசு பூமாதிரி. அதை கசக்கிட்டு நிக்கறயே. பெத்த மனசு என்ன பாடுபடும்?'' என்று கோபம் பொங்கக் கேட்டார் முருகன்.

கன்னத்தைப் பிடித்துக்கொண்டே, பக்கத்து அறையின் திரைச்சீலையை விலக்கினான் பிரவீன்.

உள்ளே, நாற்காலியில் இருந்து எழுந்து முருகனுக்குக் கைகள் கூப்பி வணக்கம் தெரிவித்தாள் அந்த அழகுப் பதுமை.

அவளிடம், ''பேரு என்ன?'' என்றார்.

“யாழினி” என்றான் பிரவீன்.

திரும்பி அவனை முறைத்துவிட்டு மீண்டும் அவளிடம் “எந்த ஊரு?” என்று கேட்டார்.

“சென்னை” என்று சொன்ன பிரவீனிடம்,

‘ஏன்? அவங்க பேசமாட்டாங்களா? ஊமையா?” என்றார்.

“ஆமாம்” என்றான்.

இரண்டாவது முறையாக அதிர்ந்து போனார். பிரவீனின் பெற்றோரும் அதிர்ந்து நின்றனர்.

“மாமா…, நான் ஆபீஸ் போற பஸ்ல தான் இவளைப் பார்த்தேன். தினமும் அதே பஸ்ல வந்து நான் இறங்குற இடத்துக்கு முன்னால இருக்குற ஸ்டாப்ல இறங்கிடுவா. ரொம்ப அமைதியா இருப்பா. யார் கிட்டயும் அவ பேசி நான் பாக்கல. என்னமோ தெரியல, எனக்கு அவளை ரொம்ப புடிச்சிருந்தது. அவளைக் கல்யாணம் செஞ்சுக்கணும்னு ஆசைப்பட்டேன். அவகிட்ட பேச எவ்வ ளவோ முயற்சி செஞ்சேன். முடியல. லெட்டர் குடுத்தேன்.

நாலு நாளுக்கு அப்புறமா அவ எனக்குக் குடுத்த பதில் லெட்டர்ல,

‘எனக்குப் பெத்தவங்க இல்லை. உங்களைப் பிடிச்சிருக்கு. ஆனால், கல்யாணம் செஞ்சுக்க முடியாது. காரணம், நான் ஊமை’ அப்படின்னு எழுதியிருந்தா.

எனக்கு அதிர்ச்சியா இருந்தாலும், அதுக்காக அவளை என்னால விட முடியல.

என்னோட உறுதியைப் பார்த்து அவளும் சம்மதிச்சா.

‘பேசாமலேயே’ பழகினோம். நீங்க சொன்னீங்களே…. அப்பாவோட மனசு பூ மாதிரின்னு. அந்த மனசை நம்பித்தான் இந்தப் பூவோட வந்து நிக்கறேன் மாமா”.

அந்த வீடு சில நிமிடங்கள் அமைதி காத்தது.

அவளருகில் சென்ற முருகன்,

“யாழினி…., ஹூம்… இந்தப் பேருக்காகவாவது ஆண்டவன் உனக்குப் பேச்சைக் குடுத்திருக்கலாம். இப்போ சொல்லறேன், இந்த நிமிசத்துல இருந்து நீ என்னோட மகள்” என்று சொல்லிவிட்டு, கண்கள் பணித்த அவளிடமிருந்து நகர்ந்து ராஜனை நோக்கி,

“ராஜா… என் மகளை, இப்போ என் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறேன். நாளை மறுநாள் நல்ல முகூர்த்த நாள். மரியாதையா வந்து பொண்ணு கேளு”என்றார்.


இதைச் சற்றும் எதிர்பாராத ராஜன், முருகனை முறைத்தபடி கேட்டார்,

“ஏன்? நாளைக்கு வந்து பொண்ணு கேட்டாத் தரமாட்டியா?” என்று.

மகிழ்ச்சியில் அங்கே,

“நான்கு விழிகள்” காதல் பேசின.

ராஜனது வீட்டின் மீது மேகம் மழைப் பூக்களைத் தூவத் தொடங்கியது.





# கிராமத்து கீதம்

மயக்கும் மான்விழியே
மாமனின் காதலியே
பார்க்கும் பார்வையில்
ஏக்கம் கூடுதே
நேசம் தந்து
நெஞ்சில் நிற்க்கிறாய்
கண் அசைவில்
காதலிசம் செய்கிறாய் ..

களத்து மேட்டில்
கட்டி யணைத்தவளே
கட்டுகடங்காத காளை
மனதை கட்டிப்போட்டவளே
சலசலப்பு வேணாமடி
கண்ண கதகதப்ப தாடி
முத்தம் நூறுதாடி
மொத்தவுசுரும் உனக்குதாண்டி ..

இடைவெளி வேணாண்டி
இடுப்ப கொஞ்சந்தாடி
மஞ்சதாலி வெச்சிருக்கேன்
மாமன் பேச்சை கேளடி
மார்கழி முடிஞ்சதும்
கல்யாணம் தாண்டி
மனசுல எப்பவுமே
நீயே தாண்டி ....!

**ச. இராஜ்குமார்**
திருப்பத்தூர் மாவட்டம்

# அத்தை மகளே

அத்தையின் மகளே; எந்தன்
அடிமன நிழலே; உன்னால்
ஒத்தையில் வாடு கின்றேன்
உளத்தினால் தேடு கின்றேன்
தத்தையுன் நெஞ்சம் தன்னைத்
தனிமடல் போல்அ னுப்பி
இத்தையில் கரங்கள் சேர
இருவரும் மூவர் ஆவோம்
.
இன்னொரு உயிரும் வந்தால்
எனக்கிடும் முத்தந் தன்னில்
சின்னதோர்க் கணக்கும் இன்றி
சிரிப்புடன் கொடுக்க வேண்டும்
என்னிடம் இருக்கும் காதல்
இடைவெளி குறையா வண்ணம்
உன்னிடம் நிரம்பிக் கொண்டே
உயிர்வரைத் துளிர்க்க வேண்டும்
.
போக்கினில் எந்தன் நெஞ்சில்
பொய்களே இல்லை; காதல்
வாக்கினைக் கொடுத்து விட்டேன்
வாழ்வுதான் எல்லை; அன்பே
நாக்கினில் உதித்து வாரும்
நல்மன சலனந் தன்னைச்
சீக்கிரம் சொல்லி இல்லம்
சீர்பெற வாய்பைத் தாதா

**தமிழ்நெஞ்சம் அமின்**

# சாவியைத் தொலைத்த பூட்டுகள்

உள்ளுக்குள் பூட்டிய
மனக்கதவினைத் திறக்க
வெளியிலிருந்து
எத்தனையோ சாவிகள்
முயன்று தோற்றுப்
பின்வாங்கின
சாவித்துவாரத்தின் வழி
வெளிச்சக் கதிர்
உள் நுழைகிறது
கதவைத் திறந்ததும்
வெளிச்சம் விரவி
முழுதாய் ஆக்ரமிக்க
பின்வாசல் வழி
முக்காடிட்டு
வெளிறி
வெளியேறியது
காரிருள்



- பா. சிவகுமார்





**என் கனவுடனான தினசரிகள்**

காந்தள் பூவென காலையில்
கால் பதித்த இடமெல்லாம்
விரவி கிடந்து
தடங்களில் மக்கி கூழ் குளமாகி
சாவின் விளிம்பில் கிடக்கும்
என் கனவு

நண்பகலில்
ஒரு நீண்ட பேறுகாலத்தை
கடந்து பிரசவிக்க துடிக்கும்
பிராணியாக அமைதி காக்கிறது

தவத்தின் முடிவில்
எற்பாட்டில் பிரசவித்தாலும்
தன் தாயால், என்னால்
முதலில் உண்ணப்படும்
குட்டியாகவே அதற்கு விதி
வாய்க்கப்பட்டது

மீறி பிழைத்தால்
நகங்கள் நறுக்கப்பட்டு
பற்கள் உடைக்கப்பட்டு
அதன் எல்லா கூர்மைகளும் மழுங்கி

ஒரு சபிக்கப்பட்ட
பிராணியை போல்
மாலையில் என் பிரக்ஞையின்
கேளிக்கை கிணற்றுக்குள் விழுந்து
அடங்கும் அதன் முனங்கள்கள்

அமானுஷ்ய கண்களில்
ஏக்கம் குறையாமல்
புதையுண்ட அது
இடையாமத்தில் மட்டும்
கரிசல் மண்ணை உண்டு செரித்து
மெல்ல இலதை இலையாக
பெருமூச்சிரைத்து நகர்ந்து

உரசல்களில் உருவான
தீப்பொறி ஏந்தி
விடுதல் விளிம்பில்
திசையற்று கிடக்கும்
எம்புலனை பற்றவைத்துவிட்டு
மீண்டும் காந்தளாய்
உதிர்ந்து விழுகிறது

அக்கினி குழம்பென
என் வைகறைகள்.

**- வே. ஹேமலதா**

*Seattle, Washington, USA.*

# ஒரு தந்தையின் வலி

**- அ. சித்தம்மாள்**

சுதாகர் ஒரு அலுவலகத்தில் கிளர்க்காக வேலை பார்க்கிறார். இரவு எட்டு மணிக்கு ஸ்கூட்டரில் வந்து இறங்கினார். மகனின் ஸ்போர்ட்ஸ் பைக் பக்கத்தில் தனது ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு வீட்டிலினுள் நுழைந்தார். சுலோச்சனா வாசலை எட்டிப் பார்த்துவிட்டு,

“வந்துட்டிங்களா... நைட் டின்னர் ரெடி... குளிச்சிட்டு வாங்க... மூனு பேரும் சாப்பிடலாம்” என்றார்.

மகன் சந்தோஷ் சோஃபாவில் படுத்துக்கொண்டு தொலைக்காட்சியை ஒருபுறம் ஓட விட்டுக்கொண்டு, கையில் மொபைலை வைத்துக் கொண்டு எதையோ பார்த்துக் கொண்டிருந்தான். இறுதி யாண்டு பொறியியல் மாணவன். அப்பாவை பார்த்து புன்னகைத்து விட்டு, மீண்டும் மொபைலில் மூழ்கினான். இரவு உணவு முடிந்தது.

சந்தோஷ்...

சொல்லுங்கப்பா...

நான் உங்கிட்ட கொஞ்சம் பேசணும்ப்பா... மாடியில இருக்கிற ரூமுக்கு வா.... என்று கூறிவிட்டு சென்றுவிட்டார்.

சுலோச்சனாவும், சந்தோஷும் ஒருவரையொருவர் மாறி மாறி பார்த்துக் கொண்டனர்.

ஏனெனில், சுதாகர் சந்தோஷிடம் எதையும் நேரடியாக பேச மாட்டார்.

எந்த ஒரு தகவலையும் சுலோச்சனா மூலமாகவே சொல்லுவார். திடீரென்று சந்தோஷிடம் சுதாகர் நேரடியாக பேச வேண்டுமென்பது இருவருக்குமே ஒருவித குழப்பத்தை ஏற்படுத்தியது.

சுதாகர் மீது அளவு கடந்த மரியாதையும் அன்பும் வைத்திருந்தான் சந்தோஷ். எனவே,

“சரிப்பா... நீங்க போங்க...நான் வரேன்” என்று கூறிவிட்டு வேகமாக மாடிப்படிகளில் ஏறி மாடியில் உள்ள அறைக்குச் சென்றான்.

உக்காருப்பா... படிப்பெல்லாம் எப்படி போகுது... உன் பிரெண்ட்ஸ்லாம் உனக்குபுடிச்சமாதிரிஇருக்காங்கதானே...

நல்லா போகுதுப்பா... நல்லா தான் இருக்கு. எந்த பிரச்சனையும் இல்ல.

ரொம்ப நல்லதுப்பா...

சந்தோஷ் நீ எத்தனை வருஷம் கழிச்சு எங்களுக்கு பிள்ளையா பொறந்தன்னு உனக்கு தெரியுமாப்பா...

தெரியும்ப்பா பத்து வருஷம் கழிச்சு பிறந்ததா அம்மா சொல்லிக்கிட்டே இருப்பாங்க. நான்தான் உங்களோட மொத்த சந்தோஷமும் அதனாலதான், எனக்கு சந்தோஷ்னு நீங்க பேர் வச்சதா என் அம்மா சொல்லிருக்காங்கப்பா...

ஆமாப்பா... அந்த பத்து வருஷத்துல உங்க அம்மா எத்தனை ஆஸ்பத்திரி, எத்தனை டெஸ்ட்க்கு போய் இருப்பா தெரியுமா... எத்தனை ஊசி, எவ்வளவு மாத்திரை தெரியுமா... அவ உடம்பு மனசு என மொத்தமும் சோர்ந்து போனாலும், இந்த குடும்பத்துக்கு ஒரு வாரிச கொண்டு வரனும், என்ன அப்பாவ ஆக்கனும் போராடி உன்ன பெத்தெடுத்தாள்.

அதுக்கப்புறம், வாழ்க்கை சந்தோஷமா இருந்தாலும், சிலநேரங்கள்ல எங்க ரெண்டு பேருக்குள்ள பல மனஸ்தாபங்கள் வந்தது. இருந்தாலும், உனக்காக நாங்க அனுசரிச்சி... சகிச்சிக்கிட்டு வாழ ஆரம்பிச்சிட்டோம்.

நீ பிறந்ததுமே உன் பேர்ல உனக்குன்னு ஒரு சேமிப்பு ஒதுக்க ஆரம்பிச்சிட்டேன். உன்னோட வாலிப வயதுல, ஒரு தொழில் தொடங்க அந்த சேமிப்பு உதவியா இருக்கும்ப்பா...

சரிப்பா... இதெல்லாம்...

இருப்பா... நான் சொல்லி முடிச்சிக்கறேன்.

எனக்கும் உன் அம்மாக்கும் பென்ஷன் பிளான் போட்டு, எங்க எதிர்காலத்துக்கும் குறிப்பிட்ட சேமிப்பு தொகையை சேர்த்து வச்சிருக்கேன். அதனால, நாங்க உனக்கு ஒரு சுமையா இருக்க மாட்டோம். ஒரு நாலு சென்ட் நிலம் வாங்கி வச்சிருக்கேன். எந்த கடனும் உன் பேர்ல இல்ல. உன்னோட தேவைகள நிறைவேத்தறது எனக்கு சுமையா தெரிஞ்சதே இல்ல.

ஆனா... அப்பா... இப்போ எதுக்கு இந்த விவரமெல்லாம்...

இல்லப்பா... நீ பொறந்ததுமே எங்களோட சிந்தனை மொத்தமும் உன்ன சுத்தி தான் இருந்தது. உனக்காக மட்டுமே வாழ்ந்தோம்... இனியும் வாழ்வோம்... எங்க வாழ்க்கைய திரும்பி பாத்தா... நீ பொறக்கனும்னு நாங்க போராடனதும், நீ பொறந்ததும் நாங்க உனக்காக வாழ்ந்ததும்தான் இருக்கும். எங்க வாழ்க்கை மொத்தமும் நீ மட்டும்தான்ப்பா இருப்ப...

சரிப்பா... எனக்கு தெரியும்ப்பா... இப்போ ஏன் இதெல்லாம் சொல்றீங்கன்னு தான் எனக்கு புரியல...

உன்ன உயிராக்கி, உருவமாக்க நாங்க பட்டபாடு சொல்லி மாளாது. நீ ஆசப்பட்டுக் கேட்டன்னுதான் அந்த பைக்க வாங்கி தந்தேன் சந்தோஷ். அதுல நீ பைக் ரேஸ் போகவோ, இல்ல மொத்தமா எவ்ளோ ஸ்பீடு போகுதுன்னு செக் பண்ணவோ இல்லப்பா... என்று முடித்தார் சுதாகர்.

சாரிப்பா... என்றெழுந்து மெதுவாக நடந்தான் சந்தோஷ். இனி பைக்கும் மெதுவாக செல்லும் என்று நிம்மதியானார் சுதாகர்.



# விடியட்டும்

உயிர்களின் பிறப்பிடமோ கருவறை!
உடல்களின் உறைவிடமோ மண்ணறை!
பிறப்பும் இறப்பும் இங்கே ஒருமுறை!
இளமைப் பருவமதில் முன்னுரை!
கலைந்திட தோன்றுதே வெந்நரை!
உலக வாழ்க்கையோர் முத்திரை!
அது உருகி ஓடிடும் பனித்திரை!
உறவுகள் காட்டிடும் அக்கரை!
காற்றில் இளகிடும் சக்கரை!
அன்பும் பண்பும் மின்னும் அகவுரை!
உறுதியாக நிலைத்திடும் அடி வேர்வரை!
கவலைகள் சூழ்ந்திடும் மனத்திரை!
கிழிந்தே போகட்டுமந்த முகத்திரை!
மனிதர்களைக் கழித்திடும் நெறிமுறை!
மரணம் என்னுமோர் முடிவுரை!
உந்தன் ஆற்றல் எதுவரை
நீ ஓடிக் கொண்டேயிருந்திடு அதுவரை!
கனவுகள் தொடரட்டும் விழித்திரை!
நாளை புதிதாய் விடியட்டும் வைகரை!

**லீ. லியாகத்அலி.**

# புலம்பல்

இருமுறை படியுங்கள் விளக்கம் புரியும்

**இந்த கவிதையின் கடைசி வரைக்கும் நீங்கள் கொஞ்சம் காத்திருக்க வேண்டும்**

ஏன் இப்படி செய்தாய் உணர்ச்சி
இல்லையா உனக்கு?
நீ செய்தது நம்பிக்கை துரோகம் என்று
தெரிந்து செய்தாயா? அல்லது
தெரியாமல் செய்தாயா?
எப்படி இருந்தால் என்ன
வலி எனக்குத்தானே...

நானா உன்னிடம் கெஞ்சினேன்
என்னை அழைத்துப் போ என்று
நீதானே பிரியப்பட்டாய்
நீதானே அடம் பிடித்து
அத்தனை பேரின் மத்தியில்
உன் தாய் தகப்பன் உன் அண்ணன் தம்பி
அத்தனை பேரும் இருக்கும்போது
என்னை ஆசைப்பட்டு தானே அழைத்து
வந்தாய் உன்னோடு...

உன்னை நம்பி தானே
நான் உன்னோடு வந்தேன்...

உன் நண்பர்களிடமெல்லாம் என்னை
அறிமுகப்படுத்தி வைத்தாய்,
நீ என்னோடே தான் இருந்தாய்
நான் உன்னோடு இருப்பதில்
மகிழ்ச்சி அடைந்தேன்...

உன்னை விட்டு
நான் கொஞ்சம் விலகினால்
உன்னை வேடிக்கை பார்க்க
ஆயிரம் கண்கள்
விட்டு இருப்பேனா என்ன?
அதனாலே நான் உன்னை
விட்டு விலகியதே கிடையாது...

ஞாபகம் இருக்கிறதா உனக்கு
நீ ஆழ்ந்து
உறங்கிக் கொண்டிருக்கும்போது
கொஞ்சம் உன்னை
விலகிப் படுக்கலாம் என்று பார்த்தால்
விடுவாயா நீ
அந்த ஆழ்ந்த உறக்கத்திலும்
என்னை இழுத்து
இறுக்கி உறங்கினாயே...

உன் படுக்கை அறையில் மட்டுமல்ல
உன் குளியல் அறையிலும்
நான் உன்னோடு இருந்ததெல்லாம்
ஞாபகம் இல்லை உனக்கு...

இப்படி எல்லாம் பழகிவிட்டு
எப்படி உன்னால்
எப்படி ஒரு இழிவான செயலை
செய்ய முடிந்தது...

உன் பொன் உடம்பின் மேலே
ஆயிரம் புண் காயங்கள்
ஏற்பட்டு இருந்தாலும் கூட
நான் உன்னை விட்டு
விலகி இருக்க மாட்டேன்
ஆனால் நீயோ
என் மீது பட்ட ஒற்றைக் கீரலுக்காக
என்னை விட்டு சென்றது நியாயமா

என அடுப்பங்கரையில் அவளது பிடியில்
இருந்த அவளது துப்பட்டா புலம்பியது.....

**ஆரூர். சிவ. மணிவேல்**

# புரிதல்கள்

தொடர் 7

முஷ்தாக் அஹமத்
இலங்கை

•

ஒரு செயலை செய்கையில் மனதில் முழுமையாக நிலைகொள்ளும் ஈடுபாடும் திருப்தியுமே அச்செயலை உணர்வுபூர்வமாக செய்யத் தூண்டுகிறது. மனதோடு பரிச்சயமாக செய்யத் துணியும் செயல்களே மிகவும் சிறந்தனவாக கருதப்படும். அவற்றின் மூலமான விளைவுகளும் பலன்களும் விசாலமானவை. மனதில் நிறுத்தி, உணர்ந்து, நெகிழ்ந்து ஆற்றும் அருஞ்செயல்கள் எக்காலமும் பேசுபொருளாகி நேசிக்கப்படும்.

நிறையச் செயல்களை அக்கறை கெட்டு செய்வதை காட்டிலும் அரிய சில செயல்களை நெஞ்சமுத்தி நிதானித்து மனமமிழ்ந்து செய்து விடுவது நன்று. உள்ளத்தின் ஆழத்தால் அளிக்கப்படும் அன்பும் உள்ளத்தின் மேலோட்டமாக சிலாகிக்கப்படும் நேசமும் ஒன்றாக முடியாதே. அதுபோலத்தான் உள்ளத்தின் செயல்களும்.

செயல்மீதான அதீத ஈடுபாடுக்கு வாழ்வின் மீதான பெருவிருப்பமும் செயல்ஆசையும் மிக முக்கியமாகும். வழிநெடுகவும் தூவிவிடப்பட்ட வாழ்க்கையின் பூக்களில் ஒவ்வொரு பூவாக மணந்து பார்க்க பழகிக்கொள்ள வேண்டும்.



•

நிறைவாக வாழக்கிடைக்கின்ற ஒரு வாழ்வில் ஒவ்வொரு விடயமும் ஏதோவொரு செய்தியை சொல்லிப்போகத்தான் செய்கிறது. அந்தச் செய்தியை மனதில் நிறைத்து கடந்துப்போக நினைக்கையில் தான் அழுத்தமான வாழ்க்கைப் பயணத்தில் முழு ஈர்ப்புடன் செயல் எத்தனிக்கப்படுகிறது. செயலைத் தொடரும் எத்தனிப்பில் மிகக்கவனமாக செய்ய வேண்டிய அனைத்துப் பணிகளும் மிக முக்கியமே. வாழ்க்கையை லயமாக்கிவிடும் சகல விவகாரங்களும் ஏதோவொரு வகையில் வாழ்வை அர்த்தப்படுத்துவதாக அமைவது மிகப்பிரியமே.

•

அன்பின் மெல்லிசை எங்குமே வியாபித்திருப்பது காலத்தின் அமோகம். அன்பினால் ஈர்த்து கனியப்படும் எல்லாமும் மீண்டும் வார்த்துக் கொள்ள அன்பின் எழுச்சியே துணைசெய்யும். சிந்தனையின் வெளிப்பாடாக அமையப்பெற்ற எல்லா சொந்த தீர்மானங்களுக்குள்ளும் அன்பின் நீட்சியொன்று வீரியம் பெற்றெழும் என்றால் அது உண்மைதான். அதுவே, சதாவும் ஒவ்வொரு தனிமனித மனதிற்குள்ளும் நடைபெறும்.

## கண் பேசும் மௌனமொழி

உன் கண்களையும்
என் கண்களையும்
தொடுக்கும்
மெல்லிய நூலிழை வழியாகக்
கசிந்து கொண்டிருந்தது
மௌனம்…
காததூரங்கள்
கனாவனாந்தரங்களைக் கடந்து
காலம்
துடித்துக் கொண்டிருந்தது
இதயங்களைக் கட்டிப்போட்டு விட்டு….
கடந்தகால
இருண்ட மேகங்கள்
ஒன்று திரண்டு
நெஞ்சவெளி மீது
கூச்சலிட்டு
மழையைக்கொட்ட
உள்ளத்திலே வெள்ளச்சமர்….
ஆயினும்
வெளியே
நம் மௌனங்கள்
போட்டி போடவுமில்லை
ஏதேதோ பிதற்றவுமில்லை
சண்டையிடவுமில்லை
மெல்லிய நூலிழை
வழிக்கசிந்த
மௌனங்கள்
நமக்குள்
நதியாக உருவெடுத்து
ராட்சதக் குழம்பாக மாறிக்
கடலெனக் கொந்தளிக்கும்…
பின்
கூடடைந்த குருவிகளாய்
இருவருக்குமான
ஞாபகங்கள்
அமைதியாகும்
ரணங்கள்
பூசிய இருட்டில்
மௌனப் பூனைக்குட்டிகள்
இரண்டு சுருண்டுகொள்ள…
எதுவுமே
மறந்து விடுவதற்கில்லை
வாழ்க்கையில்!

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

# மணிக்கூ

1.
நதிகள் கொண்டாடின
ஹோலிப்பண்டிகை!
உபயம் சாயக்கழிவுகள்….
2.
எப்படித்தான் ஓடிக்கொண்டேயிருக்கின்றன
கடிகாரத்தின் கால்கள்
முட்களோடு….
3.
ஓடிவந்த நதியின்
வியர்வைகலந்ததில்
உப்புக்கரிக்கின்றதோ? கடல்.
4.
சிசேரியனுக்கு வழியில்லை
பிரசவலியில் துடித்தபடி
தெருநாய்…
5.
ஏணிமீது பாம்பு
வித்தியாசமான பரமபதம்
இரயில்வண்டி…
6.
தாங்கமுடிய பாரம்
பூமித்தாயின் தலைமீது
குழந்தையின் கல்லறை…
7.
வரிஏய்க்கும் பொய்கணக்கையும்
தொடங்குகின்றர்
பிள்ளையார்சுழி போட்டு…
8.
மார்கழி தோறும்
புல்வெளியில் ஆரம்பம்
பனி(யின்)ச்சருக்கு விளையாட்டு….
9.
பார்க்கடலை
பாம்புதீண்டியதோ…
நுரைதள்ளிக்கொண்டேயிருக்கிறது…
10.
கண்மருத்துவருக்கும்
இருக்கத்தான் செய்கிறது
பார்வை நேரம்…

அ. கேசவராம்
கும்பகோணம்

# மெய்ப்படும் கனவுகள்

அவள் கதவு மூடப்பட்டிருக்கும்
அவள் புத்தகங்கள் எரிக்கப்பட்டிருக்கும்
எழுதுகோல்கள் உடைக்கப்பட்டிருக்கும்
கற்பனைகள் சிதைக்கப்பட்டிருக்கும்
கவிதைகள் மறைக்கப்பட்டிருக்கும்
அழுமுகம் ஒளிக்கப்பட்டிருக்கும்
குரல் மட்டுமல்ல
குரல் வளையும் நசுக்கப்பட்டிருக்கும்

ஒப்பம் கேளா ஒப்பந்தமொன்றில்
ஒட்டுப்போட வைத்த
ஒரு பெயரால்
ஒரேயடியாய்ப் பிரசவித்த
பல மாற்றங்களில்
சிலவாவின அவை

பசை சரியில்லையென்ற
ஒரே காரணந்தான்
ஒட்டிய நரகாசுர நாமம்
காலக்கிரமத்தில்
கழன்று விட்டிருக்கக்
காரணமானது

பெரிது பெரிது
அந்த வலி பெரிது
அந்த வாழ்க்கை பெரிது
மீறல்களில் அகப்பட்ட
அந்த மீளல்களும் பெரிது..

பெரிதான அந்த மீளல்களை
மீட்டுகிறாள்..
வீசிய புயலுக்குள்
நிமிர்ந்திட்ட புல்லென,
மூழ்கிய கடலுக்குள்
வெளியான முத்தென,
பொசுங்கிய கங்குலில்
சுடப்பட்ட பொன்னென,
மிதித்திட்ட மண்ணுக்குள்
புதையுண்ட விதையென,
துரத்திய ஆகாசத்தில்
வானத்து வில்லென,
பூசிய இருளில்
வெளியான உடுவென
ஐம்பூதத்திலும் அவளான்மா
வெளியாகி நிற்க
பொய்பூதத்தின் பூச்சாண்டியோ
வலுவிழந்து போயிற்று..

ஒண்ட வந்த பெயர்
பிடுங்கப்பட்டதை
பின்னாளில்
மறந்துபோன பின்,
கலைந்துபோன கனவெல்லாம்
பலிக்க வைக்க
தூக்கத்திலும்
நனவு வேட்டையாடுறா ளென்கிறாள்

வரிகளல்ல
கிலேசங்கள் தளர்ந்த
வாகை இவையென
புளகாங்கிதமும் கொள்கிறாள்

அவளுக்காகவல்ல!
அந்த ‘அவர்களுக்காய்’ அவள்
வாழத்தான் வேண்டும் !!

ஷைலா அக்ஷதியா




# தஞ்சைத்தமிழ்மன்ற ஆண்டுவிழா

தஞ்சைத்தமிழ்மன்றத்தின் நான்காம் ஆண்டுவிழா தஞ்சை பெசண்ட் அரங்கில் நடைபெற்றது. விழாவுக்குத் தலைமைச்செயலகச் சங்கத்தலைவர் திரு. வெங்கடேசன், கண்ணதாசன் கலைக்கூட நிறுவனர் திரு.காவிரிமைந்தன் நான் ஒரு ஐஏஎஸ் அகாடமி தலைவர் திரு. தமிழ்இயலன் திருமதி இராணி லட்சுமி உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு விருதுகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினர். தஞ்சைத்தமிழ் மன்ற நிறுவனர் மற்றும் செயலர் தமிழ்ச்செம்மல் திரு. இராம வேல்முருகன் அனைவரையும் வரவேற்க, தலைவர் திரு கோவிந்தராசன் பாலு தலைமை வகித்தார்.

ஆண்டாங்கோயில் ஏவிஎஸ் சகோதரர்கள் திரு. தேவநாதன் & திரு.



திருபுவனேசுவரன் தமிழ்த்தாய் வாழ்த்து பாட, பெண்கவிஞர்கள் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தனர். ஆண்டாங்கோயில் சகோதரர்கள் திரு சுந்தரராசன்&திரு குருமூர்த்தி குழுவினரின் தமிழிசை நிகழ்வு நடைபெற்றது

விழாவில் பெண்ணாகடம் திரு கோ.நீலமேகம், சென்னை மருத்துவர் திரு ஜெயக்குமார் பலராமன், மதுரை பேராசிரியர் திரு இளஞ்செழியன், புதுவை திரு.மணிவேலர், மதுரை திரு பரணிசுபசேகர், சென்னை திரு சீனிபழனி மற்றும் ஓசூர் திருமதி மணிமேகலை ஆகியோருக்கு கம்பதாசன் விருதும், திருச்சி திரு தாயுமானவர், தஞ்சை திரு.கோவிந்தராஜன் ஆகியோருக்கு தவிலிசைச் சக்கரவர்த்தி வலங்கைமான் சண்முகசுந்தரனார் விருதும், சென்னை திரு.காவிரிமைந்தன், திரு.தமிழ்இயலன், திரு ஈழவேங்கை தம்பியின்தம்பி, மதுரை திரு முத்துவிஜயன், புதுவை திரு. சு.வேல்முருகன் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கப்பட்டது.

திரு.பாலு கோவிந்தராசன் தலைமையில் திருக்குறள் கவியரங்கமும், திரு.



இராம வேல்முருகன் தலைமையில் சிந்துக் கவியரங்கமும் நடைபெற்றது. அறுபது கவிஞர்கள் கவிதை பாடினர்.

தமிழகமெங்கிலுமிருந்து வருகை தந்த 120 தமிழ் ஆர்வலர்களுக்கு தமிழ்ப் பணிச்செம்மல், தமிழ் வேள், சேவைச் செம்மல், திருக்குறள் முரசு, கல்விச்செம்மல் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன. பிரான்சு தமிழ்நெஞ்சம் இதழ் சார்பாக 13 கவிஞர்களுக்கு வெண்பா அரசு விருது வழங்கப்பட்டது. விழாவில் நிலாமுற்ற நிறுவனர் திரு முத்துப்பேட்டை மாறன், தமிழன்னைத் தமிழ்ச்சங்க நிறுவனர் திரு கருங்கல் கண்ணன், தமிழ்நாடு புலவர் பேரவைத்தலைவர் திரு.வை.வேதரத்தினம் உள்ளிட்ட இருநூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இராம வேல்முருகனின் பாரதியின் புதிய ஆத்திச்சூடி, ஒரு கோப்பைத் தேநீருடன் அன்பு, என்றும் வாழும் பாரதியார், ஓசூர் மணிமேகலையின் மரபு மலர்கள், நிறைமதி நீலமேகத்தின் வெண்பா விருந்து, பாலசுந்தரத்தின் பஞ்சுப்பொதி, பா.ச.கண்ணனின் காற்று வெளியில் வந்தவள், இளையதீபனின் காதலொடு காதலாகி, தென்பரை தமிழன்பனின் பொன்னூஞ்சல், இந்தி ராணி தங்கவேலுவின் அகவற்பா 100, பூமணியின் விடியற்பாடல்கள், பரணி சுபசேகரின் என்னுயிர் தேவதையே, மோகனின் சித்திரக்கவிகள் உள்ளிட்ட பதினைந்து நூல்கள் வெளியிடப்பட்டன. சலுகைவிலையில் ரூ 10000/ க்கு நூல்கள் விற்பனையாயின. பிரான்சு நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர் பொலிகையூர் கோகிலாவின் காற்றின் மொழி என்ற நூல் அறிமுகம் செய்யப்பட்டது.

நிகழ்வுகளை தஞ்சை எம் ஆர் ஜெயந்தி தொகுத்து வழங்கினார். நிகழ்வு ஏற்பாடுகளை மன்றத் துணைத் தலைவர்கள் தமிழன்பன், சண்முகம் ஆகியோர் செய்திருந்தனர். நிறைவாக, துணைச்செயலர் இளையதீபன் மகாலிங்கம் நன்றிகூறினார்






REDMI NOTE 8 PRO
AI QUAD CAMERA


REDMI NOTE 8 PRO
AI QUAD CAMERA






நாளும் தமிழ் வளர்ப்போம்


தமிழ் மன்றம்

# தொழில் தர்மம்

"தம்பி, ஒரு கிலோ நாட்டுச் சர்க்கரைக் கொடுங்க.. எங்க தம்பி கடையில அப்பாவ காணோம்"

"அப்பா, சாப்பிட வீட்டுக்கு போயிருக்காங்க, இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துருவாங்க ஐயா"

"ஓ.. சரிங்க தம்பி அப்படியா! நல்லது"

"இந்தங்க ஐயா, ஒரு கிலோ நாட்டுச்சக்கரை, என்பது ரூபாய் மட்டும் கொடுங்க"

"இந்தாங்க தம்பி பணம். அப்பா வந்தா கேட்டதா சொல்லுங்க" என்று கூறிவிட்டு ரவி தன் வீட்டிற்கு சென்று விட்டார்.

முருகன் தனது மளிகை கடைக்கு சாப்பிட்டு திரும்பி வந்தவுடன், "முரளி நீ வீட்டுக்கு போய் சாப்பிட்டு வா, அப்பா கடைய பார்த்துக்கிறேன்." என்று பேசியபடியே கடையில் மின்தராசை உற்றுக் கவனிக்க.. சிறிய அலசல் கொஞ்சம் எடைக் காட்டும் எண்ணில் தென்பட்டது.

"முரளி எடை தராசை சரி செய்யணும் வேலை பார்க்கிறவங்க உடனே வர சொல்லு.. நான் போனதும் யாருக்கும் பொருள் கொடுத்தியா?" தந்தையின் சொல்லைக்கேட்டு உடனே கைப்பேசியை எடுத்து பழுதுபார்பவரை வரச்சொன்னான் முரளி.

'இப்பதான் அப்பா, ரவி ஐயா வந்தாங்க, ஒரு கிலோ நாட்டுச் சர்க்கரை வாங்கிட்டு உங்களையும் விசாரித்து போனாங்க"

"ஓ..அப்படியா! அவரை பார்த்து பேசி நாளாச்சுடா" இருவரும் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே தராசை பழுது பார்க்கக்கூடியவர் வந்து பழுதுபார்த்து விட்டு.. "ஐயா இந்த தராசுல 30 கிராம எடை கூடுதலா இருந்துச்சு, நான் இப்ப சரி செஞ்சுட்டேன். நல்ல வேளைங்க ஆரம்ப நிலையில பார்த்ததனால பெருசா வேலை எதுவும் இல்லை"

"சரிங்க தம்பி இந்தாங்க உங்க கூலி, மிக்க நன்றிங்க தம்பி நீங்க உடனே வந்ததற்கு" என்று முருகன் அவரை அனுப்பி விட்டு, 100 கிராம் சர்க்கரையை எடுத்துக் முரளி கையில் கொடுத்து "முரளி ,நீ சாப்பிட வீட்டுக்கு செல்லும் வழியில ரவி ஐயாவின் வீட்டில இதை கொடுத்திடு."

முரளியும் அப்பா சொன்னபடி அந்த நாட்டுச் சர்க்கரையைக் ரவி ஐயா வீட்டில கொடுக்க.. "ஏன் தம்பி என்ன ஆச்சு ? நான் எதுவும் கேட்கலையே"

"ஐயா, எங்க அப்பா உங்களுக்கு இதை கொடுத்துட்டு வர சொன்னாங்க, தராசுடைய எடைகுறைவா இருந்ததால நானும் எடைதவறுதலா கொடுத்துட்டேன், எங்களை மன்னிச்சிடுங்க ஐயா, அப்பாவும் மன்னிப்பு கேட்டு வரச் சொன்னாங்க. அதோட ஒரு தொழிலுக்கு உண்மையும், தரமும் மட்டுமே முக்கியம்" என்று எனக்கு புத்திச் சொல்லியும் அனுப்பினார்.

இந்த நிகழ்வு ரவி ஐயாவிற்கு பிரம்மிப்பூட்டும் வகையில் மனம் திகைத்தது.. இவர்களின் தொழில் தர்மத்தைக் கண்டு.


(வாழ்வியல் கவி )

**சா.நாகூர் பிச்சை**
திண்டுக்கல்

இலங்கை கவிஞர் வெலிமடை ரபீக்கின்

# ஒரு நானும் இன்னும் ஒரு நானும் கவிதை நூல் - ஒரு பார்வை

## என். நஜ்முல் ஹுசைன்




“ரமழானே
அருட்கொடைகளின்
அற்புத மாதமே”

என்று சாதாரணமாக தொடங்கிய கவிதை நூல் ரணமாக - எங்களை ரணமாக்கி தொடர்கிறது.

இலங்கைக் கவிஞர் வெலிமடை ரபீக் எண்பதுகளிலே தனது அடையாளத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியவர். கரடு முரடான எந்தச் சொற்களையும் ரபீக்கின் கவிதைகளில் காண முடியாது. எளிமையான சொற்களை கையாளுபவர் ரபீக். சொற்கள்தான் எளிமையானவை; எனினும் அதில் பொதிந்துள்ள கருத்துகளின் ஆழம் எண்ணியெண்ணி வியக்கக் கூடியவை. இத்தகைய அடையாளங்களை தனது தனிப் பாணியாக வைத்திருக்கும் கவிஞர் வெலிமடை ரபீக்கின் அதே அடையாளங்களே இக் கவிதை நூலெங்கும் விரவிக் கிடக்கின்றன.




பல இன்னல்களாலும், நோய்களாலும் பாதிக்கப்பட்டவர் வெலிமடை ரபீக். சிலருக்கு நோய்கள் இலகுவாக வந்து விடும். பிறகு ‘அப்படி நான் போய் விடுவேனா’ என்று அடம் பிடித்து நிற்கும். அப்படி அடம் பிடித்து நிற்கும் நோயுடன் போராடும் ரபீக் அவ்வாறான வேளைகளிலும் தனது கவிதை உணர்வுகளுக்கு ஓய்வு கொடுக்காதவர். தனது மன வேதனைகளுக்கு கவிதைகளின் மூலம் வடிகாலமைத்துக் கொள்பவர். அவரது நிழலாக இருக்கும் அவரது துணைவியாரே, அவர் மனச் சோர்வடைந்து விடாமல் அவரை தூக்கி நிறுத்திக் கொண்டிருக்கிறார்.

''சிறகெடுத்து பறப்பாய்
உடனிருப்பேன்
பொறுப்பாய் என்றாள்
என் இல்லாள்
மேகங்களை விடவும்
மெல்லிய சொல்லாள்

பாவம் என் புண்ணால்
கல்லான தேவதை
இந்நாள்
காண்பதெல்லாம்
தீவதை''

என்று தனது மனைவி பற்றி பத்திரிகையில் எழுதியுள்ளார்.

'ஏப்ரல் 21 தாக்குதல் என்னை பெரிதும் பாதித்தது. ஆறாத காயங்களையும் அடங்காத கண்ணீரையும் தந்தது. அந்த மிலேச்சர்களின் வருகையின் பின்னரான மிருக வதைகளை எழுதாமல் இருக்க முடியவில்லை. நிறைய எழுதலானேன். கொரோனாவின் பின்னரான கொதி மரணங்களும் என் சரீரத்தின் உயிர் நரம்புகளை சாம்பலாக்கியது என் வேதனைகளை வெந்த சொற்களால் எழுதலானேன். கவிதை எழுதுவது என்பது பெரும்வலி.கவிதைஒன்றுஎழுதுவதற்கான மன சூழ்நிலை எழுகின்ற போது என் உயிர் நரம்புகள் இறுகிவிடுகின்றன. நான் கல்லாகி விடுகிறேன். இரவின் அமைதியும்தனிமையும்என்கவிதைகளின் பிறப்பிடமாகின்றன. என்னைக் கிழித்தே என் கவிதைகள் வெளி கிளம்புகின்றன. என் கண்ணுறக்கம் பறிபோகிறது. காலத்தின் எல்லா காயங்களும் என் விரல்கள் வெளியே கவிதைகளாய் விழுகின்றன' என்ற வெலிமடை ரபீக்கின் பிரகடனம் கட்டாயம் மனதில் கொள்ளத்தக்கது. ஆம் இந்த நூல் முழுவதும் அவரது மன ஓட்டமும் மனதில் இருந்து எழுகின்ற கொதிப்பான உணர்வுகளுமே கவிதைகளாக வந்து விழுந்திருக்கின்றன.

'ரமழானே அருட்கொடைகளின் அற்புத மாதமே' என்று ஆரம்பித்த கவிதை, 'நீ வரும் முன்பே நிறைய மாந்தர் நோன்பு இல்லை, ஊரடங்கால் உழைப்புக்கு வெயில், கஞ்சிப் பானையும் காலி' என்று ஊரடங்கோடு வந்த நோன்பை வேதனையோடுபடம்பிடித்துக்காட்டுகிறார். எங்கள் இதயத்தைப் பிழியும் மற்றொரு கவிதை 'என் மரண வாக்குமூலம்' என்ற தலைப்பில். 'என் இரவில் நான் இருக்கிறேன், கண்ணுறக்கத்தை காண வில்லை, என் அனாதை கனவுகள் அலைகின்றன, என் கண்ணுறக்கத்தை களவாடிப் போனது யார்? அழுக்கில் குளித்த அழகு குட்டி தேவதையை, இடுப்பில் அறைந்து, ஐயா பசி என்றாளே, அந்த கிழிந்த பெண் அவளாக இருக்கலாம், உம்மா வீட்ல இல்ல, இன்னொரு கல்யாணம்..., வாப்பா கொழும்புல என்று அழுதானே, ஏழைச் சிறுவன் அவனா? இருக்கலாம்' என்று தான் தூக்கம் தொலைத்த காரணம் இதுவோ என்று அவர் சொல்லும் காரணங்கள் எங்கள் தூக்கம் தொலைக்கும் காரணங்களாகின்றன. கவிதையை அவர் முடிக்கும் பாணி மிக மிக வித்தியாசமானது. ஐயோ கண்களில் இரண்டை கழட்டி வைத்து உறங்கினேன் பிணமாக'.

தன்னைச் சுற்றி நடக்கும் அவலங்கள் இரவில் கூட தூங்க விடாது படுத்தும் பாடும், அதற்காக பிணமாகத் தூங்க தீர்மானித்த தன் முடிவையும் சொல்லி வாசகர்களும் சுற்றி நடக்கும் அநியாயங்களைப் பார்த்து கண்களை கழற்றி வைத்துவிட்டுத்தான் தூங்க வேண்டும் என சொல்லிக் கொடுக்கிறார்.

கொரோனா காலத்தில் மனிதர்கள் உணவு தேடுவதற்காக பட்ட பாட்டை

உயிர்க்கஞ்சி
உயிர் கஞ்சி என்ற அற்புத
வார்த்தைகளால் சொல்கிறார்.

அது கவிதையையும் கொண்டு வந்துள்ளது; மானுட வேதனையையும் சிறப்பாக படம் பிடித்துக் காட்டியுள்ளது.

யிலும் தன்னைச் சுற்றி நடக்கும் கொடுமைகளைப் பார்த்து விட்டு வெறுமனே ஜடமாக இருக்க அவரால் முடியவில்லை.

நாட்டில் எரிந்த பிரச்சினையை, எரித்த பிரச்சினையை தனது கவிதை வரிகளால் பொசுக்கிப் போட்டுள்ளார்.

அங்கே அவர் பயன்படுத்தியிருக்கும் சொற்கள் எளிமையானவை; ஆனால் அவை சொல்லி நிற்கும் சங்கதிகள் ஆழமானவை. பிரார்த்தனைகளும், சாபங்களும் ஒன்றையொன்று தழுவிக் கொண்டிருக்கின்றன.

இவரது கவிதைகள் முழுவதும் இலங்கையின் காலத்தை படம் பிடித்துக் காட்டுகின்றன. இலங்கையில் நடந்த ஒவ்வொரு சம்பவத்தின் பிரதிபலிப்பாக இவரது கவிதைகள் பீறிட்டு வந்துள்ளன.

ஒரு கவிஞன் முதலில் மனிதனாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவன் எழுதும் கவிதை கவிதையாக இருக்கும். மானுட உணர்வு இல்லா கவிதைகள் வெறுமனே எழுத்துகளின் கூட்டலாகவே இருக்கும்.

கவிஞர் வெலிமடை ரபீக் தான் சிறந்ததொரு மனிதன் என்பதை "ஒரு நானும் இன்னும் ஒரு நானும்" என்ற கவிதைத் தொகுதியின் மூலம் நிரூபித்திருக்கிறார். அது கவித்துவம் மிக்க கவிதை நூலாகவும், மானுட பண்புகளைப் போதிக்கும் பாட நூலாகவும் இருக்கிறது.

"ஒரு நானும் இன்னும் ஒரு நானும்" கவிதை நூலை வாங்கி வாசிப்போம். இந்தக் கவிஞன் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என பிரார்த்திப்போம்.

நூலின் இலங்கை விலை : ரூ. 400/-

வெலிமடை ரபீக் கைபேசி :
0094779790053
0094773527079

# ஆனந்தப் பூமழை...!



அன்பாலே வெல்வாய்! அகிலமுன் காலடியில்!
அரவணைக்கும் மனமேதான் ஆளுகின்ற திறனாகும்!
இன்பமும் மகிழ்வும் இயல்பாகக் கூடிடும்!
ஈந்துவக்கும் உள்ளமே இறைவனின் இல்லமாம்!
துன்பமதை நீக்கிடும் துயரெல்லாம் போக்கிடும்!
தூயநல் லன்பினைத் தொழுதுநீ போற்றிடு!
நன்மைகள் பெருகிடும்! நலமுனைச் சேர்ந்திடும்!
நாளுமே வாழ்விலே ஆனந்தப் பூமழையே!

## முனைவர் ஓசூர் மணிமேகலை

Power Point Stories – 3

# பவர் பாயிண்ட் கதைகள் – 3

# மனிதரில் இத்தனை நிறங்களா !!!

## எழுதியவர்கள் :

விஜி சிவா

வனஜா முத்துக்கிருஷ்ணன்

ருக்மணி வெங்கட்ராமன்

கி. இரகுநாதன்

### 1
### விஜி சிவா



“அடியே கனகா... சீக்கிரம் வாடி; கார் வர்ற சத்தம் கேட்குது. வா வா... மசமசனு நிக்காத; யான அசைஞ்சு வர்ற மாதிரி...!?” என குமார் மனைவியைப் பார்த்துக் கத்தியபடி வாசலுக்கு விரைந்தார்.

“இதோ வந்துட்டேங்க... சேலை அழகா கட்டணும்ல...” என கனகா வெட்கப்பட,

“ஆமா பெரிய அழகின்னு நெனப்பு! உன் மகளத்தான் பொண்ணு பார்க்க வர்றாங்க; நெனப்பு இருக்கட்டும். இப்ப வா” என கட்டளையிட்ட குமாருக்கு தன் மனைவியின் மீது எந்த மதிப்பும் மரியாதையுமே இல்லை என்பதும், ஆண் என்ற அகங்காரமும் திமிருமாய், அடாவடியாய் இருப்பதே அவனின் திறமை என நினைப்பதையும் அவன் குடும்பமும், தெருவும் அறியும்.

“ம்... சரிங்க” எப்பொழுதும் போல் கனகா தலையாட்ட,

“அப்புறம் தேவையில்லாம வர்ற வங்ககிட்ட எதுவும் உளறாத. நீ சும்மா வந்து பொண்ணுக்கு அம்மா மாதிரி ஒழுங்கா ஓரத்துல அடக்க ஒடுக்கமா ஒரு பொம்பளை மாதிரி இரு; புரியுதா! என்ன எழவோ... என் தலையில உன்னக் கட்டிவச்சு, என் வாழ்க்கையே போச்சு!? எனக்குன்னு வந்து பொறந்திருக்கு பாரு; ரெண்டு பொட்டக் கழுதைங்க. இதுங்கள தள்ளி விட்டாத்தானே, நான் என் பையன் வாழ்க்கைய பார்க்க முடியும்..!” முணுமுணுத்தபடி தெருவைப் பார்த்தார் குமார்.

தெருமுனையில் வாகனத்தை நிறுத்தி விட்டு வந்த மாப்பிள்ளை வீட்டாரைப் பார்த்தவுடன், குமாரின் முகம் பிரகாசித்தது.

''வாங்க வாங்க... நான் பொண்ணோட அப்பா, இவங்க பொண்ணோட அம்மா; பேரு கனகா, இந்த வீட்டோட மகாராணி.'' என 'வாயெல்லாம் பல்லாக' குமார் கனகாவை அறிமுகப்படுத்த... கனகா ஒரு நிமிடம் திகைத்து நின்றாலும், மற்றவர்கள் முன்பாவது தன்னை மரியாதையாய் நடத்தும் கணவரைப் பெருமையாகப் பார்த்தாள்!

மாப்பிள்ளை வீட்டாரின் வருகையை உணர்ந்த தெருவாசிகள் அனைவரும் வெளிப்புறத் திண்ணையில் ஆஜர்.!

''இதுதான் மாப்பிள்ளை பரத்'' பொதுவாய்ச் சொல்லப்பட, ஆவலுடன் குடும்பமும் தெருவும் எட்டிப் பார்த்தன.!

சற்று நேரத்தில் கூடத்திற்கு வந்து நமஸ்கரித்த சுந்தரியை, மாப்பிள்ளை வீட்டார் உற்றுப் பார்த்தபடி...

''பொண்ணு கொஞ்சம் புதுநிறம் தான்...'' என ஒருவர் கூற ...

''புதுநிறமா இருந்தாலும் மூக்கும் முழியுமா லட்சணமா இருக்குல...'' என மாப்பிள்ளையின் உறவுக்காரப் பெண் சொல்ல ...

உடனே திண்ணையிலிருந்து எட்டிப் பார்த்த ஒரு ஆச்சி, ''அதானே...



எங்க சுந்தரிக்கென்ன ... குணத்துல தங்கம், ரொம்ப கெட்டிக்கார பிள்ள, லட்சணமா இருக்குறா, புள்ள நிறைய படிச்சிருக்குது, வேலைக்குப் போனா சம்பாதிக்கப் போகுது... வேறென்ன வேணும் உங்க மாப்பிள்ளைக்கு..?'' என கையை ஆட்டி ஆட்டிப் பேச,

அதற்கு மாப்பிள்ளையின் அண்ணன் ''உங்க பொண்ணு அதிர்ஷ்டக் காரி! வெளிநாட்டுக்குப் போகப் போறால. வெளிநாட்டு மாப்பிள்ளை கிடைக்கணுமே... அதுவும் வரதட்சணை எதிர்பார்க்காம!» என்று பதிலளித்துவிட்டு, குமாரைப் பார்த்தபடி «உங்க பொண்ணு போட்டோவப் பார்த்ததும், இந்தப் பொண்ணுதான் வேணும்னு சொல்லி, ஃப்ளைட்ட பிடிச்சு உடனே வந்துட்டான் என் தம்பி. இங்க பாருங்க... அவனுக்கு ரெண்டு வாரந்தான் லீவு! ரெண்டு வாரத்துக்குள்ள கல்யாணத்தை முடிக் கணும். 'தரகர் சொல்லியிருப்பாரே... நாங்க உங்ககிட்ட எதுவும் எதிர்பார்க்கல, பொண்ணுக்கு நாங்களே நூறு பவுன் போட்டு கல்யாணத்தையும் நடத்திக்கி றோம்னு'...ம்.. சொன்னாருல.''

''ஆமா, ஆமா மாப்பிள்ளை...'' தலையாட்டிப் பொம்மையாய் குமார் இளிக்க, வீடு ஆச்சரியப்பட்டது.

மாப்பிள்ளையின் அண்ணன் பேசு வதைக் கேட்டு, அந்தத் தெருவே அதிச யத்துப் போனது! ''பாருடி... நம்ம சுந்தரிக்கு வந்த வாழ்க்கையை; அதிர்ஷ்டக்கார புள்ளடி அது» என ஒரு ஆச்சி கூற, ''அவளோட நல்ல மனசுக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை, வரதட்சணை இல்லாமல் கிடைச்சிருக்கா.» என ஒரு மாமி தொடர.... «நல்லபடியா வாழணும் இந்த அப்பன் கிட்ட இருந்து படுறதவிட , கண்காணாத தூரத்தில் நல்லபடியா இருக்கட்டும்...'' என்று பக்கத்துவீட்டு பெண் கிசுகித்தாள். அந்தத் திண்ணை இன்னும் பல கதைகள் பேசும்! விதவிதமாய் வருடக் கணக்கில் நிறம் மாறிக்கொண்டேயிருக்கும்!

வாயெல்லாம் பல்லாக மாப்பிள்ளை யையும் மாப்பிள்ளை வீட்டாரையும் சுற்றிச் சுற்றி வந்த குமாரைக் கண்டு, அதிர்ந்து போனதோ என்னவோ... சட்டென மின்சாரம் தடைபட, வீடு நிறம் மாறியது!

ஆளாளுக்கு விளக்கைத் தேடுகை யில்.. சட்டென ஒரு ஒளி வெள்ளம் அங்கு.! அனைவரும் திரும்பிப் பார்க்கையில், ஒரு இளம்வயது பஞ்சாபிப் பையன்; கையில் இரண்டு லாந்தர் விளக்குகளுடன்...!

மாப்பிள்ளை வீட்டாருக்கு அவசர மாய் விளக்கமளித்தார் அப்பா.. ''இவன் நம்ம பக்கத்து வீட்டுப் பையன், கிரி. அப்பா பஞ்சாபி, அம்மா தமிழ்; நம்ம ஊரு பள்ளிக்கூடத்துல ஹெட்மாஸ்டரா இருக்குறாங்க...''எனசொல்லிக்கொண்டே குமார் மகன் மனோஜைப் பார்க்க, விளக்குகளை வாங்கிக் கொண்டு அவனை அனுப்பி வைத்தான் மனோஜ்.

சுந்தரியை திரும்பித் திரும்பிப் பார்த்து கலங்கிய கிரியின் கண்களை, சுற்றியிருந்த இருளும், அமைதியும் அணைத்துக் கொண்டன!

உள்ளே வந்தமர்ந்த சுந்தரியிடம் 'மாப்பிள்ளை பிடித்திருக்கிறதா' எனக் கேட்கும்படி யாரோ ஒரு பெரியவர் சொல்ல, அமைதியாய் அமர்ந்திருந்த சுந்தரியின் அருகில் வந்த அவள் தங்கை கண்ணகி பதட்டமாய்... ''சுந்தரி... உனக்குப் பிடிச்சிருக்கா..? எனக்குப் பிடிக்கலை. அவன் பார்வையே சரியில்லை. ஏதோ தப்புன்னு படுது..!'' என்றாள் வெறுப்புடன்.

உடனே அவள் தம்பி மனோஜ்.... ''அக்கா.... இவ பேச்சக் கேக்காத. பொறாமை இவளுக்கு. எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.... சும்மாவா நூறு பவுன்ல! மாப்பிள்ளை ஃப்ரீ....!'' எனக் கேலி செய்தபடி அங்கிருந்து நகன்றான்.

சுந்தரி அங்கிருந்த சுவாமிப் படங்களைப் பார்த்தபடி... ''அம்மா,

அப்பாவிற்குப் பிடிச்சிருந்தா சரி . எனக்கு எது சரினு அவங்களுக்குத் தெரியும்!'' உள்ளுக்குள் அவன் பார்த்த பார்வை குழப்பம் தர, சுந்தரியின் கண்கள் அசையாமல் விநாயகரையே பார்த்துக் கொண்டிருந்தன.

கண்ணகி குழப்பத்துடன் 'இவள் யாரைச் சொல்கிறாள்...? அவங்களுக்குத் தெரியும் என; பெற்றோரையா, கடவுளையா...!?" கண்ணகி யோசித்தபடி அம்மாவைப் பார்க்க, அவள் அப்பாவைப் பார்த்தாள். 'அப்பா தானே இங்கு எல்லாம்' என்பது போல் இருந்தது அம்மாவின் பார்வை!

'சுந்தரிக்குச் சம்மதம்' என மாப்பிள்ளை வீட்டாரிடம் சொல்லப்பட்டு, உடனே தாம்பூலம் மாற்றப்பட்டது. அன்று முழுவதும் மின்சாரம்.... வருவதும், போவதுமாய்!

வீடு அடிக்கடி நிறம் மாற்றிக் கொண்டது !?!

...................

சற்று நேரத்தில் மாப்பிள்ளையும் அவர் அண்ணனும் மொட்டை மாடிக்குச் சென்றார்கள்... "என்னடா பரத்.... பொண்ணு ஓகே தானே ?!''

''ம்... பிடிச்சுருக்கு. கெட்டிக்காரியாம்ல; பார்த்துடுவோம். அவ அட்ஜஸ்ட் பண்ணுனா கொஞ்சம் தேறும்...! இன்னொரு ஐம்பது பவுன் கொடுத்தா , இரண்டாவது மகளையும் கொடுத்துடுவான் போல அவ அப்பன்» என பரத் சிரிக்க...

''சத்தமா பேசாதடா தம்பி... யாரு காதுலயாவது கேக்கப் போகுது..'' எனக் கூறியபடி மாப்பிள்ளையின் அண்ணன் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தான் .

அங்கே... உயிர் பெற்ற சிகரெட்டின் வெளிச்சத்தில், இருள் தன் நிறத்தை மாற்ற முடியாமல் ஒளிந்து கொண்டது!

## 2

## வனஜா முத்துக்கிருஷ்ணன்



தன் கையில் இருந்த சிகரெட்டின் சாம்பலைத் தட்டிவிட்டு, "வாடா.கீழே போகலாம்'' என்று பரத்தின் தோளில் கை போட்டபடி இறங்கி வர, வாசலில் நின்ற காரில் இருந்து பட்டுப் புடவை சரசரக்க இறங்கிய ஒரு பெண்மணியைப் பார்த்து இருவரும் அதிர்ச்சி அடைந்தார்கள்.

விடுவிடுவென்று கோபமான முகத்துடன் உள்ளே நுழைந்த அந்தப் பெண்மணி, பரத்தை பார்த்தவுடன் சட்டென்று தன் முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, ''என்ன... கண்ணுங்களா... என்கிட்ட சொல்லாம லேயே கல்யாணத்தை முடிக்கிறதா எண்ணமா? வனிதாவா கொக்கா?'' என்று குத்தலாகக் கேட்டபடியே அங்கிருந்த நாற்காலியின் மீது கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்தாள்.

''இல்ல சின்னம்மா.. உங்ககிட்ட சொல்லாம நடத்துவோமா என்ன? சும்மா தட்டு மாத்திக்கிட்டோம்.. அவ்வளவுதான்" என்றான் பரத் தடுமாற்றத்துடன்.

இதைக் கேட்ட குமாரின் உள்ளம், 'பார்க்க வில்லி மாதிரி இருக்குற இந்த சின்னம்மா யாரு.!?' என குழம்பியது.

அதே சமயம் கண்ணகி மனதும் 'இந்த வனிதா அம்மா நல்லவங்களா, கெட்டவங்களா? ஏன் பரத்தும் அவன் அண்ணனும் திருதிருன்னு

முழிக்குறாங்க.!' என யோசித்தது.

''சரி..சரி, என்னமோ போங்க. நானில்லாம பெண்ணைப் பார்த்து நிச்சயம் பண்ணிட்டீங்க. அடுத்து டும்டும் தானே?'' என்று வனிதா எகத்தாளமாகச் சிரித்தாள்... 'இந்தப் பசங்க ஏதோ ப்ளான் பண்ணி இருக்காங்க... கண்டுபிடிப்பா இந்த வனிதா !' என நினைத்தாள்.

''பரத்...எங்க அந்தப்புது பொண்ணு? கண்ணுல காட்ட மாட்டீங்களோ.? இந்தக் காலத்துப் பொண்ணுங்க பார்க்க பசு மாதிரி இருப்பாளுக.. விட்டா குதறி எடுத்துடுவாங்க. கிராமத்துப் பொண்ணுங்கதானேனு நெனக்காதீங்க.!» என்றபடியே குமார் வீட்டை நோட்டம் விட்டவள், ஆங்காங்கே சுவற்றில் தொங்கிய அழகிய ஓவியங்களைக் கண்டு ஆச்சரியமானாள்.

பவ்யமாய் வந்து நின்ற சுந்தரியைப் பார்த்து ''பரவாயில்லை; பொண்ணு நல்லாத்தான் இருக்கு.'' என்றாள் வனிதா.
.

'ஆனா.... எந்த நம்பிக்கையில இவ அப்பன் நிச்சயம் பண்ணுனான்... வெளிநாட்டு மாப்பிள்ளைனு மயங்கிட் டான் போல...' தன் புடவையையும், நெக்லஸையும் பாந்தமாய்ச் சரி செய்தபடி கிளம்ப எத்தனித்த வனிதா கேட்டாள்.

''சரி சரி.கல்யாணம் என்னிக்கு வச்சிருக்கீங்க?''

அவசர அவசரமாக குமார், “மாப்பிள்ளை இந்த வாரக் கடைசியில் ஊருக்குக் கிளம்பணுமாம். அதனால சிம்பிளா இந்த வெள்ளிக்கிழமை கோவிலில் வச்சு தாலி கட்டிடலாம்'' என்று சொன்னவாறே பற்கள் தெரிய சிரித்தான்.

''எப்படியோ கல்யாணம் நடந்தா சரினு நினைக்கிறீங்க போல» என வனிதா நேரடியாய் குமாரைப் பார்த்து கேட்க, சிறிதும் கலங்காமல் இளித்தபடி ஒருபுழுவைப் போல் நெளிந்தான் குமார்.

...............

திருமண நாளன்று, சுந்தரியின் தாலியையும், நகைகளையும் தொட்டுப் பார்த்த பரத்தின் உறவுக்கார பெண் மணிகள், ''ஏ.. சுந்தரி பொண்ணு, நீ கொடுத்து வச்சவ! எவ்வளவு நகைகள்! ம்...'' என்று பெருமூச்சு விட்டனர்.

மாலை வரவேற்பில் இசைக் குழுவினர் பாட, பரத்தும் அவன் அண்ணனும் நடனமாட ஆரம்பித்தனர்.

“எப்படி ஆடுறான் பாரு நம்ம பரத்... ம்.. இந்த பட்டிக்காட்டு பொண்ணு சுந்தரிக்கிட்ட என்னத்த பார்த்தானோ? இவளுக்கு இசை, டான்ஸ் பத்தி ஏதாவது தெரியுமா?» என சுந்தரியைப் பார்த்து கேலி செய்ய, ''அதானே'' என உதட்டுச் சாயத்துடன் வந்த மற்றொரு பெண் குத்தலாகப் பார்த்தபடி சிரிக்க...

இவர்களின் வார்த்தைகளை ரசித்தது போல் பரத் சுந்தரியை கிண்டலாய்ப் பார்த்தான்.

சரமாரியாக சுந்தரியைத் தாக்கிய வார்த்தைகளைக் கேட்டு, வெகுண் டெழுந்த கண்ணகி, பழங்கால இசைக் கருவியான ஒரு செண்டை மேளத்தை தூக்கிக் கொண்டு வந்தாள்.

“என் அக்கா சுந்தரியின் திறமைகள் உங்கள் யாருக்கும் தெரியாது.... இந்த 'செண்டை மேளத்தை' அவள் வாசித்து ஆடினால்.... அப்பொழுது தெரியும், அவள் யாரென!» என கோபமாய்ப் பேச,.

பரத்தும் ''அப்படியா... எங்கே பார்ப்போம்.. சுந்தரி யாரென?” என கேலியாய்ச் சிரிக்க, கிரி சுந்தரியைப் பார்த்து புன்னகைத்து தலையாட்ட,

சுந்தரி செண்டை மேளத்தை

தொட்டு வணங்கி, அடிக்க ஆரம்பித்தாள் . இசையின் வேகம் கூடக் கூட, மெய்மறந்த சுந்தரி தன்னையறியாமல் இசைக்கேற்ப ஆடத் தொடங்க.... அங்கிருந்த எல்லோர் முகத்திலும் வியப்பு!

சுந்தரியைக் கேலி செய்த பெண் களின் முகத்தில் ஏமாற்றங்கள் வழிய, குமார் திகைக்க , அரங்கம் ஆர்ப்பரித்தது. அங்கே பரத்தும் மெய்மறந்து கை தட்டியதை சுந்தரி வெட்கத்துடன் கவனித்தாள் .

.............

திருமணம் முடிந்து காரில் ஏறப் போன சுந்தரியைச் சுற்றி வீடும் தெருவும் நிற்க, அடுத்த வீட்டு ஜன்னலில் இருந்து ஏக்கத்துடன் பார்த்த கிரி,

'சுந்தரி... நாம இருவரும் ஒன்றாகக் காலேஜ் சென்று படித்த நாட்கள் எத்தனை அருமை! என்றென்றும் என் பிரியமான தோழி நீதான். நீ நல்லபடியாக வாழ என்றும் நான் உன்னுடன் இருப்பேன்.' என்று எண்ணியபடி, சுந்தரியை தம்ஸ்அப் காட்டி புன்னகைத்தவாறே வழியனுப்பி வைத்தான்.

அங்கே ஒவ்வொருவரின் கண்களிலும் வழிந்த கண்ணீரின் வண்ணம் வெவ்வேறு நிறங்களில் ..!?!

..............

இலக்கை நோக்கி பறக்கும் விமானத்தில், சுந்தரியின் அருகில் பரத்.... ஏதேதோ பேசியபடி ...

சு ந்தரியின் மனம் தன் நாட்டையும் வீட்டையும் சுற்றியபடி இருக்க,

''ஏய் சுந்தரி.. நான் பேசிக்கிட்டே வரேன்.. .நீ எதுவும் பேசாமல் வரே? எல்லோரையும் விட்டுட்டு வந்தது... அதுவும் உன் உயிர்த் தோழன் கிரியைத் தனியாக விட்டுவிட்டு வந்தது கஷ்டமாக இருக்கா?'' என்று பரத் நக்கலாக கேட்க,

''ஆமாங்க.. கிரி என்னோட உயிர்த் தோழன் மட்டும் இல்லை.அவன் எனக்காக எதையும் செய்யும் அற்புதமான மனிதன்.'' என புன்னகையுடன் பதிலளித்தாள் சுந்தரி.

''ஹா ஹா... தோழன், தெரியுது.'' கூர்மையான பார்வையுடன் பதிலளித்தான்.

சற்று நேரத்தில் விமானம் தரை தொட்டது.

''இந்தா...உன்னோட பேக்கில் பாஸ்போர்ட், விசா எல்லாம் இருக்கு. இது இமிகிரேஷன். அங்க போனதும் திருதிருன்னு முழிச்சுக்கிட்டு,ஏதாவது உளறி வைக்காதே..சரியா?" பரத்தின் பேச்சில் சட்டென்று அக்கறை வழிந்தது.

'நிமிடத்திற்கு நிமிடம் மாறும் இவன் பேச்சும், தோரணையும் சுந்தரிக்கு புரியாத புதிர் போல் தோன்ற...

இமிக்ரேஷன் அதிகாரி சுந்தரியை புன்னகையுடன் வினவினார்.

''மேம்.. யுவர் விசா அண்ட் பாஸ்போர்ட் பிளீஸ்.!''

''எஸ். திஸ் ஸ் மை பாஸ்போர்ட் அண்ட் விசா.''

''ஆர் யூ மேரிட்?''

''எஸ். ஐம் சுந்தரி பரத்.''

''கேன் ஐ சீ யுவர் மேரேஜ் சர்டிபிகேட்?''

''எஸ்.. ஷ்யூர்..'' தயாராய் வைத்திருந்த ஆவணங்களை காட்டினாள். அனைத்தையும் புன்னகையுடன் பார்த்தபடி சுந்தரியிடம் அன்பாய்ப்

பேசினார் அந்த அதிகாரி.

சுந்தரியும் அமெரிக்க ஆங்கிலத்தில் சரளமாய் பேச,

"எஸ்.வெல்கம் டு அவர் கண்ட்ரி. நவ் யூ கேன் கோ அண்ட் என்ஜாய்."என்று புன்னகையுடன் விடையளிக்க,

"தேங்க்யூ ஸோ மச், கைண்ட் ஆவ் யூ" சுந்தரி புன்னகைத்தபடி கையசைத்தாள்.

அவள் கலகலவென்று அதிகாரி யிடம் அமெரிக்க ஆங்கிலத்தில் பேசி யதைக் கண்டு பரத் சற்று அதிர்ச்சி அடைந்தது போல் தெரிந்தது சுந்தரிக்கு.!! 'எஸ்.... இன்னும் நிறைய அதிர்ச்சிகள் உனக்கு இருக்கு பரத்' என்று மனதிற்குள் எண்ணினாள் சுந்தரி.

அமெரிக்க தெருக்களில் கார் நழுவி, வீட்டை அடையும் வரை பரத் ஏதோ யோசனையில் இருக்க, சுந்தரி அனைத்தை யும் ரசித்துக் கொண்டே வந்தாள்.

'அழகிய தெருக்களும்' உயரமான கட்டிடங்களும் ... வாவ்'

வீடு மிக அழகாய் இருந்தது. ஆனால், ஏதோ வித்தியாசமாய் பட்டது. சற்றே பயம் கவ்வுகையில்.. "சுந்தரி, வீட்டை அப்பறம் சுத்தி பார்க்கலாம்.... இந்த காபியை குடிச்சுட்டு இப்ப நீ படுத்து கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு. நான் என் பிரண்ட் கூட பேசிட்டு வரேன்." அவன் குரல் கண்டிப்புடன் ஒலித்தது.

சிறிது நேரத்தில் சுந்தரி தூங்கி விட்டாளா என்பதை உறுதி செய்து கொண்ட பரத், வெளியே சென்று தொலைபேசியில் தன் நண்பன் ராகுலிடம் பிரெஞ்சு பாஷையில் பேச ஆரம்பித்தான். அதே நேரத்தில் தூங்குவது போல் நடித்த சுந்தரியும், அவர்கள் இருவரும் பேசுவதைக் கேட்டு திகைத்தாள்!

கல்லூரியில் பல மொழிகளைக் கற்ற, அமைதியின் உறைவிடமாய்த் திகழ்ந்த சுந்தரியின் முகம் சற்றே சிவப்பாக மாறியது.!?

......................

# 3
# ருக்மணி வெங்கட்ராமன்



சுந்தரி அமைதியின் உறைவிட மாய்த் திகழ்ந்தாலும், சிந்தனையில் அவள் பாரதி கண்ட புதுமைப்பெண்.!

இறுதியாக பரத் நண்பனிடம் ''யாரிடமும் சொல்லாதே. காரியம் முடியும் வரை ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். புரிந்ததா?!' தெளிவாக சுந்தரிக்கு கேட்டது. 'யார் இவன்...? தவறானவனா? . ஏதோ என்னை வைத்து திட்டம் தீட்டுகிறார்கள் என்று மட்டும் புரிகிறது. பரத் தவறானவனாக இருந்தால் என்னுடைய விசா, பாஸ்போர்ட்டை அவன் அல்லவா வைத்திருப்பான்... ஆனால் இவன் என்னிடம் கொடுத்து விட்டானே!.

பெண் பார்க்க வந்த பொழுது 'உனக்கு பாஸ்போர்ட் இருக்கா? என பரத் கேட்டதும், 'பாஸ்போர்ட் என்ன.. விசா கூட ஐந்து வருடங்களுக்கு இருக்கு" என தான் சொன்னதும் சுந்தரிக்கு ஞாபகம் வந்தது.

ஒருவேளை பரத் தவறானவனாக இருந்தால், எப்படியாவது பரத்தின் திட்டத்தை முறியடித்து தன்னைக் காத்துக்

கொள்ள எண்ணிய சுந்தரி, உடனே தன் கம்பெனிக்கு அமெரிக்கா வந்ததையும் வேலையில் இணையும் நாளையும் தெரிவித்து மெயில் அனுப்பினாள்.

...............

அடுத்த நாள் பரத் பரபரப்பாக செயல் பட்டான். அதிகாலையிலேயே அவன் வெளியில் செல்ல, சுந்தரி சட்டென்று வீட்டின் உட்புறம் தாழிட்டுக் கொண்டாள்.

திரும்பி வந்தவன் கதவு உள்பக்கம் தாழிடப்பட்டதை உணர்ந்தான். அழைப்பு மணியை பல முறை அழுத்தியும் பதிவில்லாமல் போக, ''சுந்தரி... சுந்தரி கதவைத் திற'' என்று கத்தினான்.

சுந்தரி கதவைத் திறந்தவுடன் ''ஏன் கதவை தாழிட்டுக் கொண்டாய்? நான் எப்படி உள்ளே வருவது?'' பரத் கோபமாய் கேட்டான்.

''என்னுடைய பாதுகாப்பிற்காக கதவைத் தாழிட்டேன். இதில் என்ன தவறு?'' என்று ஆங்கிலத்தில் வினவினாள் சுந்தரி.

''பாதுகாப்பா...?'' என பரத் பலமாய்ச் சிரித்து, ''உன் ஆங்கில புலமையை என்னிடம் காட்டாதே..'' என்றான் கேலியாய்.

சுந்தரி கவனமாய்ப் பதிலேதும் சொல்லாமல் அடுக்களைக்குள் சென்று காப்பி கலந்தாள். பரத் தன் நண்பனுடன் பேசிய அந்த உரையாடல் காதருகே ஒலித்துக் கொண்டேயிருந்தது. எதையும் வெளிக்காட்டாமல் நிதானமாய்ச் செயல் பட சுந்தரி முடிவெடுத்தாள் .

''பரத், பரத் .! எங்க இருக்கீங்க?'' என்று கூப்பிட்டபடி, அமைதியாக இருந்த அந்த வீட்டைச் சுற்றி வந்தாள். வீட்டின் வெளியே காமிரா பொறுத்தப் பட்டிருந்ததைப் பார்த்தாள்..

யாரோ படியில் நடந்து வரும் சத்தம் கேட்டதும் வீட்டின் உள்ளே திரும்பினாள். காபியை பரத்திடம் கொடுத்து விட்டு சமையலறையில் இருக்கும் பொருட்களை வைத்து மதிய உணவை தயார் செய்தாள். சுந்தரி தன் கையில் கட்டியிருந்த கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தபடி சமைப்பது , பரத்தின் கவனத்தை ஈர்த்தது. «ஓ...ஸ்மார்ட்வாட்ச்!அழகாகஇருக்கிறதே, யார் கிரி வாங்கி கொடுத்ததா...?'' என்று அவளைச் சீண்டினான்.

அவனின் சீண்டலை பொருட் படுத்தாதது போல் புன்னகைத்தாள்.

''சரி.... சீக்கிரம் புறப்படு. நாம் ஒரு வீட்டிற்கு போகணும்.» பரத் திடீரென்று அவளை அவசரப்படுத்தினான், கைபேசியைப் பார்த்துக் கொண்டே .

''மதிய உணவு இதோ தயாராகிட்டு இருக்கு. சாப்பிட்டு விட்டுப் போகலாமே..?''

''சாப்பாட்டை டிபன் கேரியரில் போட்டு எடுத்துக்கோ; பத்து நிமிஷத்துல கிளம்பிடணும்'' அவசரமாய் சொன்னபடி தன் அறைக்குள் நுழைந்து தாளிட்டான்.

.............

கார் சொகுசாக இருந்தாலும் சுந்தரிக்கு உறுத்திற்று.! வரும் வழியெல் லாம் 'பரத் நல்லவனா? கெட்டவனா?' என்று மனம் ஆராய்ச்சியை நடத்திக் கொண்டிருந்தது.

சுற்றிலும் வயல் வெளியுடன் இருந்த ஒரு தனி வீட்டின் முன் கார் நின்றது.! யோசித்துக்கொண்டே வீட்டின் உள்ளே அடியெடுத்து வைத்த சுந்தரிக்கு அதிர்ச்சி காத்திருந்தது.!

அங்கு வனிதா ஆரத்தியுடன்

நின்றபடி, ''வாம்மா..! புதுப் பொண்ணே...! நான் எப்படி இங்கு வந்தேன் என்று யோசிக்கிறயா? இந்த வனிதா எங்கும் இருப்பாள்''. என சிரிக்க, சுந்தரி விழித்தாள்.

சற்று நேரத்தில் 'வனிதாவின் பையன் வீடு அது 'என்பதை அங்கிருந்த படங்கள் மூலம் தெரிந்து கொண்டாள். வனிதா சகஜமாக பேசினாலும், சுந்தரி மிக கவனமாக இருந்தாள்.

''நான் எல்லோருக்கும் சாப்பாடு கொண்டு வந்திருக்கேன்... வாங்க சாப்பிட லாம்'' என சுந்தரி, வனிதாவையும் பரத்தையும் அழைத்தாள்.
தான் கொண்டு வந்த உணவுகளைப் பிரித்து மேசையில் வைத்து விட்டு, அவர்களுக்காக காத்திருக்காமல் உண்ண ஆரம்பித்தாள்.

''என்ன நீ மட்டும் தனியா சாப்பிடற? உனக்கு மரியாதை கொடுக்கத் தெரியாதா?'' என்று வனிதா கோபப்பட,

''இல்லை அத்தை... ரொம்ப பசிச்சது, அதான். சாரி'' என்று அமைதியாய் புன்னகையுடன் பதில் அளித்தாள்.

வனிதாவின் மனதில் 'இந்தப் பெண் எப்படி கோபப்படாமல் இவ்வளவு சாதாரணமாக இருக்கிறாள்! பரத் நல்லாத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறான் .அவன் திட்டத்துக்கு இவதான் சரி' என்று நினைத்துக் கொண்டாள்.

அதே சமயம் சுந்தரி 'என்னை நான் மனதளவிலும், உடலளவிலும் உறுதியாக்கிக் கொள்கிறேன். என்னுள் இருக்கும் ரௌத்திரம் தேவையேற்படும் போது வெளி வரும் பாருங்கள்' என எண்ணி புன்னகைத்தாள்.

## 4
## கி. இரகுநாதன்



மனித மனம் விசித்திரமானது. மனிதர்களின் பல்வேறு நிஜ நிறங்கள் அவர்களின் மனதில்தான் ஒளிந்திருக் கின்றன. காலச்சுழற்சியில் அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப தங்கள் நிறங்களை பெரும்பாலும் மாற்றிக் கொண்டே இருக்கின்றன..!

சில மாறுகின்றன, சில மாற்றப் படுகின்றன. சில மாற மறுக்கின்றன.!

சுந்தரி சாப்பிட்டு முடிக்கும் வரை பரத்தும், வனிதாவும் காத்திருந்தனர். சுந்தரி நிதானமாக சாப்பிட்டபடி, பரத் தன் நண்பனுடன் பிரெஞ்சு மொழியில் பேசியதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள். 'இவ மட்டும் ஒத்து ழைச்சா நான் எங்கயோ நிப்பேன். வர்றவங்களை சந்தோசமா வெச்சுக்கணும். இவ கிராமத்தில் இருந்து வந்தவ.. அந்த அனுபவம் இருக்கற மாதிரி தெரியல... ஒத்துழைச்சா சரி..'

'பரத்தின் திட்டம் என்ன என்று தெரியவில்லை... இங்கே திடீரென்று வனிதா எதற்கு வந்தாள் என்று புரியவில்லை. இவர்கள் யார்..? என்ன செய்கிறார்கள்..? எதற்காக எனக்கு நூறு பவுன் நகை போட்டு திருமணம் செய்து இங்கே அழைத்து வந்திருக்கிறார்கள்..?' யோசிக்க யோசிக்க சுந்தரிக்கு குழப்பம் தீரவில்லை. எதைப் பற்றியும் தீர விசாரிக்காமல் தன்னை தள்ளி விட்ட தந்தை மீது கோபம் வந்தது. 'என்ன தான் நடக்கும்.. அதையும் பார்க்கலாம்.

எப்போதும் என்னுடன் துணை நிற்கும் தன்னம்பிக்கையை மட்டும் நான் இழக்காமல் இருந்தால் அது போதும்...' எழுந்தாள்.

''முகத்தைக் கழுவி மேக்கப் போட்டுக்க.. அப்புறம் இந்த ட்ரெஸ் போட்டுக்கிட்டு வா..'' என்றாள் வனிதா. முழங்கால் வரை மட்டுமே இருந்தது அந்த உடை.

சுந்தரி அதை வாங்கி கோபத்துடன் மூலையில் எறிந்தாள். "நான் இதைப் போட்டுக்க மாட்டேன்..".

"சுந்தரிக்கு புடவைதான் அட்ராக்ஷன். அதுவே இருக்கட்டும்..அதைத் தான் அவங்களும் விரும்புவாங்க சின்னம்மா .." என கூறிய பரத் "நீ முகம் கழுவி, அழகா டிரஸ் பண்ணிக்கிட்டு வா சுந்தரி... உன்னிடம் ஒண்ணு சொல்லணும்.."

சுந்தரி முகம் கழுவி, தலை வாரினாள். முகத்துக்கு லேசாக பவுடர் போட்டாள். நெற்றியில் மெல்லியதாக வட்டப் பொட்டு வைத்தாள். ஹாலுக்கு வந்தவளைப் பார்த்து "வாவ்..! இப்ப இந்த ஆளுயரக் கண்ணாடியில் பார்.. எப்படி இருக்குனு" என்றான்.

சுந்தரி ஆளுயரக் கண்ணாடிக்கு அருகில் செல்ல, சட்டென கண்ணாடி விலகி.. உள்ளே இருட்டாக இருந்த அறைக்குள் தள்ளப்பட்டாள்.!

வெளியில் சிரிப்பு சத்தம் பலமாகக் கேட்டது !

சுமார் ஒரு மணி நேரம் கழித்து அந்தக் கதவு திறக்கப்பட்டு உள்ளிருந்து ஆத்திரத்துடன் ஓடி வந்த சுந்தரி, ''அடப்பாவி..! என்னை இப்படியா பண்ணுவ'' என்று கேட்டு பரத்தின் நெஞ்சில் ஓங்கி குத்தினாள்.

பரத் பலமாகச் சிரித்தான்.

....................

உள்ளே தள்ளப்பட்ட சுந்தரிக்கு இருட்டில் கண்கள் பழக்கப்பட சற்று நேரம் பிடித்தன. மனதில் எந்த விதமான உணர்ச்சிகள் ஏற்பட்டன என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிய வில்லை. 'நான் இங்கே சிறை வைக்கப் பட்டிருக்கிறேனா..? எதற்காக..? இங்கி ருந்து தப்பிப்பது எப்படி..?' உடல் சற்றே நடுங்கிற்று!

திடீரென்று தூரத்தில் ஒரு மெழுகுவர்த்தி எரிந்தது. சற்றே பயத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒன்று பலமடங்கானது.! வெளிச்சத்தில் பல்வேறு முகங்கள் தெரிந்தன.! சட்டென அந்த இடம் மின் விளக்குகளால் ஒளிபெற்று.. சுந்தரியால் இப்போது அனைவரையும் பார்க்க முடிந்தது. எல்லோரும் எட்டு முதல் பத்து வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகள்.. கூடவே ஒவ்வொரு பிள்ளைகளுடனும் அவர்களுடைய அம்மா அல்லது அப்பா....! அனைவரும் ஜோராக கைதட்டி ஒரே குரலில் "வெல்கம் சுந்தரி மேம்..." என்றனர். சுந்தரிக்குப் புரியவில்லை.

அப்பொழுது அங்கிருந்த ஒரு பெரிய தொலைக்காட்சி உயிர்பெற்று ,அதில் கிரி பேசினான்... சரளமாக... தமிழில்.!.

"அனைவருக்கும் வணக்கம்.. நம் இனிய ஆசிரியை திருமதி சுந்தரி பரத் அவர்களை வரவேற்பதில் நாம் பெருமை கொள்கிறோம். திருமதி சுந்தரி பரத் அவர்கள் ஒரு பன்முகக் கலைஞர். தமிழ், ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மனி போன்ற மொழிகள் இவருக்குத் தெரியும். இவர் ஒரு நடனக் கலைஞர், சிறந்த ஓவியரும் கூட. இந்தியாவில் இவருடைய ஓவியங்கள் புகழ் பெற்றவை.. மனிதர்களின் வெவ் வேறு முகங்களை தத்ருபமாக வரை வதில் வல்லவர்.. அவரைப் பற்றிய ஆடியோ விஷுவல் இப்போது உங்கள் பார்வைக்கு..."

சு ந்தரி நம்ப முடியாமல் பார்த்தாள். கல்லூரிப் போட்டிகளில் பரிசு பெற்ற ஓவியங்கள்... மனிதர்களின் பல்வேறு உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் விதமாக தான் வரைந்த வெவ்வேறு ஓவியங்கள்.. 'அமைதி, மகிழ்ச்சி, கோபம், ஆத்திரம், வெறுப்பு, நயவஞ்சகம், அப்பாவித்தனம், ஆக்ரோஷம் வஞ்சகம், ஏமாற்றும் முகங்கள்...ஏமாறும் முகங்கள்...!' எத்தனை விதமான முகங்கள்..? மனிதர்களின் புறநிறங்களைக் காட்டும் முகங்கள்..!

சுந்தரி வரைந்து, அவள் வீட்டுச் சுவற்றில் மாட்டி இருந்த ஓவியங்கள் மட்டும் இல்லாமல், வீட்டில் பரண் மேல் தூக்கிப் போட்டிருந்த அத்தனை ஓவியங்களும் உயிர்பெற்று, ஆடியோ விஷுவலில் காண்பிக்கப்பட்டன. அவள் படித்த பள்ளிக்கூடம், கல்லூரி... கூடவே திருமண வரவேற்பின் போது சுந்தரி ஆடிய செண்டு மேள நடனம்,... என அனைத்தும் ஒலி, ஒளி வடிவத்தில்...

இறுதியாக மீண்டும் பேசிய கிரி, ''இன்று முதல் 'வாஷிங்க்டன் தமிழ்ப்பள்ளி'யின் முதல்வராகப் பொறுப் பேற்க வந்திருக்கும் உங்களை, தலைமை நிர்வாக அதிகாரி திரு பரத் அவர்கள் சார்பிலும், இந்தப் பள்ளியின் சார்பிலும் வருக வருக என வரவேற்பதில் பெருமை கொள்கிறேன்...''

அதைத் தொடர்ந்து அங்கே கூடியிருந்தவர்களின் கைத்தட்டலும், சுந்தரியின் ஆச்சரியமும் அடங்க வெகு நேரமாயின. இதற்குள் சுந்தரி சற்றே இயல்பு நிலைக்கு வந்திருந்தாள். எல்லோரும் அவளுடன் வந்து கைகுலுக்கி மகிழ்ச்சியுடன் செல்ஃபியும் எடுத்துக் கொள்ள, சுந்தரியின் கண்கள் பரத்தைக் தேடின.

''தமிழர் திருநாளாம் பொங்கல் முதல் அந்தப் பள்ளியில் தினந்தோறும் ஆங்கிலவழிக் கல்வியுடன் தமிழ் வகுப்பு களும், மற்றும் ஓவியம், இசை, நடனம் போன்ற வகுப்புகளும் நடத்தப்படும்'' என்ற அறிவிப்பைக் கேட்டு எல்லோரும் அதில் சேர்வதற்கு ஆர்வம் காட்டினர்.

சுந்தரியின் உள்ளத்தில் இன்னும் பிரமிப்பு அடங்கவில்லை.

'இவைகள் அனைத்துமே எனக்குப் பிடித்த விஷயங்கள். என்னைப் பற்றிய எல்லா விஷயங்களும் பரத்துக்குத் தெரிந்தும் ஏன் இந்த நாடகம்.? கிரியை எப்போது சந்தித்தார்கள்...?'

சுந்தரி இன்னொன்றையும் யோசித் தாள். 'உள்ளத்தில் வஞ்சகமும், உதட்டில் புன்னகையும் கொண்ட மனிதர் களை வரைந்த தன்னால், உள்ளத் தில் நல்லவனாக இருந்தாலும் வெளிப் பார்வைக்கு வில்லத் தனம் காட்டும் பரத் போன்ற மனிதர்களின் நிறங்களை இதுவரை தான் வரைந்ததில்லை என.

அனைவரும் விடைபெற்ற பிறகு சுந்தரிக்கு பரத்தின் மேல் கோபம் வந்தது. இதை நேரடியாகச் சொல்லி அழைத்து வந்திருக்கலாமே.. எதற்காக இவ்வளவு டென்ஷன் தர வேண்டும்..?' கோபத்தினூடே வந்த ஆத்திரத்தில் கதவைத் திறந்துகொண்டு "அடப்பாவி.. என்னை இப்படியா பண்ணுவ..?" என்று கத்தியவாறு பரத்தின் நெஞ்சில் ஓங்கிக் குத்தினாள். பரத் பெரிதாகச் சிரித்தான்.

''இந்த ஒரு வருஷத்துல இந்தியா வுக்கு நான் நாலு முறை வந்திருக்கேன். ஒருமுறை வனிதா சித்தியின் வீட்டில் இருந்து கிரி செல்வதைப் பார்த்தேன். வேறொரு முறை அவனுடன் பேசிக் கொண்டிருந்த உன்னைப் பார்த்தேன். மெதுவாக சித்தியிடம் விசாரித்ததில் கிரிக்கு உன் மீது இருப்பது ஆழ்ந்த நட்பு என்று அறிந்து கொண்டேன். அதற்கப்புறம் தான் ஒவ்வொருமுறை நான் இந்தியா வரும் போதும் உன்னைப் பற்றிய விவரங்களைத் தேடி அறிந்தேன். நீ என் மனைவியாய் வர ஆசைப்பட்டேன் சுந்தரி.''

சற்றே நிறுத்திய பரத் வனிதாவைப் பார்த்தான். வனிதா சுந்தரியைப் பார்த்து புன்னகைத்தாள். "இதெல்லாம் உங்க கல்யாணம் ஆனப்பறம் தான் எனக்கே தெரியும் சுந்தரி.." என்றாள்.

பரத் தொடர்ந்தான்.

"உன்னைப்பற்றிதெரிந்துகொண்ட பின்னர் தான் இங்கே நான் பணி புரியும் வாஷிங்டனிலேயே உனக்காக ஒரு ஸ்கூல் நடத்த வேண்டும் எனத் தீர்மானித்தேன். களங்கமில்லா நட்புக்கு அடையாளமாக விளங்கும் கிரியை அதற்கு மேலதிகாரியாக நியமித்தேன். அந்தப் பள்ளியில் ஆங்கில வழிக் கல்வியுடன் இங்குள்ள பிள்ளைகளுக்கு தமிழும், பரதமும், இசையும், தமிழர்களின் தற்காப்புக் கலைகளும் கற்பிக்கப்பட வேண்டும் என்பது என் எண்ணம்..."

சுந்தரி கோபத்துடன் கேட்டாள். "எல்லாம் திட்டமிட்டுத் தான் செஞ்சிருக்கீங்க.. ஆனா இதையெல்லாம் என்கிட்ட நேரடியா சொல்றதுக்கு என்ன..?"

"வாழ்க்கையில ஒரு திரில் வேணாமா..? இல்லன்னா ரொம்ப போரடிக்கும்ல.." என்றான் பரத் சிரித்துக் கொண்டே.

சுந்தரி ஆத்திரத்துடன் கைகளை உயர்த்தி மீண்டும் பரத்தின் நெஞ்சில் ஓங்கிக் குத்தப் போக, சட்டென்று அவள் கைகளை இறக்கி அவளை இறுக அணைத்தான் பரத்.

அவனின் இதய துடிப்பின் ஓசையில், சுந்தரியின் ஆனந்தக் கண்ணீர் நிறம் மாறியது.!

## தமிழ்நெஞ்சம்

### இதழில் எழுதுபவர்கள் கவனத்திற்கு...

**பிரதிமாதமும் மாதத்தின் முதல் வாரத்தில் இதழ் வெளிவரும். அதற்கேற்றார்போல 20 தேதிக்கு முன்பாக ஆக்கங்களை அனுப்புதல் நல்லது. அதற்குமேல் வரும் ஆக்கங்கள் அடுத்த இதழில் சேர்க்கப்படும். முந்திக்கொள்வது நல்லதல்லவா?**

**தவிர, ஆக்கங்களை எழுதிவிட்டு அவசர, அவரமாக ஆக்கத்திற்கான தலைப்பு, மற்றும் எழுதியவர் பெயர்கூட எழுதாமல் அனுப்பிவிடுகிறீர்கள். அப்படியானவைகள் நிச்சயமாக இதழில் இடம்பெறச்செய்ய முடியாது.**

**இயன்றவரை மின்னஞ்சலில் அனுப்பிவைக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்கிறோம். முகநூல் உள்பெட்டி, வாட்ஸ் அப் போன்ற தொடர்பில் ஆக்கங்களை அனுப்புவதைத் தவிர்க்கவும்.**

**மின்னஞ்சல் : editor@tamilnenjam.com**

# சிறுவர்கள் சங்கமம்

## ஒரு கதையின் கதை

ஒரு கதை இருந்ததாம் அது எல்லோர்கிட்டயும் போய்ச் சேரணும்னு நெனைச்சதாம். எப்படினு அதுக்குத் தெரியலையாம். நெறைய நேரம் யோசித்தும் அதுக்கு ஒரு யோசனையும் வரலையாம்.

'சரி, யார்கிட்டயாவது கேட்போ முனு முடிவு பண்ணி சுத்தியும் பார்த்ததாம். அங்கே ஒரு கிளி இருந்ததாம்.

''கிளியே... கிளியே, நான்தான் கதை, என்னைக் கொண்டு போய் எல்லோரிடமும் சேர்க்கிறாயா?'' கிளியிடம் கதை கேட்டதாம்.

''என்னால் எப்படி முடியும்'' கிளி கேட்க ''நீதான் நல்லா பேசுவே, பறந்து பல இடங்களுக்கும் போவ, அதான் உங்கிட்ட கேட்டேன்'' சொல்லியது கதை.

''நீ சொல்றது உண்மைதான், ஆனா என்னால முழு கதையையும் சரியா சொல்ல முடியுமானு சந்தேகமா இருக்கு, நாம வேறு யாருகிட்டையாவது உதவி கேட்கலாமா?'' கிளி கேட்டதும் ''சரி'' என்றது கதை.

''எனது முதுகில் உட்கார்ந்து கொள், நாம் ஊருக்குள் சென்று எனது நாய் தோழனிடம் கேட்கலாம்'' சொன்னதும் கிளியின் முதுகில் அமர்ந்தது கதை. கிளி பறந்து ஊருக்குள் சென்றது.

அங்கு ஒரு வீட்டின் முன்பு வெள்ளை வண்ணக் குட்டி நாய் அமர்ந்து இருந்தது. ''நல்லாயிருக்கியா இராமு, பார்த்து நாளாயிடுச்சு'' கேட்டபடியே நாயின் பக்கத்தில் உட்கார்ந்தது கிளி.

''நல்லாயிருக்கேன் கிளியக்கா, நீங்க எப்படி இருக்கீங்க?'' என்று பதில் சொன்ன படியே கதையை உற்றுப் பார்த்தது நாய்க்குட்டி.

''நானும் நல்லாயிருக்கேன் இராமு, இது பேரு கதை, எல்லோர்கிட்டேயும் போய்ச் சேரணும்னு ஆசைப்படுது. எங்கிட்ட உதவி கேட்டது. நான் உன்னிடம் கூட்டிக்கிட்டு வந்திருக்கேன். எப்படி யாவது கதையோட ஆசையை நிறை வேத்தி வைக்கணும் இராமு'' கிளி சொன்னதைக் கவனமாகக் கேட்ட இராமு சிறிது நேரம் சிந்தனை செய்தபடியே இப்படியும், அப்படியும் நடந்தது.

''என்னாலயும் உன்னை எல்லோரி



டமும் கொண்டு சேர்க்க முடியாது. ஆனால் என்னை வளர்ப்பவரால் அது முடியுமுனு நெனைக்கிறேன். வீட்டுக்குள்ள வாங்க, அவரிடம் கேட்கலாம்'' சொல்லிக்கிட்டே வீட்டுக்குள் ஓடியது. கிளியும், கதையும் நாய்க்குட்டியின் பின்னாலேயே சென்றன.


நாற்காலியில் அமர்ந்து இருந்த ஒருவரிடம் சென்று வாலாட்டிய நாய்க் குட்டி, அவரிடம் கதையின் ஆசையைக் கூறியது. கதையும், கிளியும் அவர் சொல்லப்போவதைக் கேட்க ஆவலுடன் காத்திருந்தன.

''ஓஓஓ.... தாராளமாக செய்யலாமே, இந்தக் கதையைப் புத்தகத்தில் இடம் பெறச் செய்தால் அது எல்லோரிடமும் போய்ச் சேர்ந்திடும்'' என்றார்.

''மகிழ்ச்சி... மகிழ்ச்சி அண்ணா, நான் புத்தகத்தில் இடம் பெற உதவுங்கள்'' துள்ளிக் குதித்தது கதை. தனது இறக்கை களை விரித்து, சுற்றியும் பறந்து வந்து மகிழ்ச்சியைத் தெரிவித்தது கிளி.

அடுத்து வெளியிட்டப் புத்தகத் தில் அந்தக் கதையை இடம் பெறச் செய்தார் அண்ணா. புத்தகம் வாசித்த அனைவரிடமும் கதை சென்று சேர்ந் தது. கிளிக்கும், நாய்க்குட்டிக்கும், அண்ணா வுக்கும், வாசித்தவர்களுக்கும் நன்றி கூறியது கதை.

**சு. பிரவந்திகா**
சென்னை



# அம்மாக்கு...

அம்மா அம்மா அன்பு அம்மா
அன்பால் என்னை அணைத்தாய் அம்மா
அன்றும் இன்றும் என்றும்
என்னை விட்டுப் பிரியாத அம்மா
அன்பை மட்டுமே காட்டும்
செல்ல அம்மாக்கு ஆயிரம் முத்தங்கள்

**கே.ஜே. சாய்ஶ்ரீ**

# அப்துல் கலாம் ஐயா

அக்னி சிறகர்
ஆய்வில் சிறந்தவர்!
இந்தியாவை ஆண்டவர்!
ஈடுபாட்டுடன் செயல்பட்டவர்!
உலகையே வியக்கவைத்தவர்!
ஊக்கம் அளித்தவர்!
எழுச்சி கண்டவர்!
ஏவுகணை நாயகர்!
ஐயம் போக்கியவர்!
ஒப்பற்ற தலைவர்!
ஓயாமல் உழைத்தவர்!!
மக்கள் மனதில்
நிலைத்து நிற்கும்
உன்னத தலைவர்.
அவரே நம் ஐயா
அப்துல்கலாம் அவர்கள் !!



**பி . பர்வதவர்மன்**
ஓசூர்

# திருவிழா பயணம்



"மார்ச் மாதமும் வந்தாச்சு திரு விழாவிற்கு எல்லாம் சேர்ந்து ஊருக்கு போகலாம் அம்மா"

"சரி! நானும் யோசித்தேன் நீங்களும் சொல்லிட்டீங்க கண்டிப்பா போலாம் கண்ணம்மா''.

''எல்லாரும் ரெடியா நான் ரெடி'' எனக் கேட்டுட்டு வண்டியில அமர்ந்தாங்க. குழந்தைகளுக்கு ஒரே சந்தோசம். பாட்டுப் பாடிக்கிட்டே சந்தோசமா ஊருக்குப் போனாங்க.

பாட்டியோட கொஞ்ச நேரம் பேசிட்டு எல்லாரும் விளையாட போனாங்க.

''விளையாண்டாச்சா சரி எல்லாரும் டீ குடிக்கலாம்''னு பாட்டி சொல்ல, தாத்தா செய்தித்தாள் படிக்க எல்லாரும் அவங்க அவங்க வேலைய பார்த்தாங்க.

பாட்டியும் பேரகுழந்தைகளோட பேசிக்கிட்டு தலை வாரிக்கொண்டு இருந்தாங்க. தம்பியும் ஆட்டுக்குட்டியோட விளையாண்டுட்டு இருந்தான்.

''பூனைக்குட்டி அழகாய் இருக்குது பாட்டி. நான் அதுகூட விளையாடுவேன்'' என்று கூறினான். இப்படி இரண்டு, மூன்று நாட்கள் ஓடின.


''திருவிழாவும் வந்தது. அனைத்துக் குழந்தைகளும் சந்தோசமா இருந்தாங்க. கோவிலுக்குப் போனங்க.

மாலைப்பொழுது வந்துவிட்டது. எல்லாரும் கிராமத்துத் திருவிழா எப்படி இருக்குன்னு தெரிஞ்சுக்கிட்டாங்க. மறு நாள் தங்களுடைய ஊருக்குச் செல்ல முடிவு செய்தாங்க.

"பாட்டி உங்களோட, என் நண்பர் களோட கிராமத்தில் வந்து திருவிழா கொண்டாடியது ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. தாத்தா, பாட்டி... போயிட்டு வரேன்" என்று கை அசைத்தபடி ஊருக்குப் போனாங்க.

**செ. ஸ்ரீலேகா**
ஆறாம்வகுப்பு, திருச்சி-12

# முதலையும் நண்பர்களும்...



**ஜீ.மைத்ரேயி**
வந்தவாசி

ஒரு எழில் மிகுந்த நகரம் ஒன்று இருந்தது. அந்த நகரத்தின் பெயர் சத்திய விஜய நகரம் ஆகும்.

அந்த நகரில் அழகிய மாளிகைகள் நிறைந்து இருந்தன, எழில் கொஞ்சும் அழகிய பூங்காவும் இருந்தது. அந்த இடத்தில் ஒரு குளம் இருந்தது.

குளக்கரையில் மரம், செடி, கொடி, நத்தை, மீன்கள், தவளைகள், வண்ணத்துப் பூச்சி மட்டும் வானம் நண்பர்களாக வாழ்ந்து வந்தன.

அப்பொழுது வழிமாறி அங்கு வந்த ஒரு முதலையைப் பார்த்தவுடனே குளத்தில் வாழ்ந்த மற்ற உயிரினங்களுக்கு ஒரே ஆச்சரியம்!

முதலை ஊர்வன இனத்தை சேர்ந்த விலங்கு ஆகும். இது நீரிலும் நிலத்திலும் வாழ வல்லது. இது நான்கு கால்களையும் வலுவானவாலினையும் கொண்டது. வெப்ப மண்டலத்தில் அதிகமாக காணப்படும்.

அங்கிருந்த மீனுக்கு முதலையைப் பார்த்து பயமாகிவிட்டது. நம்மைப் பிடித்துச் சாப்பிடுமோ என்ற அச்சம் அதிகமாகியது ஆகையால் நண்பர்களிடம் முதலையைப் பற்றிய தனது பயத்தைக் கூறத் தொடங்கியது.

அப்போது தவளை "முதலில் அனைவரும் முதலையைப் பற்றி அறிந்து நாம் அதை சிறந்த நண்பராக்கிக் கொள்ளலாம். பிறகு பார்ப்போம்" என்றது. தவளையின் கருத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டன.

இதன்படிஅனைவரும்ஒற்றுமையாக மகிழ்ச்சியாகவாழ்ந்துவந்தனர்.அப்பொழுது கோடை காலம் வந்தது. குளத்தில் நீரின் அளவு குறையத் தொடங்கியது. ஆகையால் முதலையால் நீண்ட நாட்கள் நிலத்தில் வாழ முடியவில்லை. ஆகையால் அழத் தொடங்கியது.


என்ன செய்வது என புரியாமல் அனைத்து நண்பர்களும் ஒன்றுகூடி பிரச்சனையை சரி செய்ய முடிவு செய்தன.

ஒருநாள் ஒன்றாகக் கூடி மழை பெய்யுமாறு கடவுளிடம் கேட்டனர். அவ்வாறே மழை பெய்தது. மீண்டும் அனைவரும் மகிழ்ச்சியாக வாழத் தொடங்கினார்கள்.

இந்தக் கதையில் இருந்து நாம் என்ன தெரிஞ்சுக்கிறோம் தெரியுமா? நாம் தூய எண்ணத்துடன் எந்த வேலையையும் செய்யத் தொடங்கினால் அந்த வேலை நிறைவேறும் என்பதேயாகும்.

## மீண்டு எழு


**தமக்கு உறுதியானது
என்றறிருந்து - நெஞ்சில்
நன்னெறியோடு - நற்குணங்களை
பெற்று- நல்லவனாயிருந்து
கீழேயிருந்து மேலே வந்து
முன்னேற்றம் அடைபவன்
மூவுலகையும் ஆள்பவன்
துயர்நிலை வந்தபோது
தளராது உழைத்து
துன்பங்களைக் கடந்து
செல்வம் பல பெற்று
பொறாமையடைவதைத் தவிர்த்து
பொறுமையுடன் செயல்பட்டு
நிதானத்தை நெஞ்சில் நிறுத்து
நேர்மையோடு பணியாற்று
இதுதான் சிறந்த கூற்று**



**ம.குசன்**
**சென்னை**

## வறுமையின் உணர்வு

**வறுமையை விட கொடியது
வாழ்வுதனை வாட்டுவது
நம்பிக்கையுடன் வாழ்வது
காயங்களை எதிர்கொள்வது
வலிகளை வலிமையாக்குவது
அன்பினை வெளிப்படுத்துவது
அறவாழ்வை அனுபவிப்பது
முயற்சியுடன் முன்னெடுப்பது
தளர்வில்லா நடையோடு
நாளும் நீ பழகிடு
தோல்வியை வென்றுவிடு
துன்பங்களை துரத்திடு
வேதனைகளை ஒழித்திடு
உண்மையால் உயர்ந்திடு
நல்லுறவால் உறவாடு
வறுமையழிக்க போராடு**



**ம.லவன்**
**சென்னை**

# மாயக்கம்பளம்



ஒரு ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். பள்ளி விடுமுறையின் காரணமாக பாட்டியின் கிராமத்திற்கு சென்றார் கள். கிராமத்தை சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது ஓய்வெடுக்க லாம் என்று ஒரு மரத்தின் அடியில் அமர்ந்தார்கள்.

அவர்கள் அந்த மரத்தின் அடியில் ஒரு பளபளக்கும் துணியைக் கண்டார்கள். அந்தத் துணியைக் கண்டதும் அதை எடுத்து விரித்து, அதன் மேல் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். திடீ ரென்று அந்த துணி பறக்க ஆரம்பித்தது. அவர்கள் இருவரும் பயந்து ஆ.... என்று கத்தினர். திடீரென்று அந்தத் துணி பேச ஆரம்பித்தது.

“பயப்படாதீர்கள் நண்பர்களே! நான் தான் மாயக்கம்பளம். இப்பொழுது நீங்கள் தான் என்னுடைய எஜமானர்கள்” என்று அந்த மாயக்கம்பளம் கூறியது.

“எஜமானர்களே நீங்க எங்க போகணும்னு ஆசைப்பட்டாலும் நான் உங்களை அங்க கூட்டிட்டு போறேன்” என்று மாயக் கம்பளம் கூறியது. அதைக் கேட்டு அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

பின்பு அவர்கள் கம்பளத்திடம் “கம்பளமே எங்களை ஐஸ்கிரீம் சாக்லேட் நிறைந்த உலகத்திற்கு கூட்டிட்டு போறீங் களா..?” என்று கேட்டனர்.

“கண்டிப்பாக எஜமானர்களே, உங்களைஅங்கேஅழைத்துச்செல்கிறேன்” என்று மாயக்கம்பளம் கூறியது.

கம்பளம் அவர்களை ஐஸ்கிரீம் சாக்லேட் நிறைந்த உலகத்திற்கு கூட்டிச் சென்றது. அங்கு அவர்கள் விரும்பியதை எடுத்துச் சாப்பிட்டு மகிழ்ந்தனர். பின்பு அவர்கள் “கம்பளமே மிகவும் நேரம் ஆகிவிட்டது. எங்களை அம்மா தேடுவார் கள். எங்களை அந்த மரத்தின் அடியில் சென்று விட்டு விடுகிறாயா?” என்று கேட்டனர்.

கம்பளமும் அவர்களை மரத்தடிக்கு அழைத்துச் சென்றது. கம்பளம் அவர் களிடம் “அடுத்த விடுமுறைக்கும் இங்கே வாருங்கள் எஜமானர்களே... மறுபடியும் சாக்லேட் ஐஸ்கிரீம் உலகத்திற்கு உங்களை அழைத்து செல்கிறேன்” என்று கூறியது.அவர்கள் இருவரும் சாக்லேட் ஐஸ்கிரீம் உலகத்தைநினைத்துக்கொண்டே சந்தோச மாக வீட்டிற்கு சென்றனர். இதைப் போன்று நம் அனைவருக்கும் மாயக்கம்பளம் கிடைத்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும் நண்பர்களே...

**ஸ்ரீ. ஸ்ரீஅபிநவ்**



# பூங்காவுக்குப் போலாமா?

ஸ்நிகிதா பூங்காவுக்குப் போலாமா என்று காந்தித் தாத்தா கேட்ட உடன் ரொம்ப மகிழ்ச்சி ஆகிவிட்டது. பொள்ளாச்சியில மகாலிங்கபுரம் பூங்கா. அந்தப் பூங்கா ரொம்பவே பெரிதாக இருக்கும் அங்கே விளையாடுவதற்கு நிறைய இருக்கிறது. அது மட்டும் இல்லாம நிறையப் பேர் அங்கே வாக்கிங் போயிட்டு இருப்பாங்க.

காந்தித் தாத்தா எப்ப ஊர்ல இருந்து வந்தாலும், ஸ்நிகிதாவை அங்கே கூட்டிட்டுப் போவாரு. அவளுக்கு அங்கே எப்பவுமே ஊஞ்சல் விளையாடத்தான் ரொம்ப ஆசை. எப்பவுமே அந்த ஊஞ்சலைச் சுத்தி நிறைய குழந்தைகள் காத்துக்கிட்டு இருப்பாங்க.

அதில் விளையாட நாம் காத்திருக்கதான் வேண்டும். அங்கே வருகிற குழந்தைகள் எல்லாம் காத்திருந்து அதில் ஏறி விளையாடிச் செல்வார்கள். இதுல சந்தோசப்படுறது என்ன அப்படின்னா ஒவ்வொரு குழந்தையும் ஐந்து நிமிடம் மட்டுமே விளையாடிவிட்டு போவாங்க.

எப்பப் போனாலும் அங்கு ஒரு பெரிய கம்பி ஏறுதல் இருக்கும். அதைப் பார்த்தாலே ரொம்ப பயம். எப்பவும் அதுல மட்டும் விளையாடவே மாட்டாள்.

இதைப் பார்த்துக்கிட்டே இருந்த தாத்தா இவளை எப்படியாவது இதுல தைரியமா ஏற வைக்கணும்னு நினைச்சு ஸ்நிகிதாவை அந்தக் கம்பியில ஏத்தி விட்டார்.

முதலில் ரொம்ப பயமா இருக்குனு சொல்லி பிறகு என்ன ஆனாலும் நம்ம தாத்தா பாத்துக்குவாரு அப்படிங்கிற தைரியத்துல கிடுகிடுன்னு மேல ஏறிச் சென்றாள். உடனே நம்ம தாத்தா எப்பவும் புதுசா ஒரு விசயம் செய்வதற்கு நாம பயப்படக்கூடாது, முயற்சி செய்து பார்க்கணும் அப்படின்னு சொன்னாரு. சரிங்க தாத்தா அப்படின்னு சொல்லிட்டு அவன் மூன்று தடவை அதில் ஏறி இறங்கி விட்டாள். நம்ம காந்தித் தாத்தா ஸ்நிகிதாவுக்கு ஒரு பஞ்சு மிட்டாயைப் பரிசாக வாங்கி தந்தார். இருவரும் மகிழ்ச்சியாக வீடு திரும்பினர்.

**கோ.பா. ஸ்நிகிதாஶ்ரீ**






வெளியூரில் அப்பா
உள்ளூரில் பாப்பா
காணொளி வழியாக
அன்பின் பரிமாற்றம்

சு.பிரவந்திகா

இதோ இந்தக் கவிதைதான் நான் முதலில் படித்த ஆழிமணி. பிரவந்திகாவின் முதல் தன்முனை...

அப்போதே நினைத்தேன் இவர் இளங்கவியல்ல... பெருங்கவியென்று...

தன்முனைக் கவிதையின் சிறப்பைப் பாருங்களேன்...

ஆச்சி அன்புச்செல்வி சுப்புராஜூ என்ற பெண்கம்பனைப் பார்த்து பிரவந்திகா எனும் கட்டுத்தறியாய் கவிபாட வைத்திருக்கிறது... அது மட்டுமா? அன்பின் சங்கமம் என்ற சிறுவர் குழுமத்தை ஆரம்பிக்க வைத்து உலகளவில் சிறப்புறவும் வைத்துள்ளது... ஐந்தில் வளைந்தது... இனி ஐம்பது, நூறெனத் தழைக்க என் பிரார்த்தனைகள்...

“சிறுகை முகிழ்த்த அரும்புகள்... பிரவந்திகா அவர்கள் இட்டும் தொட்டும், தமது சிறுகைகளால் படைத்து முகிழ்த்திடச் செய்த தன்முனை அரும்புகள் நமது இதயத்தை வருடுகின்றன” என்கிறார் தமது வாழ்த்துரையில் தன்முனைக்கவித்தந்தை. மதிப்புறு முனைவர். கவிச்சுடர். கா.ந.கல்யாணசுந்தம் அவர்கள்... அக் கூற்றுக்கு ஈடாய் கீழ்க்கண்ட கவிதை பாருங்களேன்...

பூ பறிக்க
நீண்ட கையை மடக்கினேன்
ஒரு பட்டாம்பூச்சி
தேன் வருந்துகிறது
என்ன செய்தாலும்
ஒல்லியாகவே இருக்கிறது
பாப்பா வரைந்த
யானைக் குட்டி

“இந்தக் கவிதையை வாசித்தவுடன் இதழில் மென்முறுவலுடன் அடடா... எவ்வளவு செறிவான உளவியல் இது என வியந்து போவோம்” என்ற மாபெரும் எழுத்தாளுமை திருமதி. சாந்தாதத் அவர்களின் வாழ்த்துரையிலே தெரிகிறது... இவரின் கவிச்சிறப்பு.

“சிறுதுளி பெருவெள்ளம் எனும் பொன் மொழிக்கு இணங்க கவிஞர். பிரவந்திகா, சிறு பிள்ளையாய் உள்ள போதிலும் கவிதையில் பெரு வெள்ளமாய் பாய்ந்து ஆச்சர்யத்தில் ஆழ்த்துகிறார்” என்று,

அன்பைக் கூட்டினேன்
வெறுப்பைக் கழித்தேன்
அறிவைப் பெருக்கினேன்
கணக்கு எளிதானது

கவிதையைக் குறிப்பிட்டு திரைப் படப் பாடலாசிரியர் நிகரன் அவர்கள், கவிஞரின் கவிதைகளை சுடர்விடும் அகல் விளக்குகளாக்குகிறார்.

**நூல் விமர்சனம்**

"Poetess Pravanthika
You are a walking encyclopaedia
May you have many more
Feathers in your cap
In the days to come"

ஆஹா... பன்மொழிப்புலமை முனைவர். வே.புகழேந்தி அவர்களின் வாழ்த்துரை போதுமே...

சில கவிதைகளைப் பார்ப்போம்...

காக்கைக் குருவிகள்
எண்களின் நண்பர்கள்
படங்களில் மட்டும் பார்ப்போமா
அச்சத்துடன் நாங்கள்

இது பாரதியின் அச்சத்தை நியாபகப் படுத்துகிறது அல்லவா...

உடைத்த பொம்மைக்காக
மன்னிப்பு கேட்டேன்
"போடி" என்றான்
நானும் "போடா" என்றேன்

பெண்ணுரிமையை வலியுறுத்தும் கருத்து பொதிந்த கவிதையல்ல இது... எடுத்துக் கொள்ளும் பொருள் தெறிக்கும் இன்றைய பெண்களின் கவிதை என்பதை புரிய வைக்கிறார் அல்லவா?

இணைய வழியில்
ஆசிரியர் பாடம் நடத்துகிறார்
இமோஜி போட்டு
விளையாடுகிறார்கள்
என் நண்பர்கள்

இதுதான் இன்றைய இணைய வழிக் கல்வியின் இம்சை என்பதை சொல்லாமல் சொல்கிறார் பாருங்களேன்.

தமிழில் பேச
விடுவதாலே பிடிக்கிறது
தமிழம்மா எடுக்கும்
வகுப்பு

இது தாய்மொழிக்கல்வியின் அவசியத்திற்கு...

வாசலிலுள்ள கரும்பலகையில்
வாசிப்போர் கூட்டம்
நாள் தோறும் மனப்பாடம்
ஆகிறது திருக்குறள்

இது காலத்தின் கட்டாயமாய்...

இப்படி செப்படியாய் புத்தகம் முழுவதும் தன்முனைத்தோரணங்கள்... படிக்கப் படிக்க மனம் அலங்கரிக்கப்படுகிறது.

பிரவந்திகாவின் சிறுகை
முகிழ்த்த அரும்புகள்
நாமறியா வேருலகை
நம்கண்முன்னே சமைக்கின்றன

இப்படித்தான் எழுத வைத்துள்ளது நூல் வாசிப்பு...

"சிறுவர்கள் இத்தகு புத்தகங்களை வாங்கிப் படிக்க வேண்டும். பெற்றோர்கள் தவறாமல் இப்புத்தகம் வாங்கி தங்கள் குழந்தைகளை படிக்க கொடுக்க இளம்கவி.பிரவந்திகாவுக்கு ஊக்கமாக அமையும்" என்ற கவிச்சுடர் அய்யாவின் வார்த்தைகள் வழியாகவே இப்புத்தகத்தை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவேன் என்பதே என் நம்பிக்கை... வாருங்கள், நீங்களும் அவ்வாறே செய்யலாமே!

நூல் தொடர்புக்கு,

விலை : ரூ.70


அன்பின் சங்கமம்
251 5வது குறுக்குத்தெரு,மார்டன் சிட்டி,
பட்டாபிராம், சென்னை - 600772


9841978029
Anbinsangamam2021@gmail.com

வணக்கங்களுடன்,
**ராஜூ ஆரோக்கியசாமி**





S.Ragul. Std: 12A1
s/o Sasidharan K B
Pondichery















# நாங்கள் கன்யாகுமரி ஜவான்கள் பாடல்

பல்லவி

நாங்கள் கன்யாகுமரி ஜவான்கள்
தாயகம் காக்கும் மகான்கள்
விந்தியபனிமலை சிகரங்கள் எங்கள்
வீரத்தைக் கூறும் சின்னங்கள்

சரணம் - 1

தேசம் உயிர்மூச்சு எங்கள்
தேகம் அமராச்சு
வீரங்கண்டு தூரம்ஓடும்
எதிரியின் படைதோற்று
தோளில் துப்பாக்கி ரெண்டு
காலும் முன்னோக்கி
போகும் போது புயலும் திசை
மாறும் பின்னோக்கி

பிறருக்கு செய்யும் உதவிகள் தானே
பிறவியின் பெருஞ்சொத்து
இயன்றதை செய்யும் லட்சியம் எங்கள்
இதயத்தின் நீரூற்று

உறவுக்கு பாலம் எங்களின் பாதம்
ஊரெங்கும் பாடும் சுவடுகள் ராகம்
கலங்கரைபோலே களப்பணியாற்றி
காலத்தை வெல்லும் காவலர் நாங்கள்

நாங்கள் கன்யாகுமரி ஜவான்கள்
தாயகம் காக்கும் மகான்கள்
விந்தியபனிமலை சிகரங்கள் எங்கள்
வீரத்தைக் கூறும் சின்னங்கள்

சரணம் - 2

கடமை கண்ணாச்சு எல்லை
காக்கும் பணியாச்சு
நாடும் வீடும் ஊரும் உறவும்
பேணும் பொறுப்பாச்சு
காடும் மலை கடலும்
சுடும் பாலை மணல் வெளியும்
காவல் தெய்வம் எங்களை கண்டு
வணங்கும் தினந்தோறும்

முக்கடலே எங்கள் முகவரி கூறும்
மூவண்ணக்கொடியில் பூவுடல் மூடும்
நற்பணியில் இரத்த நாளங்கள் ஓடும்
நானிலம் எங்கள் புகழினைப் பாடும்

சீரிய சிந்தையும் வீரிய செயலும்
நாளைய தலைக்கு உரமாகும்
சேனையில் சேர்ந்து சேவகம் செய்யும்
பாக்கியம் இறைவனின் வரமாகும்

நாங்கள் கன்யாகுமரி ஜவான்கள்
தாயகம் காக்கும் மகான்கள்
விந்தியபனிமலை சிகரங்கள் எங்கள்
வீரத்தைக் கூறும் சின்னங்கள்

கவிஞர் நாஞ்சில்ராஜன்

நேரிசை வெண்பா

வெண்பாப் பயணம் 15

# நோயும் உணவும்

ஈதினிப்பு வேண்டா! இதுகொழுப்பு வேண்டாவே!
ஊதியவூன் போதும் உணவென்றே! ஏதிலிபோல்
ஏதோ ஒருகூழை ஏந்திக் குடிக்கின்றேன்!
நாதானே என்றன் நமன்!

**சுந்தர ராசன்**

.

நல்லி எலும்பொடித்து நானுமன்று மாவரைத்த
பல்லுறுதி இன்றில்லை பார்த்தீரோ? – மெல்லும்
பருப்பால் விரிசலுறப் பல்டாக்டர் சொன்னார்
“நெருங்காது வல்லுணவை நில்”

**விசு. இம்மானுவேல், பெங்களூரு**

.

வேண்டுவன உண்பேன் வெளியில் நடைபழகி
நீண்டதோர் ஆயுள் நினைத்திருப்பேன் - தாண்டிக்
குதித்தபடி தக்கக் குறிப்பாய்ப் பயிற்சி
விதிப்படி செய்வேன் வியர்த்து.

**ஃபக்ருதீன் இப்னு ஹம்துன்**

சிக்கனும் மீனும் சிலநேரம் மட்டனும்
விக்காமல் உண்பேன் விரும்பியே - சிக்கலென
பக்கத் துணையாய்ப் பலவித நோய்வந்து
நிக்கவும் நாதியற்றேன் நான்.

**கோவை லிங்கா**

.

மாத்திரை வேண்டாம் மதுநிறை தீண்டாதே
பூத்திடும் நோயண்டா போய்விடும் - சூத்திரம்
ஆத்திரம் புத்தியில் ஐயய்யோ கண்மறைத்தால்
கூத்தாடும் நோயே குரு

**மன்னை மணிமாறன்**

.

சின்ன வயதுமுதல் சீண்டா பலவற்றை
நன்றே உடல்சுருக்கி நான்நடந்தேன் - இன்றளவும்
ஒண்டாது நோயதுவாம் வாழ்கிறேன் பைத்தேழில்
மண்ணிலே உள்ளேன் மகிழ்ந்து

**கவிக்கோலம் கிருஷ்ணமூர்த்தி**

.

கண்டதை தின்றாலும் காயத்துள் நோயில்லை
உண்மை முதலில் உணர்ந்திடுவோம்..உண்பது
மண்ணில் விளைந்த மகிமையான தாகட்டும்
பண்டை ய;முறையைப் பற்று..

**மைதிலி தயாளன்**

.

வாயை அடக்காமல் வச்சுள்ளே தள்ளுபவர்
நோயாளி ஆனபின் நோகின்றார் - நாயைப்போல்
அங்கிங் கெனாதபடி ஆனவரை ஓடிவிட்டு
தங்கிடுவார் பாவம் தனித்து!

**செ. இராசா**

.

வாய்கட் டெனத்தாய் வளர்கின்ற போதுரைத்தும்
போய்உண்டேன் நோய்வந்து பொன்றிடவே - வாய்த்திட்ட
செல்வம் இருந்தென்ன செப்பும் இனிப்புப்பே
இல்லா உணவான தின்று !

**பாவலர் கருமலைத்தமிழாழன்,**

.

நொறுங்கிடத் திண்ணாது நோன்புமின்றி யாதும்
மறுக்காமல் உண்டு மகிழ்ந்து - பெறுவதென்ன?
நோயண்டி வாழ்க்கையின் நோக்குக் குலைந்திட
தேயக்காண் தேகத் தெளிவு.

**வானதி சந்திரசேகரன்**

.

கண்டதும் திண்டு களிப்பாய்ப் புகைவிட்டுக்
கொண்டிட நேர்ந்த கொடுவலியில் - நண்ணிய
செல்வமும் நாளுக்கு நாள்குன்றி நான்படும்
அல்லலில் ஆறுதல் இல்.

**செபா சவிரிமுத்து**

.
சத்தமின்றிச் சாடிவரும் சர்க்கரை நோய்,கொழுப்பு
நித்தம் சளி,இருமல் நோகவைக்கும் பித்தமெனக்
கொல்லவரும் ரத்தக் கொதிப்(பு)இதய நோவென்று
பொல்லாநோய்ப் பட்டியல் பார்!

**இரா. பாஸ்கரன், சிவகங்கை.**

.
வாயையுங் கட்டி வயித்தையுங் கட்டினார்
நோயையுங் கட்டி நிலைப்பாரே - மாயையாம்
ஊண்ருசிக்குப் பின்னே ஒளிந்ததால் நோய்பற்றத்
தான்கெட்டு நின்றேன் தவித்து.

**க. சங்கரபாண்டியன்**

.
உப்பும், இனிப்பும், உறைப்பும்,புளிப்புமிவை
தப்பென்று சொல்லித் தவிர்த்துவிட்டால் - ஒப்பிமனம்
உண்ண எதுவுண்(டு)?உரைப்பீர் மருத்துவரே,
மண்ணள்ளித் தின்பதோ வாழ்வு?

**தில்லைவேந்தன்**

.
எண்ணெய்ப் பலகாரம் எண்ணத்தைத் தூண்டுதே
வண்ண மயமாய் வடிவழகில் - மின்னுதே
போய்உண்டால் சந்தோசம் பொங்குமெனத் தோன்றினால்
நோய்வந்தால் நாளுமே நோன்பு

**சு. யோ. முத்தமிழ்ச்செல்வி**, நத்தம்

.
தித்திப்பும் என்றாலே தின்பதற்கு ஆசைதாமே
எத்திக்கும் காணும் இனிப்பெனக்குப்_பத்திக்கும்
என்னசெய்ய சர்க்கரை இப்பிணிதாம் எல்லோரை
தின்கிறதே என்றும் தினம்.

**வா. சண்முகம்**

.

நீர்.... ரழிவு நோயினால் நீண்ட.. பிரஷரால்
வேர்வையும் சொட்ட விழிபிதுங்கி.. ஆர்டரில்
நின்றேன்! அவஸ்தையால் நிம்மதி யின்றியே
துன்பத்தால் நானும் துவண்டு.

**மாலதி திரு.**

உப்பைக் குறைத்தே உடற்பயிற்சி செய்யெனத்
தப்பாமல் சொன்னாளே தாயவள் - மப்புடன்
கேளாது வாதிட்டேன் கேடென வந்ததே
மாளாது தின்னும் மருந்து.

**ஓசூர் மணிமேகலை**

.

தின்பனத் தின்றடுத்துத் தின்பனத் தின்றலைந்து
நன்றாக்கை நோய்புக நானயர்ந்தேன் - இன்றினிய
ஊண்மறுத்துக் கைப்புடன் உப்பிலாக் கார்ப்பற்ற
ஊண்ஏற்றுக் காத்தேன்என் ஊன்.

**இதயம் விஜய்**

.

பலதோசம் போகும் பரிகாரம் செய்தால் ;
சிலதோசம் நிற்கும் சிறையாய்; ~ ஜலதோசம்
என்னுடனே என்றும் இணைந்திருக்கும் மாற்றுவழி
இன்றுவரை காணேன் இளைத்து...!

**ஜ. க. நாகப்பன்**

.

நாலடி மண்மேல் நடந்தாலே மூச்சிரைப்பு
கேளடிபெண் ணேகொழுப்பாம்! கேட்டதும் – நாலடி
தள்ளிநில் என்றேன் தயங்கா தினிப்புகளை
அள்ளிநான் தின்றதெல்லாம் அன்று

**செல்லமுத்து பெரியசாமி.**

.

இனிப்புட னுப்பு மினிமேலும் வேண்டாம்
கனிச்சுவைக்கும் முக்கனியைக் காணுந் - தனிச்சுகமும்
இல்லையினி யேங்கு மிதய மறிவீரோ
மெல்லமெல்ல நோயின் மிரட்டு .

**சரஸ்வதி பாஸ்கரன்**

.

நோயில் விழுவதா? பாயில் படுப்பதா ?
ஆயுளுக்கும் ஆகாதென் றேனேஆம் - வாயுப்
பிடிப்பாலே வாழ்க்கைப் பிடிப்பின்றிப் போக
நொடிமுள் வளருதே நீண்டு

**ஞால ரவிச்சந்திரன்**

.

அறிந்தேன் வகையாய் அடிமையானேன் நாவில்
செறியாமை நோவுடன் சேர்ந்தே - அறியா
வெறியாக பண்டத்தின் வேடிக்கை காண
அறிவிலி தானோநீ ஆற்று

**பாண்டிச்செல்வி கருப்பசாமி,** கோவை

.

காலத்தே உண்ணாமல் காலங் கழித்துண்ணல்
கோலத்தைப் போக்கும் கொடிதாகும் - ஞாலத்தில்
பொல்லா மருந்துண்ணும் போக்கே உருவாகும்
நல்ல வழிமுறையே நாடு.

**படைக்களப் பாவலர் துரைமூர்த்தி**

.

நிறைவுடன் நாளும் நினைத்ததை யுண்டால்
குறைவின்றி நன்நலமும் கூடும்! இறையாய்
இயற்கை அளித்திடும் இன்னமுதைப் பற்றப்
பயந்தோடும் நோயென்றும் பார்!

**நிறைமதி நீலமேகம்**, பெண்ணாடம்.

.

இனிப்புமினி உப்பும் இயல்பாய்க் குறைத்துக்
கனிகளைச் சேர்த்தால் கசியும் - இனிமை
பிடித்த உணவால் பிசையுமே நோயும்
வடிக்கும் கதைகள் பல

**திலகவதி பாஸ்கர்**

.

உடல்நலமோ நன்றெனினும் உண்ண உணவோ
கடைவாய்க்குப் போதாத காலம் - உடலோ
நலிவுற்று நாளும் நொடித்திருக்க வைப்பர்
பலகாரம் தட்டில் படைத்து .

**கவிஞர். அ. முத்துசாமி தாரமங்கலம்**

.

நாற்பதைத் தொட்டதும் நாவை அடக்கணுமாம்!
ஊற்றுபோல் உண்ணுமாசை உள்ளிருக்க - ஏற்பதா?
வாய்க்கு விலங்கிட்டு வாழாமல் தின்றிடலாம்,
நோய்க்கு மருந்துண்டு நூறு!

**பாவலர் அருணா செல்வம்**

.

கொழுப்புப் பிடித்தவன் கோபப் படுவான்
அழுத்தம் அதிகம் அவனுக்(கு) - இழுத்தெவரும்
என்னை ஒருபோதும் இப்படிச் சொன்னதில்லை
என்னென்பேன் எல்லாம் இருக்கு

**இரா அழகர்சாமி**

.

அகவை அறுபதென ஆன தெனக்கு
சுகத்தில் துளியாய்ச் சுணக்கம் - இகத்தில்
அகங்கொல் பிணிகள் அதிகம் பரவ
புகலிடம் ஆண்டவன்தாள் புக்கு.

**கு. கமலசரஸ்வதி**

.

சக்கரைநோய், சார்கொதிப்பும், சீரில்லாச் சேர்கொழுப்பும்,
எக்கரைநான் சென்றாலும் ஏதம்தான் - அக்கறையாய்
என்னவளும் என்னருகில் எப்போழ்தும் என்பதினால்
இன்னு முளதென் உயிர்.

**முனைவர். சுந்தரராஜ் தயாளன்**, பெங்களூர்.

.

இனிப்பென்றால் ஈயென ஈர்த்திடு மென்றன்
நுனிநாக்கில் ஊறும் உமிழ்நீர் - இனிவேண்டாம்
எப்போதும் ஏங்கியநான் இப்போதோ ஓடுகிறேன்
உப்பிய தொந்தியை ஓர்ந்து

**கவிதா சீனிவாசன்**

.

வகைவகையாய்ப் பட்சணங்கள் வாங்கியுண்டு வாழின்,
திகைத்திட நோய்கள் தினமும் - மிகைக்கும்.
மிகையுணவு மென்றிட மேனி கொழுத்தே,
தகையிழக்கும் நாளும் தவிர்!

**கிண்ணியா சபீனா**

.

கண்துஞ்சும் வேளையிலும் காத்திடுவாய் மெய்ந்நலமே
உண்டதுமே தூக்கமதை ஏற்றிடாதே - கண்டபல
கேடான சிற்றுணவு பெற்றுண்டு வாழ்ந்திருந்து
ஓடானாய் நோய்பெற்று உழன்று.

**மணிக்கூ கவி செய்னுலாப்தீன் நஸீரா.**

.

மருந்தை உணவாக மாற்றிய மாந்தர்
இருந்தென்ன போயென்ன என்றும் விருந்தும்
கசந்திடும் வேண்டாக் கசப்பினால் நெஞ்சில்
*பசந்து நிலைக்குமா பார்.

**கவித்தென்றல் சௌ. நாகநாதன்**

*பசந்து - நேர்த்தி

.

**வெண்பாப் பயணம் 15 ல் கலந்து சிறப்பித்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. வாழ்த்துகள் கவிஞர்களே...**

# வெண்பா போட்டி (பயணம்) 16

**போட்டியின் கால அளவு - சனவரி - 21 முதல் பிப்ரவரி 05 வரை**

**முழுமையாகப் படிக்கவும். இம்மாதம் ஒரு சுவாரஸ்யமான போட்டி...**

**இம்மாதப் போட்டியின் விதிகள்...**

அவசரம் என கேட்டவர்க்கு குறிப்பிட்ட தொகையைக் கடனாகத் தந்துவிட்டீர் ... நீண்ட நாள் கழித்தும் அவர் பணத்தைத் தராத காரணத்தால்... நேராக அவரின் வீட்டு வாசலில் நின்று கொண்டு... உள்ளே போய்ப் பணத்தைக் கொண்டுவா என்று... அவரிடம் மனச்சலிப்போடு கொடுத்த பணத்தை எப்படி கேட்பீர்கள் என்பதை ஒரே வெண்பாவில் சொல்லலாம்.... அல்லது... மிரட்டிக் கேட்பதாகப் பாடல் அமைத்தாலும் அமைக்கலாம்...எவ்வளவு பணம் என்பதை உங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளலாம்.....

**பொதுவான விதிகள் : -**

நேரிசை வெண்பா மட்டுமே எழுதவேண்டும், பல வெண்பாக்கள் எழுதினாலும் அதில் ஒன்று மட்டுமே தேர்வு செய்யப் படும், முடிந்த அளவு ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம்.

**இதோ (எ-கா) பாடல் : -**

**பத்தா யிரத்த பலதடவ கேட்டுட்டேன்**
**எத்தனநாள் இன்னும் இழுக்கடிப்ப...? - செத்த... நீ**
**எங்கள் நிலமையும் யோசிச்சிக் கொண்டுவா**
**பொங்கல் செலவிருக்கு போ....**

**அசத்துங்கள் கவிஞர்களே....**

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே...அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.

**காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்...**

**தளர்வுகள் : -** தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால்புரியும்படிஇயல்பானவார்த்தைகளோ,அல்லதுவட்டாரவழக்குச்சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

**என்றும் தமிழுடன்...**

**தமிழ்நெஞ்சம் அமின் மற்றும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு.**

பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
பிப்ரவரி 2023

# மனிதன் மாறிவிட்டான்

ஆதிமனிதன் அகிலம் வந்தான்
அன்பும், பண்பும் அறியா நிலையில்
உடையும் இல்லை, மொழியும் இல்லை
உலகம் வளர்த்து, உண்மை அறிந்தான்
ஆசை, பசியென அனைத்தும் உணர
உழைப்பும், ஊக்கமும் இணைந்தே இருந்தான்
பண்டங்கள் மாற்றியே தேவையை நிறைத்தான்
பேராசை பெருகிடப் படைத்தான் பணத்தினை
பணத்தினை அடைந்திட மரத்தினை அழித்தான்
இயற்கை வளங்களைச் சுரண்டியே வாழ்ந்தான்
காடுகள் அழிவதால் பிறவுயிர் துடித்தது
பறவைகள் கூடின்றி தவித்துப் பறந்தன
உயிரற்ற கட்டிடம் பல்கிப் பெருகின
நாகரீகம் மாறிட நற்பண்புகள் மறையுதே
விழித்திடு மனிதா! மாற்றிடு உலகை
வளங்களைப் பெருக்கியே மனிதம் விதைப்போம்!!

நாகலெட்சுமி இராஜகோபாலன்